67

சக்தி

மாத வெளியீடு

67

2573

10-3

தாரண ௵
ஆனி ௴

-/8



கதைகள்

அவள் படம்
ஏமாற்றம்
தண்டராஜா
ஏழைத் தம்பதிகள்
யானைத் திருட்டு
பொய்யன்

கட்டுரைகள்

விஞ்ஞானம்-உதவுமா?
குழந்தை வளர்ப்பு
பித்தனே புத்திமான்
மனித தெய்வங்கள்
ரகஸ்ய ஆயுதம்

வரலாறு

ஆசார்ய ரே

பாடல்கள்

பெரிசும் சிறிசும்
தமிழ்க் கொடி

குறிப்புகள்

வழி பிறக்குமா?
விபரீத உத்தரவு
புத்தக உலகம்

புதிய சீனா

ஜெ. சாமிநாத சர்மா எழுதியது

ஜப்பானின் துரோகம், சீனாவில் ஐரோப்பியர் புரிந்த திருவிளையாடல்கள், முடியரசு வீழ்ந்து குடியரசு ஏற்பட்ட வரலாறு முதலிய யாவற்றையும் இந்நூல் விபரமாகக் கூறுகிறது - சீனாவைப் பற்றிய எல்லா விவரங்களுக்கும் இது ஒரு ஆதாரபூர்வமான நூல்

விலை ரூ. 6-8-0

தபாற் செலவு வேறு

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை, சென்னை

கலைவாணிக்கு ஸ்ரீமதி என்.ஸி. வஸந்தகோகிலத்தின் கீதாஞ்சலி

முன்வெளியீடு

N. 18206
ஞானகுருபர
பல்லவி & ராகமாலிகை

N. 18207
இந்த வரம் கரஹரப்ரியா
உதயசூந்தரி விருத்தம்

N. 18217
குழலோசை
ஆசைகொண்டேன்

N. 18219
ஆனந்த நடனம்
2 பாகங்கள் காம்போதி

N. 18229
ஆர்வத்தீயால்
விருத்தம் 2 பாகங்கள்
(ஸ்வாமி சுத்தானந்த பாரதி)
ராகமாலிகை

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சிறந்த சங்கீதம் ★ சீரிய ஒலிப்பதிவு

யுத்த காலத்தில் மிகச் சிறந்த முதலீடு

முன் யோசனையுள்ள ஒவ்வொருவரும் பணத்தை இன்று சிறுகச் சிறுகவாவது சேமிக்கிறார்கள். இப்படிச் சேர்த்து வைத்த பணத்தை முதலீடாகப் போட்டு வைக்க விரும்புவது இயற்கையே. இச் சமயத்தில் தான் விஷயந் தெரியாதவர்களுக்கு, தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் முதலியவற்றில் முதலிடக் கூடாதென்று எச்சரிக்கை செய்யவேண்டும். ஏன்? விலைவாசிகள் இறங்கிக் கொண்டே வருகின்றன. இன்றைய விலையில் வாங்கினால் வெகு சீக்கிரத்தில் நஷ்டமடைய **நேர்ந்தாலும் நேரலாம்**, எப்படியும் யுத்தத்திற்குப் பிறகு நஷ்டமடைவது **நிச்சயம்.**

உங்கள் சேமிப்பைக் கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்குவதுதான் மிகச் சிறந்த முதலீடு என்பதில் சந்தேகமே வேண்டாம். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு, அதற்கு உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15. இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம். நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் மதிப்பு குறையவே குறையாது. மேலும் முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு, எப்பொழுது வேண்டுமானாலும் அவற்றைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பைக் கொண்டு

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள். பணம், பத்திரமென்ற உறுதியுண்டு.

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் - ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸ்ஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவு செய்துகொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்துவிட்டாலும் சரி தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

சேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

C. P. U. 414.

வருகிறது!
M.U.A.C.'S
மானசம்ரக்ஷணம்
டைரக்ஷன் — K. சுப்ரமணியம், B.A., B.L., & C.S.V. அய்யர்
S.D. சுப்புலக்ஷ்மி
காளி N. ரத்னம்
T.R. ராமச்சந்திரன்
C.T. ராஜகாந்தம்
S.I.P
ரிலீஸ்
PUBLICITIES

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

தாரண
மலர் 10

சக்தி

ஆனி
இதழ் 3

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

வழி பிறக்குமா ?

"என் கடிதத்தை வெளியிடுங்கள்" என்று காந்திஜி கேட்டுக்கொண்டதற்கு, "உம்முடைய பிரசார ஏஜெண்டா யிருக்க, சர்க்கார் தயாரில்லை" என்று மிடுக்காய்ப் பதிலளித்தார் டாட்டன்ஹாம். அதே சர்க்கார் இப்போது, காந்திஜிக்கும் தங்களுக்கும் 1942 ஆகஸ்டிலிருந்து, 1944 ஏப்பிரல் வரையில் நடந்த பல கடிதப் போக்கு வரத்துக்களை, 126-பக்கங்கள் கொண்ட பிரசுரமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரசுரம் சம்பூர்ண மான தல்ல. அன்னை கஸ்தூரி பாய் சம்பந்தமான, ரத்தக் கண்ணீர் வடிக்கத் தக்க, காந்தி-சர்க்கார் கடிதப் போக்கு வரத்துக்கள் அதில் இல்லை. ஜப்பானியர் இந்தியாவுக்குள் புகுந்தால், ஜனங்கள் எப்படி அவர்களை எதிர்க்க வேண்டு மென்று விளக்கி, மகாத்மாஜி பல அற்புதமான யோசனைகள் கூறியிருந்தார். அவற்றை விவரித்து, வைஸிராய்க்கு மீரா ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தை வெளியிட வேண்டு மென்று மகாத்மா கேட்டுக்கொண்ட கடிதமும், அதை மறுத்த சர்க்காரின் கடிதமும், இந்தச் சர்க்கார் பிரசுரத்தில் இருக்கின்றன. ஆனால், மீராவின் கடிதம் மட்டில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஏன் இவை மாத்திரம் விட்டுவிடப்பட்டனவோ தெரியவில்லை. எல்லாக் கடிதங்களையும் சர்க்கார் வெளியிட்டிருக்க வேண்டியது தான் முறை. ஏனோ அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

கடிதப் போக்கு வரத்துக்கள் மிக ஏராளமா யிருப்பதால், விரிவாக ஆராய்வது சாத்தியமல்ல. காந்திஜியின் கடிதங்கள் முக்கியமான சில அம்சங்களைத் தெளிவு செய்கின்றன:

(1) காந்திஜியும் காங்கிரஸும் ஜப்பானியருக்கு ஆதரவு காட்டவில்லை.

(2) அதிகாரத்தைத் தன்னிடமே கொடுத்துவிட வேண்டு மென்று காங்கிரஸ் கேட்கவில்லை. இந்திய மக்கள் பூராவுக்குமே சுதந்தரம் அளிக்கப்பட வேண்டு மென்று தான் கேட்கிறது.

(3) 'இந்தியாவை விட்டுப்போ' என்று காங்கிரஸ் சொன்னதற்கு அர்த்தம், தனிப்பட்ட பிரிட்டிஷ்காரரோ, அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புக்களோ இந்தியாவை விட்டு ஓடிப்போக வேண்டும் என்பதல்ல; இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிறுத்திவிட்டு, ராஜ்யாதிகாரத்தை இந்தியரிடமே ஒப்படைத்துவிட வேண்டு மென்பதே யாகும்.

(4) ஆகஸ்டுக் கலவரங்களுக்குக் காங்கிரஸோ, காந்தியோ பொறுப்பல்ல; காங்கிரஸ் இயக்கம் எப்படி ஆரம்பிக்கப் போகிறது என்று தெரியுமுன்பே, தலைவர்களைக் கைதுசெய்து, ஜனங்களின் ஆத்திரத்தைக் கிளப்பியதால், அந்தக் கலவரங்களுக்குச் சர்க்காரே பொறுப்பாளி. மீண்டும் மீண்டும் காங்கிரஸ்மீதே அக் குற்றத்தைச் சர்க்கார் சாட்டுவதானால், மத்தியஸ்தமான ஒரு நியாய சபையின் விசாரணைக்கு அதை விடுவதே தர்மமாகும். சர்க்காரே பழிகூறி, சர்க்காரே தீர்ப்பும் கூறுவது முறையல்ல.

(5) பின் நிகழ்ச்சிகளை நோக்கிக் காங்கிரஸ் தீர்மானம் புனராலோசனைசெய்யப்படவேண்டுமென்றால்,

தீர்மானத்தை மாற்ற மகாத்மாவுக்குத் தனிப்பட்டு அதிகாரம் கிடையாது. காங்கிரஸ் காரியக் கமிட்டியாரே மாற்றவேண்டும். அப்படியானல், அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து அவர்கள் கூடுவதற்கு இடமளிக்க வேண்டும்.

மகாத்மாவின் கடிதங்களில் இந்த அம்சங்கள் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வளவு சொல்லியும், சர்க்கார் தங்கள் பழய பல்லவியையே திரும்பத் திரும்பத் தங்கள் பதில்களில் பாடியிருக்கிருர்கள்.

(1) காந்திஜியோ, காங்கிரஸோ ஜப்பானியருக்கு ஆதரவுடையவர்கள் என்று சர்க்கார் ஒரு போதும் சொல்லவில்லையாம்; காந்திஜி 'தோல்வி மனப்பான்மை கொண்டவர்' என்றுதான் சர்க்கார் சொல்லுகிருர்களாம். இதற்கு என்ன அர்த்தம் என்று ஆண்டவனுக்குத்தான் தெரியும். பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவங்கள், எப்படிச் சிங்கப்பூரையும் பர்மாவையும் விட்டு வந்தனவோ அதே மாதிரி, ராணுவத் தந்திரங்களை உத்தேசித்து இந்தியாவையும் விட்டுச் செல்ல நேருமாயின், இந்தியரே இந்தியாவைத் தற்காத்துக் கொள்ள வேண்டும், அவர்கள் ஓட இடம் கிடையாது என்று காந்திஜி சொன்னல், அதையா தோல்வி மனப்பான்மை என்பது?

(2) அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதா யிருந்தால் அல்லவா, யாரிடம் அதைக் கொடுப்பது என்று பிரிட்டன் கவலைப்பட வேண்டும்? அந்த உத்தேசமே பிரிட்டனுக்கு இருப்பதாய்த் தெரியவில்லை. ஆகையால், சர்க்காரின் பதில்கள் அந்த விஷயத்தில் மௌனம் சாதிக்கின்றன.

(3) 'இந்தியாவை விட்டுப் போ' என்ற இயக்கத்துக்கு, காந்திஜி சொல்லும் அர்த்தத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. "நீர் அப்படிச் சொன்னீர்; இப்படிச் சொன்னீர்" என்று குதர்க்கம் செய்கிருர்கள். இயக்க கர்த்தா, இன்னதுதான் தமது இயக்கத்தின் கோஷத்துக்கு அர்த்தம் என்று திட்டமாகச் சொல்லிய பிறகும், வீண் வாதம் செய்வது எந்த நியாயத்துக்கும் பொருந்தாது.

(4) ஆகஸ்டுக் கலவரங்களுக்கு மகாத்மாவும் காங்கிரஸுமே பொறுப்பாளி என்ற கட்சியைச் சர்க்கார் மீண்டும் வற்புறுத்துகிருர்களே யொழிய, பாரபட்சமற்ற பஞ்சாயத்தின் தீர்ப்புக்கு அதை விட இசையவில்லை.

(5) காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தனித் தனியே மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலொழிய, அவர்களை விடுவித்து, ஒன்றுகூடி ஆலோசிப்பதற்கு இடமளிக்க, சர்க்கார் தயாரா யிருக்கும் அடையாளமே காணும்.

இவைதான் காந்தி - சர்க்கார் கடிதப் போக்கு வரத்துக்களால் தெளிவுபட்டிருக்கும் விஷயங்கள்.

காந்தியின் விடுதலைக்குப் பின்னும், காந்தி - வைஸிராய் கடிதப் போக்கு வரத்து ஒன்று நடந்திருக்கிறது. காந்திஜி காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களைச் சந்திக்கவோ, தம்மை வந்து கண்டு பேசவோ, வைஸிராய் சம்மதிக்காமல், இன்னும் பிடிவாதமாகவே யிருக்கிருர். காங்கிரஸின் 'ஆகஸ்டுத் தீர்மானம் அமுலிலிருக்கும் வரையில் காங்கிரஸும் காந்தியும் சர்க்காருக்குத் தீண்டத் தகாதவர்களாகவேயிருப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது. தாம் கைதுசெய்யப்பட்டதால், தமக்கு ஆகஸ்டுத் தீர்மானத்தால் கிடைத்த அதிகாரம் இல்லையென்று, உத்தமன் காந்தி கூறுகிருர். "உங்களுக்குப் பூர்ணகுணம் ஏற்பட்டபின், வேறு புதிய திட்டத்தைத் தெரிவிக்கக் கூடுமானல் தெரிவியுங்கள்" என்கிருர் வேவல். இரு தரப்பிலும் ராஜி மனேபாவம் இருப்பதற்கு இவைகளை அடையாளங்களாய்க் கொள்ளலாமா? அல்லது மகாத்மாஜி மீண்டும் சிறைக்குத்தான் சென்று விடுவாரா? அப்படி நிகழுமானல், இந்திய-பிரிட்டிஷ் மனக் கசப்புத் தீர விமோசன மார்க்கமேயில்லாது போகும் என்றுதான் நாம் அஞ்சுகிருேம். இப்போதாவது, பிரிட்டன் மனம் திரும்புமானல், வழி பிறக்கக்கூடும். பிறக்குமா?

✲

விபரீத உத்தரவு

காகிதக் கட்டுப்பாடு சம்பந்தமாக, இந்திய சர்க்கார் திடீரென்று ஒரு விபரீத உத்தரவு பிறப்பித் திருக்கிறார்கள். 1. சகல அச்சுக்கூடங்கள், 2. சகல பிரசுராலயங்கள், 3. செய்தித் தாள் என்ற ரப் காகிதம் உபயோகிக்காத சகல பத்திரிகைகள் — இந்த மூன்று தொழில்களிலும் உள்ளவர்களை, அந்த உத்திரவு அடியோடு பாதிப்பதாகும்.

உத்திரவின் தனித் தனியான ஒவ்வொரு ஷரத்துமே, குறிப்பிட்ட தொழில்களுக்கு நெருக்கடி உண்டு பண்ணுவதா யிருக்கிறது. பூரா ஷரத்துக்களையும் ஆராய்ந்து, அவற்றால் உண்டாகக் கூடிய கஷ்டங்களை யெல்லாம் இங்கே விவரிக்கத் தேவையில்லை. புதிய உத்தரவின் மிக முக்கியமான அம்சத்தை மட்டில் கவனித்தால் போதும்.

செய்தித்தாள் அல்லாத இதர காகிதங்களை உபயோகிக்கும் சகல விதமான பிரசுரகர்த்தர்களும், தாங்கள் இதுவரை உபயோகித்துவந்த காகித அளவில் முப்பது சத விகிதம் தான் இனிமேல் உபயோகிக்க வேண்டும் என்பதே புதிய உத்திரவின் அடிப்படையான நிபந்தனை. அப்படியானால் புதிய புத்தகங்களையும் உயர்ந்த முறையில் நடத்தப்படும் இலக்கியப் பத்திரிகைகளையும் பிரசுரிப்பவர்கள், பெரும் கஷ்டத்துக் குள்ளாவார்கள். ஏறக்குறைய அவர்கள் தொழிலை நடத்துவதைவிட நடத்தாதிருப்பதே மேல் என்ற நிலைமையே இந்த உத்திரவால் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னாலும் மிகையாகாது. ஆகையால், ‘அறிவுக்கு இருட்டடிப்பு’ என்று தான் இந்த உத்தரவை வர்ணிக்கத் தோன்றுகிறது.

முதலில் புத்தகங்களை எடுத்துக் கொள்ளலாம். தமிழ் நாட்டில் இப்போதுதான், கொஞ்சம் கொஞ்சம் புதிது புதிதாக நல்ல புத்தகங்கள் வெளிவர ஆரம்பித் திருக்கின்றன. பெரும்பாலான நல்ல் புத்தகங்கள், ஐந்நூறு முதல் ஆயிரத்துக்கு மேல் விற்பதில்லை. ஆனால், தமிழ் நாட்டில் இன்று புத்தகப் பிரசுரத் தொழில் எந்த நிலையில் நடக்கிறது? காகித விலை, சாதாரணமாகவே, பெரிதும் ஏறியிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காவது இன்று ஊதியம் அளிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால், ஏற்கெனவே புத்தகங்களின் விலையை மிகவும் உயர்த்தி யிருக்கிறார்கள். இனிப் பக்கங்களையும் குறைத்துவிட்டால், புத்தக விற்பனை பெரிதும் பாதிக்கப்படும். அப்படியின்றி, பிரதிகளைக் குறைப்போமே யென்றால், முந்நூறு புத்தகங்கள் போட்டு, என்ன மண்ணுங்கட்டித் தொழில் புரிவது? மூன்று புத்தகம் போடுவார் ஒரே ஒரு புத்தகம் போடட்டுமே என்று சொல்லலாம். இப்போதே பெரும்பாலான பிரசுரகர்த்தர்களுக்கு மிகச் சொற்ப லாபமே கிடைத்து வருகிறது. பிரசுரத்தை மூன்றில் ஒன்றாய்க் குறைத்தால், தங்கள் ஸ்தாபனச் செலவுகளைச் சுருக்கினாலொழிய, நஷ்டம்தான் வரும். ஸ்தாபனச் செலவுகளைச் சுருக்க முயன்றார்களானால், இந்த அற்புதமான அறிவுத் தொழிலில் ஈடுபட்ட பலரும் அச்சுக்கூடங்களின் பல தொழிலாளரும், வேலையில்லாத் திண்டாட்டத் துக்குத் தான் இரையாவார்கள்.

அடுத்தபடியாக, இந்த உத்தரவால் பாதிக்கப்படும் பத்திரிகைகளை எடுத்துக் கொள்ளலாம். நமது ‘சக்தி’ இதற்கு ஓர் உதாரணமாகும். செய்தித் தாள் என்ற ரப் காகிதம் தேவையா என்று சர்க்கார் கேட்டபோது, அப்படி மாற்ற மனம் வராமல், வேண்டாம் என்று சொல்லிவிட்டு, எத்தனையோ சிரமத்திலும் அருமையான காகிதத்தில் இன்று வரையில் ‘சக்தி’ வெளிவருவதை நேயர்கள் அறிவார்கள். சர்க்கார் உத்தரவுப்படி இனி ஒவ்வொரு மாதமும் உயர்ந்தது 32-பக்கங்கள் தான் ‘சக்தி’யைப் பிரசுரிக்க முடியும். அதில் 16 - பக்கங்கள் விளம்பரத்தில் போய்விடும். விளம்பர வருமானமில்லாமல் எந்தப் பத்திரிகையுமே வாழ முடியாது. ஆகையால், விளம்ப

ரப் பக்கங்கள் போக மிஞ்சும் பதினறு பக்கங்களில் என்ன விஷயங்களைப் பிரசுரிக்க முடியும்? 'சக்தி' போன்ற பத்திரிகைகள் இப்போதே பிரமாத லாபத்தை அடைந்து விடவில்லை. இந்நிலையில், அவைகள் இத்தகைய சங்கடத்துக்கும் ஆளானல், எப்படிச் சமாளிக்க முடியும்?

இப்படிப் பலவித விபரீதங்களையும் உபத்திரவங்களையும் விளைவித்திருக்கும் இந்த உத்தரவை, திடுதிப்பென்று சர்க்கார் பிறப்பித்தது சற்றும் நியாயமல்ல, ஆகையால், இதைச் சிறிது காலமாவது நிறுத்தி வைப்பதோடு, பிரசுரத் தொழிலையே அடியோடு கடுமையாய்ப் பாதிக்கும் முறையில் இல்லாமல் ஷரத்துக்களை மாற்றுவதும், காகிதப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனே மேற்கொள்ளுவதும், சர்க்காரின் கடமையாகும்.

இங்கே 'சக்தி' வாசகர்களுக்குத் தனியே சில வார்த்தைகள் கூற விரும்புகிறேம். சர்க்காரின் உத்தரவு விவரங்கள் கிடைக்கு முன்பாகவே, ஆசிரியரின் தலையங்கங்கள் போக இந்த மாத 'சக்தி'யின் இதர பாரங்கள் தயாராகிவிட்டன. எனவே, இந்த இதழுக்கு மாத்திரம் தந்தி மூலம் சர்க்காரின் விசேஷ அனுமதி பெற்று வழக்கமான பக்கங்களோடு 'சக்தி' வெளியாகியுள்ளது. இனிவரும் இதழ்களில் சிறிது மாறுதல் செய்ய நேரலாம். ஒன்று மாத்திரம் நண்பர்களுக்கு உறுதி கூறுகிறேம்: எந்த இடுக்கணையும் தாண்டிச் 'சக்தி' என்றென்றும் வெற்றிகரமாகவே நடைபெறவும், வாசகரின் நலன்களுக்குச் சற்றும் பாதகம் நேராத முறையில் 'சக்தி'யின் அமைப்பையும் அம்சங்களையும் பாதுகாக்கவும், எங்களாலான பூரண முயற்சியையும் நாங்கள் செய்வோம். நண்பர்களின் ஆசியும் அன்பும் எங்களுக்குப் பக்கத் துணையிருக்கும் என்று நாங்கள் திடமாய் நம்புகிறேம்.

*

வேற்றுமையின் ரகஸ்யம்

அக்பருடைய காலத்திலே தான்ஸென் என்ற ஒரு சங்கீத வித்வான் இருந்தார். அவர் இசையிலே பெரும் புலவர். ஒரு நாள் அக்பர் அவரை அழைத்து, "தான்ஸென்! உம்மைக் காட்டிலும் சிறந்த சங்கீத வித்வான் யாரும் இருப்பார் என்று நான் கருதவில்லை" என்ருர்.

"பாதுஷா! நான் எம்மாத்திரம்? எனக்கு ஹரிதாஸ் என்று ஒரு குரு இருக்கிருர். அவர் அற்புதமாகப் பாடுவார். ஆனல், அவரைப் பாடச் சொல்லுவது கஷ்டம். கடவுளைத் தவிர வேறு யாரையும் அவர் மதிப்பதில்லை" என்ருர்.

"நல்லது, நாமே அவருடைய வீட்டுக்குப் போவோம்" என்ருர் அக்பர்.

இருவரும் மாறு வேடமணிந்து, ஹரிதாஸின் வீட்டுக்குச் சென்ருர்கள். நல்ல வேளையாக அவர் அப்போது பாடிக் கொண்டிருந்தார். அக்பர் அதில் மெய் மறந்து லயித்துப் போனர். அவருக்கு உண்டான ஆனந்தம் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர் தான்ஸென் அருகே போய், "நீர் ஏன் இந்த மாதிரி பாடுவதில்லை?" என்று கேட்டார்.

"நான் மகாராஜாவைத் திருப்தி செய்வதற்காகப் பாடுகிறேன். அவர் அந்தராத்மாவைத் திருப்தி செய்வதற்காகப் பாடுகிருர். இது தான் காரணம்" என்ருர் தான்ஸென்.

உண்மையா?

ஒரு சிப்பாய் தன் தாயாருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினன்: "இங்கே எங்களுக்குப் போடும் உணவு முற்றிலும் விஷமாக இருக்கிறது. அதுவும் ஒரு வாய்தான் கிடைக்கிறது. வயிறு நிறையக் கிடைப்பதில்லை."

Godrej



கோத்ரெஜுக்கு நன்றி பாராட்டு

தீயையும் கொள்ளைக்காரரையும் எதிர்த்து நின்று, நீண்ட காலமாக வெற்றிக் கொடி நாட்டியவர் கோத்ரெஜார். அவர்கள் வெகுமானித்து வரும் பாராட்டு பத்திரங்களுக்கு ஒரு கணக்கில்லை; இப்பொழுதும் புதிது புதிதாக வாழ்த்துக்கள் வந்து குவிகின்றன. சமீபத்தில் பம்பாயில் நிகழ்ந்த, உள்ளத்தை கலக்கும் வெடி விபத்தை தொடர்ந்து வந்து பெருங்கேடு விளைத்த கோரத்தீயில், **கோத்ரெஜ் பேழைகளின்** தீரச் செயல்களைப் பாராட்டும் எத்தனையோ நற்சாட்சி பத்திரங்களில் ஒன்றை மாத்திரம் (அதிகம் சேர்க்க இடமில்லாமையால்) இங்கே காணலாம். தினசரி பத்திரிகைகளிலும், வாரப் பதிப்புகளிலும், வேறு எத்தனையோ கோத்ரெஜ் பேழைகளின் தீரச்செயல்களைப் பற்றி நீங்கள் படிக்கலாம். சுக்கு நூறுக்கும் வீழ்ச்சிகள், **நாள் கணக்காக** அக்னியில் முழுகிக்கிடத்தல், எரிந்து விழுவதும், வெடி மருந்தால் இடித்துத் தள்ளப் படுவதுமான கட்டடக் குவியல்களின் இடையே, தீயணைக்கும் இயந்திரங்களின் சகாயம் பயன்படாததால் புழுங்குதல், இது போன்ற, கோர குண்டு வீச்சிற்கு சமானமானதும், கற்பனையை கடந்ததும், **அறவே எதிர் பார்க்க முடியாததுமான** இன்னல்களைக் கடந்து அவற்றுள் சேமிக்கப்பட்டுள்ள விலையுயர்ந்த பொருட்களை காப்பாற்றி வரமுடியுமென்று, எந்த பேழை செய்வோனும் நம்பியிருக்கமாட்டான்.

பம்பாய், 24—4—1944.

கோத்ரெஜ் & பாய்ஸ் மாங். கோ., லி-ட்.,
லால்பாக், பரேல், பம்பாய்

ஐயன்மீர்,

உங்களிடமிருந்து பல வருடங்களுக்கு முன்பு வாங்கிய 30 அங்குலம் உயரமுள்ள கோத்ரெஜ் பேழை, சமீபத்தில் ஏற்பட்ட கோர வெடி விபத்துத் தீயினின்றும் வெற்றிகரமாக வெளி வந்தது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெளிநாட்டில் பிரபல கம்பெனியாரால் செய்யப்பட்ட பேழையில் வைத்திருந்த பொருட்களெல்லாம் தீயிற்கிரையாயின. ஆனால், உங்கள் பேழையிலிருந்த முக்கிய தஸ்தாவேஜிகளும், நோட்டுகளும், நகைகளும் ஒரு கேடுமின்றி, அதே தீயினின்றும் வெளி வந்தன.

உங்களை எவ்வளவு பாராட்டினாலும் மிகையாகாது. எங்கள் பாராட்டுதலுக்கு அறிகுறியாக, இது போன்ற வேறொரு பேழையை அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

(S-d.) கீம்ஜீ முல்ஜீ
முதலாளி,
பிரேம்ஷி உமார்ஷி அண்டு கோ.,
பம்பாய்.

கோத்ரெஜ் & பாய்ஸ்
மான்யுபாக்சரிங் கோ., லி-ட்.

நாடெங்கும் ஆபீஸ்களும் ஏஜன்ஸிகளும்

சென்னை : 164 பிராட்வே : காரைக்குடி :
S. T. Rm. சிதம்பரம் செட்டியார்,
கல்லுக்கட்டி போஸ்ட்.

தேநீர் ருசி பார்க்கப்படுகிறது

பக்குவப்படுத்தல்

நமது தோட்டங்களிலிருந்து வந்த தேயிலைகளை தொழிற்சாலையில் தேர்ச்சியடைந்தவர்கள் வெவ்வேறு ரகங்களை ஒன்று சேர்த்து பக்குவப்படுத்தி ருசி பார்க்கிறார்கள். ருசி பார்த்து அவைகளின் நற்சுவையை அறிந்த பிறகே மொத்தமாக பக்குவம் செய்தல் ஆரம்பிக்கப்படுகிறது.

தேயிலையின் ரகம், வாசனை முதலியவை ஒரே சீராக காக்கப்படுகின்றன. பக்குவப் படுத்தும் இயந்திரத்திலிருந்து இடைபோடும் இயந்திரத்தில் கொட்டப் படுகிறது. இதிலிருந்து ஒவ்வொரு பொட்டலங்களிலும் சரியான அளவு தேயிலை நிறப்பப்பட்டு முத்திரையிடுவதற்கு தயாராகிறது. இந்த வேலைகள் எல்லாம் இயந்திரத்தினால் நடப்பதால் கைபடுவதில்லை.

மரப் பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டு எங்கள் கிடங்குகளுக்குப் போகத் தயாராகிறது. அங்கிருந்து வெகு துரிதமாய் எங்கள் விற்பனையாளர்கள் மூலம் இந்தியா முழுவதும் வினியோகிக்கப்படுகிறது.

உங்கள் கடைக்காரரிடமிருந்து இதோ புதிதாய் உங்களுக்கு அறிமுகமான மிகவும் பிடித்தமான பொட்டலங்களை வாங்குவீர்கள்.

ப்ரூக் பாண்ட்

மனித தெய்வங்கள்

தி. ஜ. ர.

விக்ரமாதித்த மன்னன் காடாறு மாதம், நாடாறு மாதமாய் வாழ்ந்ததாகக் கதை சொல்லுவார்கள். அவன் ஒரு முட்டாள் என்று நான் சின்ன வயதில் நினைத்திருந்தேன். பின்னால்தான், அவன் ஒரு புத்திசாலியே என்று உணர்ந்து கொண்டேன். விக்ரமாதித்தன், தான் மாத்திரம் ஆயிரம் வருஷம் சிம்மாசனத்திலேயிருந்து ராஜ்யபாரம் செய்யக் காளியிடம் வரம் வாங்கி வந்தான். மந்திரி பட்டிக்கு இதிலே கோபம் வந்தது. அவன் காளியிடம் போனான். தனக்கு இரண்டாயிரம் வயசு வரம் வாங்கிக் கொண்டு வந்துவிட்டான். விக்ரமாதித்தன் பச்சாதாபப்பட்டு, தானும் இரண்டாயிரம் வருஷம் வாழ என்ன வழி என்று, பட்டியிடமே யோசனை கேட்டான். தேவியின் வரப்படி, சிம்மாசனத்தில் ஆயிரம் வருஷம் விக்ரமாதித்தனுக்கு வாழ்வு உண்டு. காடாறு மாதம், நாடாறு மாதமாய் வாழ்ந்தால், ஆயுசிலே இன்னோராயிரம் கூட்டிவிடலாம் அல்லவா? இது பட்டியின் யோசனை. இதன்படியே, அந்த வேந்தன் வாழலானான். இவ்விதமானால், ஆயிரத்தோடு போவானேன்? காட்டிலே அதிக காலம் வாழ வாழ, மன்னனின் ஆயுளும் ஹனுமார் வால் மாதிரி நீண்டு கொண்டேயிருக்குமே; நாட்டை மறந்தேயிருந்தால், சிரஞ்சீவி கூட ஆகியிருக்கலாமே! ஏன் காடாறு மாதமும் நாடாறு மாதமுமாய் வாழ்ந்து, ஆயுளை இரண்டாயிரம் வருஷத்தோடு அவன் குறுக்கிக் கொண்டான்? இதுவே என் சந்தேகம். சொந்த அனுபவத்துக்குப் பிறகுதான், விக்கிரமாதித்த மன்னன் செய்ததே சரி என்று எனக்குப் புரிந்தது.

காடாறு மாதம் நாடாறு மாதம் வாழ்வை, நான் பலமுறை அனுபவித்திருக்கிறேன். நான் என்ன? இன்று தமிழ் நாட்டில் உள்ள பல ஆசிரியர்களின் நிலையும் அதுதான். எங்களில் துர்ப்பாக்கிய சாலிகள் தான் அதிகம். வீணே ஒளித்துப்பேசிப் பயனில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற அஞ்ஞாத வாசம், வருஷத்துக்கு ஆறுமாசம் எப்படியோ எங்களைப் பீடித்து விடுகிறது. மனோ தர்மத்தின் பலத்தைக் கொண்டே நாங்கள் பல நாள் வாழ்ந்து வருகிறோம். அஞ்ஞாத வாசத்தால், ஆயிரம் வருஷம் ஆயுசு கூடுவதானாலும், அது வேண்டவே வேண்டாம்; அது தாங்க முடியாத வேதனையாகும்.

என் வாழ்வில் அது காடாறு மாச காலம். உத்தியோகம் தேடத் தொடங்கினேன். ஒரு பத்திரிகை முதலாளியிடம் சென்றேன். அவர் மகா கௌரவமாய் என்னை வரவேற்றார். அநேகமாய் உத்தியோகம் நிச்சயம் என்று நினைத்துக்கொண்டேன். சம்பாஷணை ஆரம்பமாயிற்று. என் பூர்வோத்தரங்களைப்பற்றி அவர்

வீர வணக்கம் செய்வது மனிதர்களுக்கு இயற்கை; நன்மையும் தரும். ஆனால், அந்த வீர வணக்கத்துக்குப் பின் பலம் என்ன என்பதில் நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். காசுக் கொரு கும்பிடாக வீர வணக்கத்தை ஆக்கிக்கொண்டோமானால், நமக்கு விமோசனமே கிடையாது.

அதிகம் விசாரிக்கவில்லை. தம் பெருமைகளைப் பற்றியே, அத்தியாயம் அத்தியாயமாய் அளக்கலானார். காரியாலயத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாயில் கட்டிடம் கட்டினாராம்; மூன்று பெரிய மெஷின் இருக்கிறதாம்; ஐந்து டிரெடில் வாங்கியிருக்கிறாராம்; காரியாலயக் காம்பவுண்டிலே, வாழைநட்டுப் பயிரிட்டு விட்டாராம் - இதையெல்லாம் அவர் சொல்லச் சொல்ல, நானும் கேட்டுக் கொண்டேயிருந்தேன். ஆனால், இப்படிச் சொல்லியதோடு, அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. என்னை அழைத்துப் போய், அவருடைய ஐசுவரியங்களையெல்லாம் ஒவ்வொன்றாய்க் காட்டவும் ஆரம்பித்து விட்டார். என்னால் சகிக்க முடியவில்லை. ஒரு விகடத்துணுக்குச் சொல்வார்களே, அதுதான் அப்போது எனக்கு ஞாபகம் வந்தது.

யாரோ ஓர் ஏழை, தன் நண்பன் லட்சாதிபதி ஆகியிருக்கிறான் என்று கேள்விப்பட்டு மூன்று நாள் பட்டினியோடு, அவனைப் பார்க்கச் சென்றான். வந்தவனை, "வா; சாப்பிடு" என்றல்லவா பணக்காரன் முதலில் உபசரிக்க வேண்டும்? அதைவிட்டான். தான் கட்டிய புதிய மாளிகையை ஒவ்வொரு பகுதியாய்க் காட்டி, நண்பனுக்கு வர்ணித்துக் கொண்டேயிருந்தான். ஏழையும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். கடைசியில், அவனுக்கே தாளவில்லை. அப்போது இருவரும் மாடியில் இருந்தார்கள். "ஆமாம், நண்பா; எனக்கு ஒரே ஒரு சந்தேகம். இதோ இந்த மாடிப் படியை மிகக் குறுகலாய்க் கட்டியிருக்கிறார்களே. நீயோ நன்றாய் வளர்ந்து பருத்திருக்கிறாய். திடீரென்று மாரடைத்து மாடியிலேயே நீ செத்துப் போய்விட்டாயானால், படிவழியாய் உன்னைக் கொண்டு போகமுடியாது. எந்தப் பக்கத்துச் சுவரை இடிப்பார்கள்? ஒரு சுவரும் அதற்கு லாயக்காய் இல்லையே!" என்று கேட்டானாம் ஏழை நண்பன். இவ்வளவு மோசமாய்ப் பேச நானும் தயார்தான்; ஆனால், தைரியமில்லை. முதலாளியின் வைபவங்களைக் கடைசி வரையில் பொறுமையாகவே கேட்டுக் கொண்டிருந்தேன். அத்தனைக்கும் பிறகு, "என் விஷயம் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன். "நாளைக்கு வாருங்கள். யோசித்துச் சொல்லுகிறேன்" என்று சுருக்கமாய்ப் பதிலளித்தார் முதலாளி.

அப்படியே மறுநாளும் சென்றேன். அன்று அவருடைய திருக்குமாரரைப்பற்றி அவருக்கு உண்டான கவலைகளையெல்லாம் என்னிடம் சொன்னார். பிள்ளையாண்டான் பி.ஏ. வரையில் படித்திருக்கிறானாம். ஓர் உத்தியோகத்துக்கும் போகமாட்டேன் என்கிறானாம். "ஏன்? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவார் உண்டோ? உங்கள் பத்திரிகை ஸ்தாபனத்தின் நிர்வாகத்திலேயே அவருக்கு ஒரு பதவி கொடுத்தால் பார்த்துக் கொள்ளுகிறார்" என்றேன். "அதெப்படிங்க முடியும்? அனுபவம் இல்லாதவனைத் தொழிலிலே போட்டால், கெடுத்து விட்டால் என்ன செய்யறதுங்க? ஏதாவது சர்க்கார் ஆபீஸ், எம். எஸ். எம்., எஸ். ஐ. ஆர். இந்த எதிலாவது கொஞ்ச நாள் நுழைந்துவிட்டு, அப்புறம் வந்தானானால், நம்ம தொழில் இருக்கவே இருக்கிறது" என்றார் முதலாளி. அனுபவமில்லாதவன் இவர் தொழிலைத்தான் கெடுத்து

விடக்கூடாது; சர்க்கார் ஆபீஸ், எம். எஸ். எம்., எஸ். ஐ. ஆர். இவைகளை யெல்லாம் போய்க் கெடுக்கட்டுமே! பேஷான யோசனை அல்லவா? அவன் எப்படியாவது, எதையாவது கெடுக்கட்டும். என் சங்கதி அன்றும் தீர்மான மாகவில்லை. சுந்தர வல்லிப் பதுமையின் கதையைக் கேட்டு விட்டுத் திரும்பிய போஜ ராஜன் மாதிரி வீடுபோய்ச் சேர்ந்தேன்.

மூன்றும் நாள் நான் போன போது, முதலாளியின் முகத்திலே கொஞ்சம் களை குறைந்திருந்தது; சிந்தனை தேங்கியிருந்தது. "நமஸ்காரம்" என்று சொல்லிக்கொண்டே பிரவேசித்தேன். "வாருங்கள்" என்ற அவர், அதிகமாய்ப் பேசவில்லை. மறுபடியும் முகட்டு வளையை நோக்கிய வண்ணம் இரண்டொரு நிமிஷம் தியானபரமாய் உட்கார்ந்திருந்தார். பின்பு, என்னை நோக்கித் திரும்பி "ஓ! நீங்களா? என்னவோ ஞாபகம். எங்கேயோ மனசு சுற்றிக் கொண்டிருந்தது. இந்தக் காலமே தொழிலுக்குச் சுகமில்லீங்க...." என்று சற்று நின்றார். அதன் மேல், பாதி தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுகிறவர் போல, "தவிர, எழுதுகிறவங்க தான் யார் இருக்கிறாங்க? அதோ பாருங்க, அந்த மகான்..." என்று ஒரு படத்தைச் சுட்டிக் காட்டினார். படம் பெரிய படம். முதலாளிக்கு எதிரே சுவரில் மாட்டி யிருந்தது. மாலை, பொட்டு முதலிய அலங்கார உபசாரங்கள் நடந்திருந்தன.

"ஆஹா! அந்த மகானைப் போல் எழுதறவங்க இப்ப யார் இருக்காங்க? ஒரு கப் காப்பியெக் குடிச்சுட்டு உட்கார்ந்தாரானா, மள மள மள வென்று அஞ்சு பாரத்துக்கு ஒரேமூச்சாய் எழுது வாரு. எத்தனை புஸ்தகம் எழுதிக் குவிச்சாரு; என்னமாய் வித்திச்சு அந்தக் கதைங்கள்ளாம்! ஒரு கதை பாக்கி வைக்கல்லெ; இங்கிலீஷ்காரன் கதை, அமெரிக்காக்காரன் கதை, பிரெஞ்சுக்காரன் கதை எல்லாத்தையும் தமிழிலே கொணந்திட்டாரு. அவருக்கு நானும் ரொம்பச் சௌகர்யமெல்லாம் செய்தேனுங்க. மாதம் முப்பது ரூபாய் சம்பளம். திடீர்னு வருவாரு. கால் ரூபாய் கேப்பாரு; குடுப்பேன். அரை ரூபாய் கேப்பாரு; குடுப்பேன். இப்பவும் எல்லாரும்தான் எழுதருங்க கிறு கிறுன்னு. யாரும் அவர் ஆக முடியாதுங்க. அவர் ஒரு தெய்வமுங்க" என்று சொல்லிய முதலாளி, மகா மரியாதையாகவும் பவ்யமாகவும் அந்தப் படத்தை மறுபடியும் பார்த்தார்.

அவர் ஒரு தெய்வம்! மாதம் முப்பது ரூபாய் சம்பளம்! மணிக்கு ஒரு கதை தழுவல்! முதலாளி லட்சாதிபதியாக வரம் கொடுத்துவிட்டு, தான் வறுமையிலேயே வாடிவதங்கிய தெய்வம். நல்ல வேளையாக, அங்கே நானும் அந்தமாதிரியே மற்றொரு தெய்வமாகும் நிலைமை ஏற்படவில்லை. அதாவது, இதோடு அங்கே என் உத்தியோக வேட்டை முடிந்துவிட்டது.

கொஞ்ச நாளைக்கு முன் இன்னொரு ரகமான தெய்வ பக்தரையும் கண்டேன்.

ஒரு நண்பரை ஒரு காரியார்த்தமாகப் பார்க்கச் சென்றேன். நண்பர் ஒரு பெரிய வியாபார ஸ்தாபனத்தில் பெரிய பதவியில் இருக்கிறார். கொழுத்த சம்பளம். அவருக்கு எதிர்ச் சுவரிலேயும்,

ஒரு படம் தொங்கியது. ஸ்தாபன முதலாளியின் படம்.

ஸ்தாபனத்தின் பிரதான உத்தியோகஸ்தர் என்ற முறையில், ஒரு சிறு உதவி செய்யும்படி நண்பரைக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே, "ஓ! எல்லாம் அங்கே கேட்க வேண்டும்" என்று சொல்லி, கையை மேலே தூக்கினர். எங்கே என்று நினைக்கிறீர்கள்? அந்தப் படம் இருக்கிறது பாருங்கள், படம்; அந்த இடத்தை. எஜமான் சித்தம் என் நண்பரின் பாக்கியம்! "நீங்கள் தானே இங்கே சர்வாதிகாரியாம். இந்தச் சிறு காரியம் உங்களால் முடியாதா?" என்று கொஞ்சம் முகஸ்துதியாகச் சொல்லிப் பார்த்தேன். "நான! நான் இங்கே வெறும் தூசி; பொம்மை. எல்லாம் அந்த இடத்து இஷ்டப்படிதான். அது தெய்வம்; வேறே ஒன்றும் சொல்வதற்கில்லை. அவ்விடம் சித்தமெப்படியோ அப்படித்தான் இங்கே சகலமும் நடக்கும். அதில் ஓர் இம்மிகூடப் புரளாது" என்ருர் நண்பர். உண்மையிலேயே, பரப்பிரம்மத்தை யோகிகள் எப்படி அது இது என்று குறிப்பிடுவார்களோ அப்படித்தான், தம் முதலாளியை நண்பரும் குறிப்பிட்டார். மாதம் இருநூறு ரூபாயோ, முந்நூறு ரூபாயோ படியளப்பது தெய்வமில்லை யென்ருல், பின்னே எது தெய்வமாயிருக்க முடியும்? "ஆமாம்; தெய்வமென்ருல், வேறே என்ன மண்ணாங்கட்டி! தெய்வம் கண்டிப்பான பல சட்டங்களைச் செய்துவைத்துவிட்டு, கைலாசத்திலோ வைகுந்தத்திலோ சொஸ்தமாய்க் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறது. உலகம் அவைகளை மீறமுடியாமல் வெகு ஒழுங்காய் நடந்து கொண்டிருக்கிறது. நேரே வராமல், உங்கள் முதலாளியும்தான் இப்படிப் பல ஏற்பாடுகளையும் செய்து வைத்துவிட்டு, எங்கேயோ ஜோலி புரிந்துகொண்டிருக்கிருர். அவர் திருவுள்ளப்படியே எல்லாம் இங்கே நடக்கிறது. தெய்வம்தான் அவர். அதில் என்ன ஆட்சேபம்?" என்று சொல்லிவிட்டு, நான் வெளியே கிளம்பினேன்.

இதே மாதிரி இன்னும் பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில், பல மனித தெய்வங்களின், பக்தர்களை நான் கண்டிருக்கிறேன்; கண்டு வருகிறேன். அந்தப் பக்த கோடிகளை யெல்லாம் பார்த்த பிறகு, பாரதியாரின் ஒரு பாட்டு எனக்குத் தட்டுக்கெட்டு விட்டது. அது என்னை யறியாமலே என் உதடுகள் முணுமுணுத்து, என் சோர்வையும் அயர்வையும் போக்கி வந்த பாட்டு; பரவச குதூகல மொன்றை ஊட்டிவந்த பாட்டு. கீழே வருகிறது — பாட்டல்ல; இந்த மனித தெய்வங்களின் பக்தர்களைக் கண்டபின் திரிந்துபோன சிதைவு:

> காக்கை பிடிப்பதெங்கள் ஜாதி-தலை
> கவிழ்ந்து பணிவதெங்கள் கூட்டம்.

மனிதனுக்கு வீரவணக்கம் வேண்டும்; ஆனால், அது காசுக்கொரு கும்பிடல்ல. செயற்கரிய காரியங்கள் செய்பவன் வீரன். ஆனல், அந்தக் காரியங்களின் அடிவலு தர்மசக்தியா யிருக்க வேண்டும். செப்படு வித்தைக்காரன், மணலைக் கயிருய்த் திரித்துவிடக் கூடும். அதற்காக அவன் வீரனாகிவிட மாட்டான். உங்களிடமும் பொய்சொல்லி என்னிடமும் பொய் சொல்லி, உங்கள் பொருளை என்னிடம் விற்று, நடுவிலே இரண்டு ரூபாய் தட்டிக்கொண்டு போகிறவன் வீரனாகிவிட மாட்டான். ஐந்து

ரூபாய்க் காசுக்காக உயிரையே விடுகிறேன் என்று சாகசம் செய்பவனும் வீரனாகி விடமாட்டான். லட்சியத்தின் பலமே வீரத்தின் ஆணி வேர். நாம் வணங்கும் வீரன், நம் குணத்தை உயர்த்த வேண்டும்; வாழ்க்கையிலே உன்னத லட்சியத்துக்கு வழிகாட்டியா யிருக்கவேண்டும்; தர்ம மார்க்கத்திலே நமக்கு நம்பிக்கை தரும் ஊன்றுகோலா யிருக்க வேண்டும்; மனிதகுல முற்போக்குச் சக்திகளுக்குத் தூண்டுகோலா யிருக்க வேண்டும். ஆனாலும், நம்மிலே பலர் மண் பொம்மைகளை ஏனோ மனித தெய்வங்களாய் வணங்குகிறோம்! இதுவா உருப்படும் வழி?

வெகு வருஷங்களுக்கு முன்னே படித்த கதை ஒன்று இங்கே எனக்கு ஞாபகம் வருகிறது. 'ஒரு கோடீசுவரனின் ஆச்சர்யமான அனுபவங்கள்' என்று அதன் பெயர். ஏதோ அந்நிய நாட்டுக் கதையின் தழுவல், இப்போது தான் தழுவல் ஆரம்பித்திருக்கிறது என்று நினையாதீர்கள். அப்போதே பலர் தழுவி யிருக்கிறார்கள். தழுவுவதா, திருடுவதா, 'முழி' பெயர்ப்பதா என்ற பிரச்னை நமக்கு வேண்டாம். கதையைச் சொல்கிறேன்.

திடீரென்று சைத்தானுக்கு—பாவ புருஷனுக்கு – ஓர் ஆசை வந்தது. ஒரு பரம தரித்திரனுக்கு முன்னே பிரத்யட்ச மானான். "இந்தா, திரண்ட செல்வமும் எண்ணற்ற சுகங்களும் உனக்கு வேண்டுமா?" என்று கேட்டான். "ஆம், வேண்டும்" என்றான் ஏழை. "அப்படியானால் உன் ஆத்மாவை எனக்கு விற்று விட வேண்டும்" என்றான் பாவ புருஷன். "ஆஹா" என்று சம்மதித்தான் ஏழை. ஏழையிடம் அளகாபுரி போல் சம்பத்துக் குவிந்தது; இந்திரலோகம் போல் போகங்கள் நிரம்பின; சக்தியும் செல்வாக்கும் பெருகின. ஏழை கோடீசுவரனானான். ஆனால், அது ஆத்மாவை விற்று வாங்கிய சொத்து. சைத்தானின் மந்திர ஜாலத்தால் கோடீசுவரனாகி, அவனுக்கு அடிமைப் பட்ட அந்த மனிதன், தன்னோடு நிற்கவில்லை. ஊரிலே இன்னும் பல அடிமைகள் பாவ புருஷனைப் பணிந்து தொழும்படி ஆள் சேர்க்கவும் தொடங்கி விட்டான்!

மனிதன் பாவ புருஷனுக்கு அடிமைப் பட்டால், செல்வம் வரும்; சக்தி கிடைக்கும்; சுகம் பெறலாம்: தர்ம தேவதைக்கு அடிபணிந்தால், துன்பமும் அசக்தியும், வறுமையுமே அவனைச் சூழ்ந்து வாட்டும்—தர்ம மார்க்கங்களெல்லாம், இப்படியே உபதேசிக்கின்றன; உன்னத இலக்கியங்களெல்லாம், இதையே வலியுறுத்தும் சோகக் கதைகளா யிருக்கின்றன; பிரத்யட்சத்திலும் பல சம்பவங்கள் இவ்விதமே நடக்கின்றன. வாஸ்தவத்திலே உலகத்தின் உண்மை – சமூக வாழ்க்கையின் தத்துவம் – இது தானா? தர்மம், தியாகம், சத்தியம், ஞானம், தீரம் என்பவையெல்லாம் வெறும் உருவெளி மயக்கங்கள் தானா? உத்தமர்களும் மகான்களும் அப்படி நினைக்கவில்லை. வேதனையே சிருஷ்டி குதூகலத்தின் மூலம். சாவிலிருந்து வாழ்வு பிறக்கிறது. உருக்க உருக்க உயரும் பொன்னின் மாற்று. அந்த வழியைக் காட்டும் மேதைகளுக்கு - அவர்களுக்கே - நாம் அடிபணிவோம்; வெறும் மண் பொம்மைகளுக் கல்ல.

✲

பித்தனே புத்திமான்

ஜி. எச். எஸ்.

பைத்தியம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், ஒரு விஷயத்தை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது, சகல மனிதர்களும் ஒரே ஒரு லட்சியத்தையே தேடுகிறார்கள். இன்பம்தான் அந்த லட்சியம். மன நிதானமுள்ள சாமான்ய மனிதன், தன் தற்போதைய நிலைமைக்கு மாற்றாக, ஓர் இன்பக் கனவைக் கற்பனை செய்து கொள்கிறான். அவனுடைய வருங்கால நடவடிக்கைகள், இந்த இன்பக் கனவையே, சூத்திரக் கயிறாய்க் கொண்டிருக்கும். இதைத் தான் மனோதத்துவ சாஸ்திரத்தில், 'இன்ப தத்துவம்' என்று அழைக்கிறோம்.

இன்பம் தேடும் இந்த மகத்தான முயற்சியில், சகல மனிதர்களிலும் மிக அதிக வெற்றி பெற்றவர்கள் யார் என்று கேட்டால், பைத்தியங்கள் தான் என்றே பதில் சொல்ல வேண்டும். இது விசித்திரமாய்த் தோன்றுகிறது அல்லவா? பைத்தியக்காரர்கள் அத்தனை பேரும் மகா ஆனந்தம் அடைந்தவர்கள்: தன்னை நெப்போலியனாய்ப் பாவித்து மயங்கியிருக்கும் ஒரு பைத்தியத்தை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் போய் ஒரே ஒரு வார்த்தை வேண்டிக் கொள்ள வேண்டியது தான். உடனே அவன், 10 லட்சம் டாலருக்கு ஒரு செக் எழுதி, அதையும் பிரான்ஸில் ஒரு பெரிய ஜமீனையும் உங்களுக்குத் தட்சணமே இனாம் கொடுத்து விடுவான். தன் மனோநிலை சம்பந்தப்பட்ட மட்டில், அவன் குபேர செல்வமும் மகா வலிமையும் உடையவனாகவே இருக்கிறான். நீங்கள் தான், "பாவம்! பைத்தியக்காரன்!" என்று அவனுக்கு அங்கலாய்க்கிறீர்கள்.

பித்தர்களின் மனதும், நம்முடைய மனது மாதிரியேதான் வேலை செய்கிறது. கொஞ்சம் கூடக் குறைய வேலை செய்யலாம்; இதுவே வித்தியாசம். மனதில் சுகத்தையே நினைக்க வேண்டும், துக்கத்தை நினைவுக்கே கொண்டு வராமல் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற பலமான ஓர் இயற்கை உணர்ச்சி, நம் அனைவருக்கும் இருக்கிறது. உங்களுக்கு மகா கஷ்டமாயிருக்கக் கூடிய விஷயங்களை நீங்கள் எண்ணும் போதுகூட, அவைகளில் பெரும்பாலானவையும் உங்களுக்குத் திருப்தியே தருவதைக் காண்பீர்கள். உங்கள் குடும்பத்தின் தரித்திர நிலைமை உங்களுக்குக் கவலை தருவதாயிருக்கலாம். ஆனால், அந்தத் தரித்திரத்தைப் பற்றி நினைக்கும் போதோ, உங்கள் மனதிலே இன்னொரு சித்திரமும் தோன்றுகிறது; "ஆஹா! வாழ்க்கையிலே எத்தகைய

'ஐயோ பாவம்! பைத்தியம் போலே இருக்கு' என்று, பித்தர்களைப் பார்த்து நாம் பரிதாபப் படுவது சரியல்லவாம். அவர்களே நம்மைப் பார்த்துப் பரிதாபப் படவேண்டும் என்கிறார் ஜி. எச். எஸ்டாபுரூக்ஸ் என்ற இந்தக் கட்டுரையாளர். இவர் கோல் கேட் சர்வ கலாசாலையில் மனோதத்துவ புரொபஸர்.

போராட்டம் நடத்தும் வீரன் நான்!'' என்ற சித்திரம். இது உங்களுக்குப் பெரும் களிப்பைத் தருகிறது. இந்த 'இன்ப தத்துவம்' தான், பைத்திய மனோதர்மத்தின் மர்மங்களை விளக்கும் திறவு கோலாகும்.

மிகவும் சுலபமாய்த் துன்பத்தை விலக்கி, இன்பத்தைக் காணும் சிறந்த மார்க்கத்தை அறிந்து கொண்டவர்கள் பைத்தியங்களே. பலமான சித்தப் பிரமை பிடித்தவர்கள் தான் பெரும்பாலான பைத்தியங்கள். அவர்கள் நாள் பூராவும் ஒரேயடியாய் உட்கார்ந்து கொண்டு தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்ளுவார்கள்; சில சமயம் சிரிப்பார்கள். உலகத்தைக் கண்டு, அவர்களுக்குப் பரம திருப்தி உண்டாகி விடுகிறது. இந்தத் திருப்திக்குக் காரணம் என்ன என்று கேட்டால், தங்கள் உடம்பின் உட்புறமெல்லாம் ஒரே சொர்ண மயமாயிருப்பதாகவும், அங்காரக கிரகத்தோடு தாங்கள் ரேடியோ மூலம், பேசுவதாகவுமெல்லாம் அவர்கள் அபூர்வமான சமாதானங்கள் சொல்லக்கூடும்.

ஆனால், ஒன்று. அவர்கள் மகா சந்தோஷமாயிருக்கிறார்கள் என்பதை மட்டும் நீங்கள் நினைவில் வைக்கவேண்டும். அவர்கள் கனவு உலகங்களிலே வாழ்கிறார்கள். அந்தக் கனவுகள், அவர்களுக்கு மிக்க உண்மையாய் இருக்கின்றன. அவர்களைக் குணமே செய்யமுடியாது. பைத்தியமாயிருப்பதிலேயே அவர்கள் ஆனந்தம் அடைகிறார்கள். அப்படியேயிருக்க, அவர்கள் தீர்மானமும் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் பணம் சம்பாதிக்க முயற்சி செய்கிறீர்கள்; பைத்தியமோ அதை அடைந்து விட்டான். அதிகாரம் வேண்டுமென்று நீங்கள் தேடுகிறீர்கள்; பைத்தியமோ தானே நெப்போலியனாகி விடுகிறான். நீங்கள் அவனைப் பார்த்துப் 'பைத்தியம்' என்று சிரிக்கிறீர்கள். ஆனால், நீங்கள் தேடுவது என்ன? இன்பத்தைத் தானே! அதை நீங்கள் அடைந்து விட்டீர்களா? உயர்ந்த பட்சம் அரை குறையான இன்பம் தான் உங்களுக்குக் கிடைத்திருக்கும். உங்கள் மனதில் பெரும் சஞ்சலந்தான் மிச்சம். பைத்தியமோ, தனக்குத்தானே திருப்தியடைந்து விடுகிறான். சில பைத்தியங்கள், உங்களோடு பேசுவது வீண் என்றுகூட எண்ணி, பேச மறுப்பார்கள்.

இத்தகைய சித்தப் பிரமை பிடித்த பைத்தியத்தை, ஏன் குணமே செய்ய முடிவதில்லை? குணமடைய அவனுக்குச் சம்மதமிருந்தால்தானே! அது அவனுக்குச் சம்மதமில்லை. பார்க்கப் போனால், அவனே புத்திமான் அல்லவா? நீங்கள் மாடுபோல் உழைக்கிறீர்கள்; போராடுகிறீர்கள்; இல்லாத கவலையெல்லாம் படுகிறீர்கள். இத்தனைக்கும் பிறகு, நீங்கள் தரித்திரமாகவே சாகக்கூடும். பைத்தியமோ உழைப்பதேயில்லை. அருமையான சாப்பாடு சாப்பிடுகிறான்; கவலை என்பதே, அவன் போகிற வழியில் குறுக்கிடுவதில்லை. கோடீசுவரனாகவே அவன் சாகிறான். அவன் உங்களைப் பார்த்து, "ஐயோ, பாவம்! புத்திசாலி போலே இருக்கு!'' என்று அனுதாபப் பட்டானானால், அதில் ஆச்சரியப்படுவதற்கே யில்லை.

✲

பொய்யன்

முல்க் ராஜ் ஆனந்த்

எங்களூர்க் கிழ வேட்டைக்காரனான லாபுவுடன் பிறந்தது பொய். ஆகையால், சுற்று வட்டாரங்களில் எல்லாம் பெரிய கதை சொல்பவன் என்று அவனுக்குப் பேர். அவன் ஜாதியில் கீழான சக்கிலியனாக இருந்தாலும் எல்லோரும் அவனை மதித்து வந்தார்கள். ஊர் நடுவில் இருந்த ஆல மரத்தடியில் உட்காருவதற்குக் கூட அவனுக்கு அநுமதி கிடைத்ததென்றால், பாருங்களேன்! நான் மற்றப் பையன்களோடு சேர்ந்து, அவன் கதையைக் கேட்டுக் கொண்டிருப்பேன். அதை அம்மாவும் பார்ப்பாள். ஆனால், தீண்டல் போவதற்காகக் குளிக்கும்படி என்னை வற்புறுத்துவதில்லை.

ஈட்டியின் கூர்மையும் அம்பின் வேகமும் ஒருங்கே நிறைந்த மெல்லிய உடலுடையவன் லாபு. எங்கள் ஊருக்குப் பின்னால் உள்ள செங்குத்தான மலைச் சரிவுகளில், யாதொரு கஷ்டமுமில்லாமல் லாகவமாகக் குதிரைக்கு முன்னால் செல்வதென்றால், அவனது வயிர உடம்பில் எவ்வளவு பலம் இருக்கவேண்டும்! அவன் வேட்டைத் தொழிலை மேற்கொண்டதற்கு இந்த விநோதமான உடலமைப்பே காரணமாகும். தனக்குப் பிரியமான சோக கீதத்தின் முதல் அடியை அவன் பாடும்போதெல்லாம், அவனுடைய உதடுகள் துடிதுடிக்கும்.

இந்தச் சோக கீதங்களும் கற்பனைக் கதைகளும், மந்திரம்போல என்னைக் கவர்ந்ததால், நான் குழந்தைப் பருவத்திலிருந்து அவனுடைய சிஷ்யனானேன். முயல்களோடு ஓடவும், நாய்களுடன் சேர்ந்து வேட்டையாடவும், காட்டு மிருகங்களின் காலடிகளைக் கண்டு, பதுங்கியுள்ள இடத்தைக் கண்டுபிடிக்கவும், அவன் எனக்குக் கற்பித்தான். அத்துடன், கொளுத்தும் வெய்யிலில் வெளியே சுற்றி விட்டு வீட்டுக்குப் போனால், தகப்பனாரிடம் வசவு வாங்காமல் தப்பித்துக் கொள்வதற்காகக் கதை கட்டுவதற்கும் கற்பித்தான்.

நான் அவனுடைய முக்கிய சிஷ்யர்களில் ஒருவன். ஆகையால், வெறும் உபதேசத்தோடு நில்லாமல் அந்த உபதேசத்தைச் செய்கையிலும் காட்டுவான்.

“லாபு! குன்றிலே பாதி தூரத்தில் இருக்கும்போது, மிருகங்களின் இருப்பிடத்தைக் காண்பது கஷ்டமல்லவா?” என்றேன்.

“ஒரு கஷ்டமும் இல்லை. சத்தம் செய்யாமல் நின்று கேள், நான் காட்டுகிறேன்” என்றான்.

ஆங்கிலத்தில் வரும் உலகத்துச் சிறுகதைகள், கதைத் தொகுதிகளிலெல்லாம் முல்க்ராஜ் ஆனந்தின் சிறுகதையும் இருக்கும். அவர் நவீன இந்தியாவைச் சித்திரித்துக் காட்டுவதில், பிரசித்தி பெற்றவர். ஏழைக் குடும்பமொன்றில் காஷ்மீரில் பிறந்த அவர், இன்று லண்டன் பி. பி. ஸியின் ஒரு பகுதிக்குத் தலைவராயிருக்கிறார். அவருடைய ஏராளமான நூல்கள், இங்கிலாந்தில் பிரசுரமாகியிருக்கின்றன. அவைகளில் ‘ஹரிஜன்’, ‘கூலி’ ஆகிய இரண்டும் பலராலும் பாராட்டப்பட்டிருக்கின்றன. ஆசிரியரின் அனுமதியுடன், இந்தச் சிறுகதையை, **கே. கணேசன்** தமிழ்ப்படுத்தியிருக்கிறார்.

அப்படியே செய்தேன். அப்பொழுது எங்கிருந்தோ கூழாங்கல் விழுவதை இருவரும் கேட்டோம். லாபு கற்பாறைக்கு மேலே, சத்தம் கேட்ட திசையை நோக்கித் தாவி ஓடினான். சிறியவை பெரியவை என்ற வித்தியாசம் பாராமல், அங்கொரு கால் இங்கொரு கால் வைத்துத் தாண்டி, ஆட்டு மந்தைகளுக்கு இடையில் புகுந்து, குகையில் பதுங்கித் தன்னைத் தேடுபவனிடம் தப்பித்துவிட்டதாக எண்ணிக்கொண் டிருக்கும் ஓர் ஆட்டுக் கடாவை நோக்கி ஓடினான்.

"இந்தக் கடாவைத் தேடிப் பிடித்தது சரி! ஆனால் சுபேதாருடன் வேட்டைக்குச் சென்றபோது பைசாசக் கடாவைப் பார்த்ததாகச் சொன்னாயே, அதை நான் நம்பவில்லை" என்றேன் நான்.

"கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன்: அது உண்மை. சுபேதாரைக் கேட்டால் சொல்லுவார். அந்த மிருகம் உயரத்திலும் பருமனிலும் யானையைப் போன்றது. கண்கள் கோழி முட்டை அளவு பெரியவை. தாடியோ, நமது மௌல்வியின் தாடியைப் போல நீண்டது. ஆனால், அவரைப்போல அது தாடியில் சாயம் பூசிக்கொள்ளவில்லை. தூய கருநீல நிறம். அதன் காது யானையின் காது அளவு இருந்தாலும், அதைப்போல் காதை அங்கும் இங்கும் வீசாது; நம் சுபேதாரின் குதிரைக் காதைப் போல் விறைத்திருக்கும். அதன் மூக்கோ, நம்மூர்ப் பாதிரியார் மனைவியின் மூக்கைப் போல. சுபேதாரைக் கண்டு அது சிரிக்கும்போது, வாயிலுள்ள பற்களோ, கோயிலுக்கு முன்னாலிருக்கும் சலவைக்கல் படிக்கட்டளவு இருக்கும்.

"அது எதிர்பாராத விதத்தில் தேவிபர்வதத்தில் தோன்றியது. சுபேதாரும் நானும் 12,000 அடி உயரம் மலையில் ஏறியிருப்போம். திடீரென்று பாறைகள் உருளும் சப்தமும் புயல்காற்றின் ஒலியும் இடியின் ஓசையும், அங்கிருந்து ஏதோ ஒரு பெரிய உருவம் வெளி வருவது போல் இருந்தது. தூரம்

பார்வைக்கு அது ஒரு கருங் குதிரை போலத் தோன்றியது. நாங்கள் அதை நோக்கி நடந் தோம். என்ன ஆச்சரியம்! கோழி முட்டை போன்றிருந்த தன் கண்களால் அது எங்களைப் பார்த்தது; மலையோர மண் சரிந்து விழும்படி தன் முன்னங் காலால் உதைத்து ஒரு கனைப்புக் கனைத்து விட்டு மறைந்தது. மலை அதிர்ந் தது. சுபேதார் நடுங்கினர். நானே, நின்ற இடத்திலேயே இருந்து, ஆட்டுக் கடாவின் பைசாசக் கடவுளைப் பார்க்கப் பாக்கியம் கிடைத்ததற்காக மகிழ்ந்து கொண்டிருந்தேன். தம்பீ! ஒரு நாளைக்கு நான் அதை உனக்குக் காட்டுகிறேன். நீ பார்.''

நான் அவனது கற்பனையில் லயித்திருந்தாலும், "லாபு, அப்படியா சொல்லுகிருய்!'' என்று அரைகுறைச் சந்தேகத் துடன் கேட்டேன்.

"அப்படித்தான், அப்பா! உம், இதெல்லாம் என்ன? ஜான் துரை யுடன் லாடக்குக்கு வேட்டை யாடப் போனபோது கண்டதை விடவா!'' என்று, மலைப்பாம்புக் கதை ஒன்றை, நான் கூட நம்ப முடியாதமுறையில், சொன்னன்.

"நீ ஒரு மடையன், புளுகன்; எல்லோரும் அப்படித்தான் சொல்லுகிருர்கள். உன் கதையை நான் நம்பவே யில்லை. உன் கதை களைக் கேட்பதற்காக அம்மா என்னை அசடு என்கிருள்'' என் றேன்.

"சரி, நீ நம்பாவிட்டால் என் கதைகளைக் கேட்க என் இங்கே வருகிருய்? போ, நான் இனி மேல் உனக்கு ஒன்றும் சொல்ல வில்லை. வேட்டைக்குப் போகும் போதுகூட உன்னை அழைத்துக் கொண்டு போகவில்லை'' என்று, புண்பட்ட அகங்காரத்துடன் லாபு கூறினன்.

"சரி, நானும் உன்னேடு பேசப்போவதில்லை'' என்றேன் நான்.

பொழுது போக்குவதற்காகக் கதைகள் சொன்ன லாபுவுடன் வீணுக வலுச்சண்டை யிட்டுக் கொண்டோமே என்ற வருத்தத் துடன் வீட்டுக்கு ஓடினேன்.

சில நாட்களுக்குப் பிறகு, சுபேதாருடன் வேட்டையாடு வதற்காக லாபு நேப்பாளத்துக் குச் சென்று விட்டான்.

"இந்த லாபுவுக்கு என்ன தெரியும்? இராத்திரி வேளையில் நடுக்காட்டி லிருக்கும் குளத்தி லாவது, ஒற்றையடிப் பாதையி லாவது காத்திருந்து, அங்கே தப்பித் தவறி வரும் மிருகங்களைத் துருப்பிடித்துப்போன துப்பாக்கி யால் சுடுவதற்குத்தான் அவன் லாயக்கு. காட்டு மிருகங்களின் தடம் தேடுவதைத் தவிர, வேறு ஒன்றுக்கும் அவன் பிரயோஜன மில்லை'' என்று ஒரு சுபேதார் கூறினர்.

"ஆம். அவன் பெரிய புளுகன்; தற்புகழ்ச்சிக்காரன். பேசு வானே தவிர வேறென்றும் அவ னுக்குத் தெரியாது. ஒரே ஒரு முறை அவன் சுட்டதை நான் கண்ணுல் பார்த்தேன். காலில் தான் பட்டது'' என்று அப்பா சொன்னர்.

அந்தக் கதைகள் உண்மையா பொய்யா என்பதை லாபுவின் வாய் மூலமாகவே அறிவதற்காக, அவன் வரும் நாளை நான் ஆவ லுடன் எதிர்பார்த்தேன்.

ஆனல், லாபு திரும்பி வந்த போது கால் நொண்டினன்;

பார்ப்பதற்கு நோயுள்ளவன் போலத் தோன்றினன். வழக்கமான உற்சாகத்தைக் காணேம். இந்த மோசமான நிலைமை அடைந்ததற்காக, நான் மிகவும் வருந்தினேன். அவன் வெளியூர் போயிருந்த காலத்தில் அவனைப் பற்றி மற்றவர்கள் சொன்ன கதைகளை யெல்லாம் மறந்தேன். ஏனெனில், இப்போது அவன் முன்போல் கிழவர்களுக்கும் சிறு பையன்களுக்கும் வாயாடித்தனமாகக் கதை சொல்லுவதில்லை. அதற்குப் பதிலாக நாள் முழுதும் உணர்வற்று மௌனமாக இருக்கும் விநோத மனிதனுனன். எப்போதாவது, அந்தி நேரத்தில் பெரிய தடியை ஊன்றிக் கொண்டு நொண்டி யடித்துக் கொண்டு வெளியே போவான். மற்ற நேரத்தில் தனியாக உட்கார்ந்துகொண்டு ஏதாவது முணுமுணுப்பான். அவனுடைய பார்வையிலே கோபமும் வெறுப்பும் கலந்திருந்ததால் நான் அவனருகே செல்ல அஞ்சினேன். ஆனல், ஊரார்கள் அவனது போக்கில் வேற்றுமை எதுவும் இருப்பதாகக் கருதவில்லை. அவன் கதைகளைக் கேட்க இப்போது ஆள் இல்லாததால், அவன் பொறுமை யிழந்து தனக்குத் தானே சொல்லிக் கொண்டிருப்பதாக அவர்கள் கருதினர்கள்.

ஒரு நாள் நான் அவனைப் பார்க்கப் போனேன். அவன் அரச மரத்து நிழலில் ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான்.

"லாபு! திரும்பி வந்துவிட்டாய் போலிருக்கிறதே!" என்றேன். "ஆமாம் தம்பீ, வந்து சில நாள் ஆகிறது. உன்னைத் தேடினேன். அகப்படவில்லை. காலில் சுளுக்கிக் கொண்டால், வீட்டுக்குள்ளே கூட நடக்க முடியாது என்பது தான் உனக்குத் தெரியுமே! கால் ரொம்ப வலிக்கிறது. நான் முன்போலச் சுற்றித் திரிய முடியவில்லை" என்றுன்.

அவன் பழைய சண்டையை மறந்து, முன்போல் அன்பாகவும் ஆதரவாகவும் பேசினன். "உன் காலுக்கு என்ன? மலையிலிருந்து தவறி விழுந்து விட்டாயா?" என்று கேட்டேன். அவன் "இல்லை" என்று, சோர்வடைந்த குரலில் கூறினன். பின்பு, வெகு நேரம் பேசாமலிருந்தான். "என்ன விஷயம்?" என்று நான் மீண்டும் கேட்டேன். லாபு மெல்லிய குரலில் தன் கதையைச் சொல்லத் தொடங்கினன். முன் போலவே அடிக்கடி புருவத்தை உயர்த்தி "சுபேதாரின் மூத்த மகனை குல்தீப் சிங்கோடு வேட்டைக்குப் போயிருந்தேன். 'கூலு' சமவெளி வழியாக நேப்பாளத்துக்குப் போனேம். அவருக்கும் அவருடைய நண்பர்களுக்கும், இந்தப் பகுதியிலோ அல்லது உலகத்தில் வேறு எந்தப் பகுதியிலோ வேட்டையாடிப் பழக்க மில்லை. நான் அவர்களைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றேன். அந்தப் பையன் குல்தீப் இருக்கிறனே, அவன் பட்டாளத்தில் என்ன செய்கிறனே தெரியவில்லை. பக்கத்திலே உள்ள பிராணியை அவனல் சுடமுடியவில்லை. கூட வந்த வெள்ளையர்களோ, வாய்ப்பேச்சு மாத்திரம் பேசுவார்கள்; கண் பார்வையும் தெரியாது. நான் ஒரு மிருகத்தைக் கைத்தடியால் காட்டுவேன். அது கண் முன்னே தெரிந்தாலும் துப்பாக்கி உராயும் ஓசையாலாவது காலடி ஓசையாலாவது, அந்த மிருகத்தை ஓட்டி விடுவார்கள். வேட்டைக்குப் போனல், அவரவர்களே தங்கள் கையால் சுட்

டால் தான், ரசமா யிருக்கும் என்றேன். பிறகு, அவர்கள் நிலைமைக்கு வருந்தி அவர்களுக்குப் பல ரக மிருகங்களைச் சுட்டுத்தர விரும்பினேன். ஏழே ஏழு நாளைக்குள் 12 புலிகளையும், 15 சிறுத்தைகளையும், பல மான்களையும் சுட்டுக் கொன்றேன்.

"எட்டாவது நாள், கரடியைப் போன்ற உடலும், மானைப் போன்ற தலையும், ஆட்டைப் போன்ற காலும், காட்டெருமையைப் போன்ற வாலும், சுபேதார் தீப்சிங்கின் சம்சாரத்தைப் பார்க்க வந்திருந்த பூண்டி நாட்டு ராணி உடுத்தியிருந்த பிரகாசமான வெள்ளைச் சல்லாவைப் போன்ற தோலும் உடைய ஒரு மிருகம் தோன்றியது. குல்தீப் சிங்கும் மற்றத் துரைமார்களும் இந்தப் பயங்கர மிருகத்தைக் கண்டு, பிசாசுதான் இந்த உருவத்தில் வந்திருக்கிறது என்று அஞ்சினார்கள்!

"அவர்கள் எப்படியாவது அதைக் கொன்று விடுவது என்று முடிவு செய்தார்கள். ஆனால் நானோ, நேப்பாள இளவரசியை யாரோ ஒரு மந்திரவாதி இத்தகைய உருவத்தில் மாற்றியிருக்க வேண்டும் என்று நிச்சயமாக எண்ணினேன்; அதை உயிரோடு பிடித்து வீட்டுக்குக் கொண்டு வந்து, அதைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினேன்."

"நான் அவளைக் காதலித்ததாகச் சொன்னேன். அவள் நாணத்துடன் புன்னகை பூத்தாள். ஆனால், அதற்குள் யாரோ ஒரு முட்டாள் – சுபேதார் மகனாகத்தான் இருக்க வேண்டும் – குண்டுமாரி பொழிந்தான். அந்த ஓசையைக் கேட்டுப் பயந்து, இளவரசி காற்றில் கலந்து கைலாச பர்வதத்தை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

"நான் என் காதலியைக் காப்பாற்றுவதற்காக, மலையிலிருந்து மலைக்குத் தாவி, அவளை நிற்கச் சொன்னேன். ஆனால், அந்த முட்டாள்கள் ஓயாமல் சுட்டதால், அவளைக் காப்பாற்றுவதற்காக மந்திரவாதி எழுந்து வந்தான். அவன் என்னைக் கொல்லுவதற்காகப் பனிமலை ஒன்றை வீசினான்.

"அந்தப் பனி மலைமீது எனது உஷ்ண மூச்சை விட்டேன். அது கோடிக் கணக்கான துண்டுகளாகச் சிதறி, ஆகாயத்தில் நக்ஷத்திரங்களைப் போல் தொங்கின.

"பின்பு, அந்த மந்திரவாதி பூமியைக் காலால் உதைத்து, என்னை உயிரோடு புதைப்பதற்காக ஒரு குழி வெட்டினான். நான் அதன் வாய் வழியாகக் குதித்தேன். அப்போது சாகா வரம் பெற்ற லாமாக்கள் வாழும் நாட்டிலே ஒரு மலையுச்சியில் இருப்பதை உணர்ந்தேன்.

"மந்திரவாதி அந்த அழகியை ஏதாவது ஒரு குகையில் மறைத்து வைத்திருப்பான்; ஆகையால், இனி அவளைத் தேடுவதில் பிரயோஜனமில்லை யென்று கருதி அந்த முயற்சியை விட்டு விட்டேன். இமாலய மலையைத் தாண்டி வீட்டுக்கு வந்தேன்."

"இமாலய மலையைத் தாண்டும் போது கால் சுளுக்கிக் கொண்டதாக்கும்?" என்று நான் கேட்டேன்.

லாபு முன்போலவே தமாஷாகப் புருவத்தை உயர்த்திச் சிரித்துக் கொண்டே, "அப்படியானால், இந்தக் கதையை இதற்கு முன் சொல்லியிருக்கிறேனா, என்ன!" என்றான்.

❋

நாகரீக நங்கையர்க்கு
ஏற்ற உயர்தரமான
வைரம், தங்க நகைகள்
கிடைக்குமிடம்

VUMMIDIAR'S

உம்மிடியார்

உம்மிடி ராமய்யா செட்டி
குருசாமி செட்டி அன் கம்பெனி
25, சைனு பஜார் ரோடு, ஜி. டி. சென்னை



தமிழ் நாடு ஏஜெண்டுகள்:—

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் : : மேலக்கோபுர வீதி - மதுரை

13 JUL 1944



யானைத் திருட்டு

மஞ்சேரி
எஸ். ஈசுவரன்

சத்தியத்துக்கு அலங்காரம் தேவையில்லை. அதை உள்ள படி சொல்லும்போது தான் மிகச் சிறப்பாய் சோபிக்கிறது. சத்தியத்தை உள்ளபடி சொல்லுவதே கர்ண பரம்பரைக் கதைகளின் பெருமையாகும். அந்தக் கதைகள் மிக எளிமையானவை; அநுபவ ஞானக் களஞ்சியங்கள்; சின்னஞ் சிறு பேழையிலே அடைத்த மதிப்பரிய மாணிக்கங்கள். அத்தகைய ஒரு கதை இது. மகா எளிமை வாய்ந்தது.

வெகு காலத்துக்கு முன்னால் புராதன இந்தியாவில் ஒரு ராஜா இருந்தார். அவர் எந்தக் காலத்தில், எந்த தேசத்தை ஆண்டு வந்தார் என்பது தெரியவில்லை. அவர் கபிலவாஸ்து மன்னனாகிய சுத்தோதனர் காலத்தவராக இருக்கலாம்; அல்லது, பிரிட்டிஷ் சர்க்காருடன் உடன்படிக்கை செய்து கொண்டு, கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சலுகைகள் வழங்கி, விக்டோரியா மகாராணியின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பிரபலஸ்தராக—சாம்ராஜ்யத்தின் தூணாக விளங்கிச் சரித்திரத்தில் குறிப்பிடப்படாதவராக இருக்கலாம்.

அமானுஷிக அம்சங்களைப் புகுத்தி ஆச்சர்யமான கதைகளைப் புனைவது, உலகெங்கும் வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. அவை இயற்கையையும் கடந்து மனித உள்ளம் தாவியெழும் ஒரு தனி உலகத்தை நமக்குக் கற்பனை செய்து தருகின்றன. நாட்டுக்கு நாடு கர்ணபரம்பரையாய், அத்தகைய பல கதைகள் வழங்கி வருகின்றன. இதோ இது நம் நாட்டுக் கதை. நண்பர் ஈச்வரனுக்கே சொந்தமான தனிவர்ணமும் ஒளியும் பூண்டு சோபிக்கும் அது, எவருக்குமே புதுமையாய்த்தான் இருக்கும்.

நிற்க, கடலிலும் வானிலும் நிலத்திலும் உள்ள பலவகையான மிருகங்களுள், ராஜாவின் அன்பைக் கவர்ந்தது ஒரு நில விலங்கு. அது ஒரு யானை. பருவகால மேகத்தைப் போலக் கன்னங்கரேலென்றிருக்கும். பிரமாண்டமான அதன் தந்தங்களிலே, பொன் இழைத்திருக்கும். தங்கம் வெள்ளி ஜரிகைகளை வைத்துப் பின்னிய பட்டுப் பீதாம்பரத்தால் உறை செய்து அதன் முதுகைப் போர்த்தி, அந்த உறையின் ஓரங்களில் ஒலியற்ற சிறு மணிகள் போல் நானாவித வர்ணங்களில் பட்டுக் குஞ்சலங்கள் தொங்கின. கெட்டி வெள்ளியாலான ஒரு மணி அதன் கழுத்திலே தொங்கிக் கொண்டிருந்தது. அதில், புராதன யானை சாஸ்திரத்தில் வர்ணித்திருக்கும் அற்புதச் சித்திரங்கள் பலவற்றைப் பொறித்திருந்தார்கள். அதற்கு உணவளிப்பதற்கும், உடம்பைத் தேய்த்துக் குளிப்பாட்டுவதற்கும், பல வேலைக்காரர்கள் இருந்தார்கள். ஆயுர்வேத வைத்ய முறைப்படி

அதன் தேக சுகத்தைக் கவனித்துக் கொள்வதற்காகப் பல வைத்திய நிபுணர்கள் இருந்தார்கள். பல காவலர்கள் அதைச் சுற்றிலும் நின்று, இடைவிடாமல் காவல் புரிந்தார்கள். கண் பட்டு விடாமல் இருப்பதற்காக, அதன் உடம்பெங்கும் பல தாயத்துகள் இருந்தன. ராஜா, அதற்குக் கரிவரன் என்று பெயர் சூட்டினர். தன் யானைக்கு முன்னல், இந்திரனுடைய ஐராவதம் கூட அற்பமானது என்று அவர் கருதினர். தெய்வத் தன்மை வாய்ந்த அந்த ஐராவதத்துக்கு, சிறு சுண்டெலியவ்வளவு வலிமை கூட இல்லையென்று அவர் கருதினர். அரண்மனைக்கு எதிரேயிருந்த ஓர் அழகிய புல் வெளியில், அதைக் கட்டியிருந்தார்கள். காலையில் எழுந்ததும், அவர் பலகணி வழியே முதலில் யானையைத்தான் பார்ப்பார். இரவில் படுக்கப் போகும்போதும் கடைசியாகக் கரிவரனைப் பார்த்து விட்டே தூங்குவார். அவர் தன் அன்பிற்குகந்த அந்த மிருகத்தைப் பராமரிப்பதற்காக, ஒரு தனி பொக்கிஷசாலை ஏற்படுத்தினர். அந்த அற்புத மிருகம் மனிதர்களுடைய கண்ணுக்கும் காதுக்கும் புலனகாமல், சூட்சுமமாய், ராஜாங்க விஷயங்களில் மன்னருக்கு ஆலோசனை சொல்லுவதாக, ஒரு வதந்தி இருந்து வந்தது.

அந்த ஊரில் நான்கு பெண்கள் இருந்தார்கள். ஸ்தூலகி, கர்ணகி, தந்தகி, மஸ்தகி என்று அவர்களுக்குப் பெயர்கள். ஆரியவர்த்தம் தோன்றுவதற்கு முன்னலேயே திராவிட நாடு இருந்ததென்று கருதுபவர்களுக்கு, இந்தப் பெயர்கள் சாதாரணமாகவே தோன்றும். ஆனல், இந்தக் காலத்துத் திராவிடர்கள் இதை அவ்வளவு இலகுவில் விட்டு விடமாட்டார்கள். அந்த வார்த்தைகளைப் பிரித்துப் பார்த்தால், ஸ்தூலகி என்பதற்குப் பெரிய உடம்புள்ளவள் என்றும், கர்ணகி என்பதற்குப் பெரிய காது உள்ளவள் என்றும், தந்தகி என்பதற்குப் பெரிய பல்லுள்ளவள் என்றும், மஸ்தகி என்பதற்குப் பெரிய தலையுள்ளவள் என்றும் அர்த்தமாகும். அவர்களை வேறு பெயர் கொண்டு அழைக்க விரும்பினல், அந்தப் பெயர்களில் இந்த அலங்கார அடைமொழிகள் இருக்க வேண்டும். பெயரில் என்ன இருக்கிறது? என்ன பெயர் சொன்னல் என்ன? மண்ணிலும் விண்ணிலும் நம் கற்பனைக்கு எட்டாத எத்தனையோ அற்புத அமைப்புகள் நம் தேகத்துக்குள்ளேயே இருக்கின்றன.

இந்த நான்கு பெண்களும் ஒரு நிமிஷமாவது பிரிந்து இருப்பதில்லை. அவர்கள் மிக்க சக்தி வாய்ந்தவர்கள். எவனவது ஒருவன் அவர்கள் போக்குக்கு இடைஞ்சலாக நின்றல், அவன் கதி அதோ கதி தான். ஸ்தூலகி பெரும் புயல் உண்டாக்குவதற்காக மூச்சை இழுப்பாள். தந்தகி நரநரவென்று பற்களைக் கடிப்பாள். மஸ்தகி பயங்கரமாகத் தலையை ஆட்டுவாள். கர்ணகி பிரம்மாண்டமான விசிறிகளைப் போன்ற தன் காதுகளை விரிப்பாள்.

நடுவேனிற் காலத்திலே ஒரு நாள் வெயில் மிக்க கடுமையாய் இருந்தது. இணைபிரியாத அந்த நான்கு பெண்களும் குளித்து விட்டு, வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். பாதை, புல் வெளியின் அருகே வளைந்து சென்றது. அந்தப்

பெண்கள் அருகே யிருந்த ஓர் ஆலமரத்தடியில் நிழலுக்கு ஒதுங்கினார்கள். அதற்குச் சற்று தூரத்துக்கு அப்பால் இருந்த மரத்திலேயே யானையைக் கட்டியிருந்தார்கள். திடீரென்று ஸ்தூலகிக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. அவள் அந்த மரத்தருகே சென்றாள். ஓசை கேட்காமல் இருப்பதற்காக யானையின் கழுத்திலே தொங்கிக் கொண்டிருந்த வெள்ளி மணியின் நாக்கைப் பிடுங்கி எறிந்தாள். வாயில் மென்று கொண்டிருந்த இனிய பனையோலையைப் பிடுங்கிக் கீழே எறிந்தாள். முன்னங்காலில் கட்டியிருந்த சங்கிலியை அவிழ்த்து விட்டு, யானையைத் தன் விசாலமான மார்பிலே யாருக்கும் தெரியாமல் செருகிக் கொண்டாள். வேலைக்காரர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அரை குறையாக முணு முணுத்துக் கொண்டும், முகத்தருகே இரைந்து கொண்டிருந்த ஈக்களை விரட்டிக் கொண்டும், ஒருபுறமிருந்து மறுபுறம் சாய்ந்து படுப்பதுமாக இருந்தார்கள். ஸ்தூலகி தன் தோழிகளுடன் வீட்டுக்குப் போனாள். நனைந்த சேலைக்குப் பதிலாகப் புதிய சேலையை அணிந்து கொண்டு, எல்லோரோடும் சேர்ந்து சாப்பிடத் தொடங்கினாள். மூச்சுத் திணறிய யானை, வெளியே எட்டிப் பார்க்க முயன்றது. ஆனால், அருகே உட்கார்ந்திருந்த தந்தகி நறுக்கென்று அதை ஒரு கடி கடித்தாள்.

ராஜா தூக்கத்திலிருந்து விழித்தார். பலகணி வழியே பார்த்தார். அதிசயத்தால் திடுக்கிட்டுப் போனார். மரம் காலியாயிருந்தது. யானையைக் காணோம்.

"எங்கே வேலைக்காரர்கள்?" என்று இரைந்தார் ராஜா.

அவர்கள் மெயில் வேகத்தில் ஓடி வந்து, தலைகுனிந்து அரசனை வணங்கினார்கள். "யானை எங்கே? மரத்தில் காணோமே!" என்று இடி முழக்கம் செய்தார் மன்னர்.

வேலைக்காரர்கள் உயிருக்கு அஞ்சி, பைத்தியம் பிடித்தவர்களைப் போல வெளியே ஓடிப் போய், காவலாளர்களைத் தட்டி எழுப்பினார்கள். நடுங்கிய குரலில் "யானை எங்கே?" என்று கேட்டார்கள்.

ஒருவன் எழுந்து உட்கார்ந்து, கண்ணைக் கசக்கிக் கொண்டே, "ஏன், மரத்தடியில் தான் இருக்கும்!" என்றான்.

"இல்லை. நீயே பார்."

காவல்காரன் பார்த்தான். இடி விழுந்தவன் போல அசைவற்று நின்றான். அங்குமிங்கும் ஓடினான், இரைந்தான், புலம்பினான். மற்றக் காவலர்களும் அங்குமிங்கும் ஓடினார்கள், புலம்பினார்கள். விரைவில் ஒரு பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. 'யானையைப் பார்த்தாயா?' 'யானையைப் பார்த்தாயா?' என்று ஒவ்வொருவனும் மற்றவனைக் கேட்டான். ராஜா பட்டத்தையே துறந்து வெளியே போயிருந்தாலோ, ராணிகளைப் பற்றியே அபவாதம் கிளம்பினாலோ கூட ராஜ்யத்தில் அவ்வளவு பரபரப்பு ஏற்பட்டிராது. பட்டப்பகலிலே, காவலாளர்களின் கண்ணுக்கு முன்னாலே, தம் அருமை யானை மறைவதென்றால் அது புரியக்கூடிய விஷயமாயில்லை.

ராஜாவுக்குக் கோபமும் துயரமும் பொங்கிக்கொண்டு வந்தது. யானையைக் கண்டுபிடிக்காவிட்டால், காவலாளர்களுடைய தலையை வெட்டிவிடப் போவதாகப் பயமுறுத்தினார். யானை

யைத்தேடிப் பிடித்துக்கொண்டு வருபவர்களுக்குப் பெரிய வெகுமதி கொடுப்பதாகவும் அறிவித்தார்.

நாட்கள் கழிந்தன. சலியாத, குன்றாத முயற்சிகளும் வீணாயின. ராஜ்யம் முழுவதும் துயரத்தில் ஆழ்ந்தது.

ஒன்றிரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் அந்த நான்கு பெண்களும் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தபோது, அந்தப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்த ஒருவன், ஸ்தூலகியின் மார்பிலிருந்து ஒரு தந்தம் வெளியே நீட்டிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதிசயத்தால் மெய் மறந்து நின்றான். பின்பு, ஆனந்த மிகுதியால் தலைகால் தெரியாமல் அரண்மனையை நோக்கி ஓடினான். 'யானையைக் கண்டுபிடித்து விட்டேன், யானையைக்கண்டுபிடித்து விட்டேன்' என்று கத்தினான். காவலாளர்கள் அவனை மன்னர் முன்பு அழைத்துச் சென்றார்கள். அவன் கொஞ்சமும் அஞ்சாமல் ராஜாவைப் பார்த்து, "மகாராஜா, நானே நேரில் என் கண்ணால் பார்த்தேன்: ஸ்தூலகி தன்னுடைய மார்பில் அதை ஒளித்து வைத்திருக்கிறாள்" என்றான்.

கோப மிகுதியால் அரசரின் மெய் துடித்தது. அந்த நால்வரையுமே கைது செய்து கொண்டுவந்து, தம் முன்னால் நிறுத்தும்படி காவலாளர்களுக்கு உத்தரவிட்டார்.

சற்று நேரத்துக்குள் அந்த நான்கு பெண்களும் ராஜ சபைக்கு முன்னால் ஆஜரானார்கள்.

"என்ன குற்றத்துக்காக இங்கே வந்திருக்கிறீர்கள், தெரியுமா?" என்றார் ராஜா.

அவர்களுடைய முகத்தில் யாதொரு விதமான மாறுதலும் இல்லை. வாய்பேசாமல் இருந்தார்கள். அவர்களுடைய மௌனத்தைக் கண்டு தர்பார் பிரமுகர்கள் அதிசய மடைந்தார்கள். "தெரியுமா?" என்று மறுபடியும் இரைந்தார் அரசர்.

ஸ்தூலகி மார்பை ஒரு குலுக்குக் குலுக்கினாள். யானை தொப்பென்று கீழே விழுந்து ராஜாவின் காலருகே உருண்டோடியது. ராஜ சபையோர் அதிசயத்துடன் பார்த்தார்கள். அரசரும் பார்த்தார். யானை செத்துக் கிடந்தது.

"பிசாசுகள்!" என்று பன்மடங்கு கோபத்துடன் உறுமினார் மன்னர் பெருமான். "இந்தக் கொடிய குற்றத்துக்காக உங்களுக்குக் கடுந் தண்டனை கிடைக்கும். உங்களுக்காகத் தனியாக ஒரு சிறைச்சாலை கட்டச் சொல்லப் போகிறேன். அங்கே, நீங்கள் உயிருள்ளவரை ஏங்கி ஏங்கிச் சாவீர்கள்" என்றார்.

கொத்தர்கள் படை ஒன்று திரண்டது. விரைவில் சிறை கட்டி முடிந்தது. கருங்கல் சுவர்கள். ஜன்னல்களுக்குப் பதிலாகச் சின்னஞ் சிறு துவாரங்கள். இடமோ, ஜன நடமாட்டம் இல்லாத பயங்கரமான ஒரு மூலை. அந்த நான்கு பெண்களையும் தனித் தனியே ஒவ்வோர் அறையில் அடைத்து வைத்தார்கள்.

ஆனால், அன்றிரவே மஸ்தகி தன்னுடைய தலையால் சிறைச் சாலைச் சுவர்களை மோதியிடித்துத் தள்ளினாள். கருங்கல் குறுமணலாயிற்று. அந்த மண்ணில்,

ஒவ்வொரு கைப்பிடி அள்ளிக் கொண்டுபோய் அரண்மனையின் நாலாபுறமும் வீசி எறிந்துவிட்டு, அவர்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், சிறைச்சாலை இடிந்து கிடப்பதையும் பெண்கள் தப்பிச் சென்றதையும் பார்த்து, எல்லோரும் அதிசயமடைந்தார்கள்.

அவர்களை மறுபடியும் கைது செய்து ராஜாவின் முன்பு கொண்டுவந்து நிறுத்தினார்கள் காவலாளர்கள்.

ராஜாவுக்குக் கோபம் பொங்கியது. "எங்களை ஏமாற்றி விட்டதாக நினைப்போ? இப்போது என்ன தண்டனை, தெரியுமா? நகரத்துக்கு வெளியே இருக்கும் பாறையில், இரும்புச் சங்கிலிகளால் உங்களைக் கட்டி வைக்கச் சொல்லப் போகிறேன்" என்றார்.

மன்னனுடைய ஆணையை நிறைவேற்றினார்கள் காவலாளர்கள். ஆனால், இரவு தோன்றி உலகெங்கும் இருள் கவிந்தபோது, தந்தகி தன் பல்லால் இரும்புச் சங்கிலிகளைச் சுக்குச் சுக்காகக் கடித்தெறிந்தாள்.

மூன்றும் முறையாக அவர்களைக் கைதுசெய்து அரசனுக்கு முன்பு கொண்டுவந்து நிறுத்தினார்கள். ராஜாவுக்குக் கோபம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"இம்முறை உங்களைக் கடலில் எறியச் சொல்லப் போகிறேன்" என்றார்.

காவலர்கள் அவர்களைக் கடலில் எறிந்தார்கள். ஆனால், கர்ணகி கடல் நீரை எல்லாம் தன் காதில் வாங்கிக் கொண்டாள்.

புத்திசாலி

இரண்டு குடிகாரர்கள் நன்றாய்க் குடித்துவிட்டு, அவரவர் மோட்டாரில் ஒருவர் அருகே ஒருவராக ரொம்ப வேகமாய்ச் சென்றார்கள். கொஞ்ச நேரம் கழிந்தது. அவர்களுள் ஒருவன் மற்றவனைப் பார்த்து, "நாம் நகரத்துக்கு அருகில் வந்து விட்டோம் போலிருக்கிறது" என்றான். "அது எப்படி உனக்குத் தெரிந்தது?" என்றான் மற்றவன். "இத்தனை பேர் மேலே வண்டியை ஏற்றிக் கொண்டு போகிறோமே, அது தான் கேட்டேன்" என்றான் மற்றவன்.

எல்லையற்ற ஆழ்கடலாக விளங்கிய நீர்ப்பரப்பு, மணல்பரப்பாக அடி வானத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

ராஜாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவர் பிரதம மந்திரியை அழைத்தார். அவர் வயதும் அறிவும் ஒருங்கே மிக்கவர். மந்திரி அரசரை வணங்கிவிட்டு, அவர் காதருகே சென்று, "அவர்களை நெருப்பில் வீசிவிடுங்கள். உயிரோடு எரித்து விடுங்கள், மகாராஜா!" என்றார்.

ராஜா மந்திரியின் புத்திசாலித்தனத்தை மெச்சிவிட்டு, அந்தப் பெண்கள் பக்கம் திரும்பி, "ஏ பிசாசுகளே, சிறைச்சாலையோ, இரும்பு விலங்குகளோ, கடல் நீரோ உங்களைக் கொல்லவில்லை. ஆனால், நெருப்பு உங்களை நிச்சயம் கொன்றுவிடும் என்று நினைக்கிறேன்" என்றார்.

ஒரு பெருந்தீயை மூட்டினார்கள். குதித்துக் கொழுந்து விட்டு எரியும் அந்த நெருப்பிலே நான்கு

பெண்களையும் தூக்கி வீசியெறிந் தார்கள். ஆனால், அந்தோ என்ன பிரயோஜனம்! கர்ணகி நெற்றி யின் இரு புறமும் பிடித்து உலுக்கினாள். உள்ளே கொந் தளித்துக் கொண்டிருந்த கடல் நீர் எல்லாம், மடை திறந்தது போலப் பொங்கி நெருப்பில் பாய்ந்தது.

ராஜா உணர்வு இழந்தவர் போல அதை வெறித்து நோக்கி னார். வெட்கத்தால் அவர் தலை குனிந்தார்.

அவர் மிக்க தாழ்மையாக, "நான் தோற்றுப் போனேன். உங்களுக்கு அபாரமான வல் லமை இருக்கிறது. இப்போது கௌரவமாகச் சமாதானம் செய்துகொள்ளலாம்" என்றார்.

அந்த இணைபிரியாத் தோழிகள் நால்வரும் சிரித்தார்கள்.

"எந்த முறையில் சமாதானம் செய்து கொள்ளலாம்?" என்று கேட்டார் ராஜா.

"இனிமேல் எங்களைத் துன் புறுத்தக் கூடாது. எங்களைப் பட் டாளத்தில் சேர்த்துவிடுங்கள். நாங்கள் இரவு பகலாக உங்கள் ராஜ்யத்தைக் காப்போம். உங் கள் ராணுவமும் சேனபதிகளும் ராஜ்யத்துக்கே அவமானமா யிருக்கிறார்கள்."

✲

ஆகாகானின் பிரதாபங்கள்

அமெரிக்க ஆசிரியர் ஜான் கந்தர் சொல்லுகிறார்:

கோஜா முஸ்லீம்களின் தலைவராகிய ஆகாகான், நபிகள் நாயகத் தின் வம்சாவளியைச் சேர்ந்தவராம். அவர் தெய்வ அவதாரமென்று பல முஸ்லீம்கள் அவருக்கு வழிபாடு செய்கிறார்கள். முஸ்லீம் உலகில் அவருக்குள்ள செல்வாக்கு அபாரம். அவர் குளித்த நீரை, ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் விலை கொடுத்து வாங்குகிறார் கள்.

ஆனால், ஆகாகானுக்கு மதத்திலோ மத அநுஷ்டானங்களிலோ நம்பிக்கை யிருப்பதாகத் தெரியவில்லை. அவர் குடிக்கிறார். மது அருந்து வது முஸ்லீம் மதத்தில் பெரும் பாவம். இதற்கு அவர் சொல்லும் சமா தானம் வேடிக்கையாய் இருக்கிறது: "தொண்டைக்குள்ளே போனதும் அது தண்ணீராய் மாறிவிடுகிறதே, இதில் பாவம் என்ன இருக்கிறது?" என்கிறாராம்.

அவர் ஆடம்பரப் பிரியர். மிதமிஞ்சிய உல்லாசத்திலே காலங் கழிப்பவர். இதை ஒரு முஸ்லீம் பக்தர் அவரிடம் குறிப்பிட்டு, "எளிய வாழ்க்கை வாழவேண்டுமென்று நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார். நீங்கள் இவ்வளவு ஆடம்பரமாக வாழ்வது சரியா?" என்று கேட்டார். அதற்கு அவர், "நீங்கள் என்மேல் வைத்திருக்கும் பக்தியைப் பரிசோதிப் பதற்காகவே, இந்தமாதிரி நான் வாழ்கிறேன்" என்றாராம்.

சில பழமொழிகள்

கடிப்பது மூட்டைப் பூச்சி; ஆனால், உதை வாங்குவது கட்டில்.

—குஜராத்தி

யானை குழியில் விழும்போது, தவளை கூடப் பின்னாலிருந்து ஓர் உதை கொடுக்கிறது.

—வங்காளம்

பிள்ளை வளர்ப்பு

சரோஜா ராமமூர்த்தி

குழந்தை வளர்ப்பைப் பற்றி அநேகர் கட்டுரைகள், புஸ்தகங்கள் எழுதி இருக்கிறார்கள். என் கணவரும் அடுக்கடுக்காக அந்தப் புஸ்தகங்களை வாங்கித் தந்து, "குழந்தை கிட்டுமணியைச் சமர்த்தாக வளர்க்க வேண்டும், தெரிந்ததா?" என்று உத்தரவிட்டார். அப்பொழுது கிட்டுவுக்கு ஒரு வயது. நானும் "ஆஹா, தெரிந்தது!" என்று பதவிசாய்ப் புஸ்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டேன். தினம் ஒரு மணிநேரம் அந்தப் புஸ்தகங்களைப் படிப்பதற்கென்று ஒதுக்கி வைத்துக்கொண்டேன். இன்றையக் குழந்தைகள்தானே வருங்காலத்துப் பிரஜைகள்? கிட்டுவும் சமத்தாக இருக்கவேண்டும். நாலு பேர்களிடம் பழகும் மரியாதை தெரிந்திருக்க வேண்டும், என்றெல்லாம் ஆசை உண்டு எனக்கு.

இந்தக் குழந்தை வளர்ப்பு விஷயத்தில், அவன் அப்பாவுடைய கடமை, சம்பாதித்துக் கொடுப்பதுடன் நின்று விடுகிறது. சிறு விஷமம், துஷ்டத்தனம் செய்தாலும் நான்தான் பொறுப்பாளி ஆகிவிடுகிறேன்.

புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு சமையல் ஆரம்பமாகி விடுகிறது இந்த நாளில். அதே மாதிரி புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு குழந்தையை வளர்க்கச் சொல்லுகிறார் ஒரு பிதா. தாயும் அப்படியே செய்கிறாள். ஆனால், அதிலே **என்ன விநோதங்கள் நிகழ்கின்றன!**

ஒரு தினம் குழந்தை வளர்ப்புப் புஸ்தகம் ஒன்று படித்துக் கொண்டிருந்தேன். அதில் குழந்தைகளைக் கதைசொல்லி நல்ல வழியில் வளர்க்கலாம். வீரம் நிறைந்த கதைகளைத் தன் அன்னையிடமிருந்து கேட்டதால்தான் சிவாஜி மகா வீரனாக விளங்கினார் என்றெல்லாம் எழுதியிருந்தது. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த கிட்டுவைக் கூப்பிட்டேன். அவனுக்கு வயது ஆறு.

"வரமாட்டேன், போ அம்மா" என்றான்.

எனக்குக் கோபம் வந்தது. இருந்தாலும், குழந்தைகளிடத்தில் கோபத்தைக் காண்பிக்கக் கூடாது அல்லவா? வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு "வாடா கண்ணு, நல்லதாய் ஒரு கதை சொல்றேன்" என்று கூப்பிட்டேன்.

"கதையா அம்மா சொல்லப் போறே, நேக்கு? வேண்டாம் போ. நேத்திக்கி மைசூர்ப்பாகு பண்ணினையே, அதுலே ரெண்டு கொடுத்தா வரேன்" என்று பதில் சொன்னான் கிட்டு.

கதை கேட்பதற்கு நிபந்தனை! இரண்டு மைசூர்ப்பாகு கொடுப்பதற்கு, அவனுக்கு உடம்பு சரியில்லை. சாப்பிட்டால் ஒத்துக் கொள்ளாது.

"ஆகட்டும், வாடா" என்றேன்.

குழந்தை வந்து உட்காரந்தான். "முதலில் கதை சொல்றேன். சமத்தாய்க் கேட்கணும்" என்று கதையை ஆரம்பித்தேன்.

"ஒரு பெரிய பட்டணத்தை ராமர் என்று ஒரு ராஜா ஆண்டுவந்தார்" என்று ராமாயணத்தை எடுத்துக்கொண்டேன். கிட்டுவின் முகம் ஒரு மாதிரியாக மாறியது. கையில் இருந்த சாக்குத் துண்டால் குரங்குப் பொம்மை போட ஆரம்பித்தான்.

"என்னடா இது, விஷமம்?" என்று அதட்டிவிட்டுத் திரும்பவும் ஆரம்பித்தேன்.

"போம்மா, அன்னிக்கு எதிராத்து அம்புலு வாலில்லாக் குரங்குக் கதையைச் சொன்னளே, அதெல்லாம் உனக்குத் தெரியலேயே!" என்று ஆரம்பித்தான் கிட்டு.

என் புத்திரன் பெரிய வீரனக வேண்டும். தைரியம் நிறைந்தவனக இருக்க வேண்டும் என்றல்லவா நான் ஆசைப்படுகிறேன்? வாலில்லாக் குரங்குக் கதைதான் அவனுக்குப் பிடித்திருக்கிறது! குழந்தை உள்ளம் தானே? திருத்தி விடலாம் என்று, "அதெல்லாம் நன்னவே இருக்காது. இதைக் கேளடா, அப்பா!" என்றேன்.

"எனக்கு வாண்டாம், போ. ரெண்டு மைசூர்ப்பாகு கொடு" என்று பழைய பாடத்தை ஆரம்பித்துக் கொண்டான். அவனை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டேன்.

"எனக்கு வாண்டாம் போ, அம்மா. நான் எதிராத்து அம்புலு கிட்டே பூதம் கதை கேக்கப் போறேன்" என்ற பல்லவியைப் பாடிவிட்டு, கிட்டு ஓடிவிட்டான்.

அவன் ஓடிவிட்டதால் நான் வருத்தப்படவில்லை. "கதை சொல்லித் திருத்தவாவது!" என்று சமாதானப் படுத்திக் கொண்டேன். முதல் முயற்சி இவ்வித மாயிற்று.

விளையாட்டு விஷயத்திலும் ஒரு குழந்தையைப் போல் இன்னென்று இருப்பதில்லை. எங்கள் கிட்டுவுக்கு ஓடி விளையாடவே பிடிக்காது. அதனல், அவன் ஆரோக்கிய மற்றவன் என்பதில்லை. காலிலும், கையிலும் மண்ணைப் பூசிக் கொள்ளமாட்டான். அவன் சிநேகிதி ஒரு பெண்! அந்தக் குழந்தையும், கிட்டுவுமாகச் சேர்ந்துதான் பள்ளிக்கூடம் போவார்கள். அவன் சிநேகிதி அழகாக இருப்பாள். அவளோடு அண்ணன்-தங்கை விளையாட்டு விளையாடிப் பொழுது போக்குவான்.

"என்னடா, சதா அவளோடேயே சுத்தறே!" என்று அவன் வகுப்புப் பையன்கள் அவனைக் கேலி செய்வார்கள். அதையெல்லாம் கிட்டு பொருட்படுத்துவ தில்லை.

"குழந்தை வளர்ப்புப் புஸ்தகங்களெல்லாம் அலமாரியில் கறையான் அரித்துப் போகிறதே, நீ படிப்பதில்லையா என்ன?" என்று அவனுடைய அப்பா என்னைக் கேட்டார்.

"ஆமாம், எட்டுச் சுரைக் காய்!" என்று நிஷ்டூரமாக ஆரம்பித்தேன். "என்?" என்று அவர் ஆச்சரியத்துடன் என்னைக் கேட்டார். "உங்கள் பிள்ளை புஸ்தகத்தில் போட்டிருக்கும் அளவு பால்தான் சாப்பிடுகிறுனு,

என்ன? அவனுக்கு வயிறு பெரிசு! நான் நாலு அவுன்ஸ் போதும் என்று கொடுத்தால், 'வீல் வீல்' என்று பசி அடங்காமல் கத்தும். அதே மாதிரிதான் இருக்கு மற்ற விஷயங்களும்'' என்றேன்.

''என் சிநேகிதன் பெண் ஒன்றை அதன் தாயார் இப்படித்தான் வளர்த்தாளாம். ரொம்பச் சமத்தாக இருக்குக் குழந்தை'' என்றார் இவர்.

''கிட்டு மாத்திரம் என்ன அசடா?'' என்று கேட்டேன். உண்மையில் எனக்குக் கோபம்தான் வந்தது.

''யாராவது அவனை ஒரு கேள்வி கேட்டால் பத்துப் பதில் சொல்லி விடுகிறான். இந்த அதிகப் பிரசங்கித் தனமெல்லாம் அந்தக் குழந்தையிடம் கிடையாது. பாரேன் அன்றைக்கு: 'உன் பெயர் என்னடா?' என்று சீனு கேட்டான், கிட்டுவை. இவன் பெயர், வயசு, படிக்கிற பள்ளிக்கூடம், வீட்டுச் சமையல் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டான். 'பலே கைகாரப் பயல்' என்று அந்த அசடு ஆச்சரியப் பட்டு விட்டான்.''

''சீனு ஒன்றும் அசடு இல்லை. சமத்தாகப் பொரித்துக் கொட்டி இருக்கிறான் குழந்தை. அசட்டுத்தனம் ஒன்றையும் காணோமே. குழந்தை பேசுவதற்குக் கூடக் கட்டுப்பாடா, என்ன?''

''கேட்டதற்குப் பதில் இல்லாமல் அதிகமாகப் பேசி விடலாமோ?'' என்றார் இவர்.

அவரோடு தர்க்கம் செய்ய என்னால் முடியவில்லை. ஊரி-

> **நடக்காத சம்பவம்**
>
> டங்கர்க் சம்பவம் நிகழ்ந்த கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, லண்டனிலிருந்த அமெரிக்க விமான தளபதிக்கு, ஓர் அமெரிக்க ஆசிரியர் பின் வரும் தந்தி கொடுத்தார்:
>
> ''பெருந் தொகை கொடுக்கத் தயார். ஜெர்மானியர்கள் லண்டனுக்குள்ளே நுழையப் போவதை நேருக்கு நேர் பார்த்து 25,000 வார்த்தைகளுக்குள் ஒரு கட்டுரை எழுதுங்கள்.''

லிருந்து என் அம்மாமி வந்தாள். பல விஷயங்களிலும் பரிச்சயம் உள்ளவள்.

குழந்தை வளர்ப்பைப் பற்றி-நான் கலியாணம் செய்து கொண்ட புதிசில் என்னிடம் அவள் ஓர் அத்தியாயம் படித்தாள். அப்பொழுது அவளுக்கு ஒரே குழந்தை.

''என்ன, அம்மாமி? உங்கள் விஷயமெல்லாம் எப்படி? உங்கள் நந்து சமத்துத்தானே?'' என்று குத்தலாகக் கேட்டேன்.

''ஆமாண்டி, அம்மா! என் முதல் பிள்ளை நந்துவுக்குத்தான் புஸ்தகத்திலே படித்த மாதிரி செய்து பார்த்தேன். அது பொல்லாத யமன்! அதெல்லாம் முடியாது, அம்மா'' என்று தலையை ஆட்டினாள் அம்மாமி.

''ஏன்?'' என்று கேட்டேன்.

''குழந்தைகளை அடியோடு அசடாக்க நாம் என்ன முட்டாள்களா? அதனதன் போக்கை அனுசரித்து நாம் செய்ய வேண்டும். புஸ்தகத்தை வைத்துக் கொண்டு 'எக்ஸ்பெரிமெண்ட்'

செய்யக்கூடாது. தாயார்கள் தான் கெட்டிக்காரர்களாய் இருக்கவேண்டும்'' என்ருள்.

"என்ன, நீங்களே இப்படிச் சொல்லி விடுகிறீர்களே?'' என்றேன். "நான் என்ன சொல்லக் கிடக்கிறது? என் மூத்த பிள்ளை நந்துவே தேவலை என்று சொல்லலாம். மற்றதுகள் ஒன்றைவிட ஒன்று பொல்லாத ஜந்துக்கள்! அதுகளை அடக்க முடிகிறதா, என்ன?''

"கிட்டுமணியின் விஷமமும் சொல்லி முடியாது'' என்றேன்.

"உன் பிள்ளைக்கு நல்ல குணங்கள் இருக்கிறதடி. அதிகமாக மிரட்டி அதையும் மண்டு ஆக்கி விட்டாதே!'' என்று எச்சரித்து விட்டுப் போனுள் அம்மாமி.

"அம்மாமி சொன்னதைக் கேட்டீர்களோ இல்லையோ?'' என்றேன் இவரிடம்.

"பொம்மனாட்டிக ளெல்லாம் அவ்வளவுதான்'' என்ருர்.

"கிட்டுமணி என்னல் கெட்டுப் போனது இருக்கட்டும், கிரிஜாவை நீங்களே ஒரு வயதிலிருந்து சமத்தாகப் பழக்கிக் கொண்டு வாருங்களேன்!'' என்றேன்.

திருட்டுச் சிரிப்புடன், "அதெல்லாம் எங்களுக்கு ஒத்து வருமா?'' என்று தலையை ஆட்டிவிட்டார், குழந்தை வளர்ப்புப் பிரசார கர்த்தா.

சரியான கடிதம்

ராணுவ வைத்தியர் மேலதிகாரிக்குப் பின் வருமாறு கடிதம் எழுதினுர்:

"எறும்பு உபத்திரவத்தைப் போக்க மருந்து வேண்டுமென்று நான் கேட்டதற்கு, நீங்கள் முடியாதென்று சொல்லிவிட்டதால், தளபதிக்கு மனுச் செய்தேன். கட்டிடத்துக் குள்ளே எறும்பு இருந்தால் அதைப் போக்க மருந்து கொடுப்பதில் தமக்கு ஆட்சேபம் இல்லையென்றும், ஆனல் கட்டிடத்துக்கு வெளியி லிருக்கும் எறும்பைக் கொல்ல வேண்டுமானுல் அதற்கு இஞ்சினீரிங் அதிகாரியிடம் மருந்து கேட்கவேண்டும் என்றும் அவர் சொன்னுர். இப்போதைய நிலைமையில், உள்ளே யிருக்கும் எறும்பு எது, வெளியே யிருக்கும் எறும்பு எது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டம். உள்ளே யிருக்கும் எறும்புகள் சில, இரைதேடி வெளியே வருகின்றன. அதைப்போல, வெளியிலிருக்கும் எறும்புகள் உள்ளே போகின்றன. இதில், எது உள்ளேயிருந்து வெளியே போகிறது, வெளியிலிருந்து எது உள்ளே வருகிறது, எது இஞ்ஜினீரிங் எறும்பு, எது தளபதி எறும்பு என்பதைக் கண்டுபிடிக்க எங்களால் முடியவில்லை; குழப்பமா யிருக்கிறது. அசட்டுப் பிசட் டென்று ஏதாவது செய்தால், தளபதி கொடுக்கும் மருந்தால் இஞ்ஜினீரிங் எறும்பும், இஞ்ஜினீர் கொடுக்கும் மருந்தால் தளபதி எறும்பும் செத்துப் போகும். அது சட்டத்துக்கு விரோதம். பின்பு நான் விரிவான சமாதானம் சொல்ல வேண்டியதாய் நேரும். தாங்களும் விசாரணை செய்யத் தொடங்குவீர்கள்.

"ஆகையால், இந்தத் தரும சங்கடத்தைத் தவிர்ப்பதற்காக, இஞ்ஜினீயரும் மருந்து கொடுக்கட்டும்; தளபதியும் மருந்து கொடுக்கட்டும். எந்த மருந்து எந்த எறும்பைக் கொன்றது என்பது தெரியாமல் இருப்பதற்காக, இண்டு மருந்தையும் ஒன்ருகக் கலந்து உபயோகித்து விடுகிறேன்.''

அவள் படம்

கே. வெங்கடாசலம்

செல்லையா பிரமநாயகம் பிள்ளையின் செல்லப் பிள்ளை. பிரமநாயகத்தின் மனைவி அடிக்கடி சொல்லுவாள் : "நமக்கு இருப்பது ஐந்தா, ஆறு? கருவேலம் போல ஒண்ணு. அவனுக்கு இல்லாத பணம் எதுக்கு?" என்று. ஆனால், பிள்ளைவாள் நாலுமறிந்த மனுஷர். 'பிள்ளையாண்டான் போக்குச் சரியில்லை' என்பது அவர் கருத்து. அவனுடைய தந்தை இடையிடையே அவனைக் கண்டித்தும் வந்தார். தாயின் செல்லத்துக்கும், தந்தையின் கண்டிப்புக்கும் நடுவே, செல்லையாவின் குண வளர்ச்சி ஊசலாடிக் கொண்டிருந்தது.

அவன் வீட்டுக்கு எதிர் வீடு பிள்ளையார் கோவில் பூசாரி ஓதுவா மூர்த்திகளின் கிரகம். கோவிலுக்கு மான்யமாக ஊரார் விட்டிருந்த நஞ்சையி லிருந்து கிடைக்கும் சொற்ப வருவாயில் அவர் குடும்பம் ஜீவித்துவந்தது. அவருக்கு ஒரு மகள் உண்டு. அவள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாது. பூசாரியின் மனைவியோ நோயும் பாயுமாகக் கிடந்தாள். பெண் பார்வதி, பார்ப்பதற்குச் சுந்தரமாக இருப்பாள். 'மஞ்சாடி' பொன்கூட அவள் உடலில் ஏறவில்லையானாலும், அவள் அழகு என்னவோ அமானுஷிகமா யிருந்தது. அவளது மருண்ட பார்வைச் சுழலில், செல்லையா அடிக்கடி சிக்கிக் கொள்வான். அவன் பார்வதியைக் காணும் போதெல்லாம் புதியதோர் உணர்ச்சி பெற்றான். அவளது எளிமைக்கும், தன் செல்வத்துக்கு மிடையே பெரிய பாதாளம் ஒன்று இருப்பதை அவன் உணராமல் இல்லை.

அது என்றோ ஒருநாள் நிகழ்ந்த சம்பவம். பதினைந்து வருஷங்களுக்குப் பின்னால் அவன் சொந்த ஊருக்குத் திரும்பி வருகிறான். வரும் வழியிலே, அவனுடைய பழைய செயலின் விளைவு என்ன விபரீதமான சந்தர்ப்பத்தை உண்டாக்குகிறது!

முதலில் உதித்த சாதாரண அன்பு நாளாவட்டத்தில் நெருங்கிய நட்பாய் வலுப்பெற்றது, செல்லையா பார்வதியை முழு மனதுடன் நேசித்தான். இருவர் ஆவியும் ஒன்றுகலந்துவிட்டது.

செல்லையாவின் தந்தை அவனுக்கு ஒரு பெண் நிச்சயம் செய்து, விவாகத்தேதியும் குறிப்பிட்டு விட்டார். செல்லையாவுக்கும் பார்வதிக்கும் ஏற்பட்டிருந்த உறவு பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. தெரிந்திருந்தால்தான் என்ன? பெரிய பண்ணை வீட்டுப் பிள்ளை, கேவலம் 'கல் கழுவி' வயிறு வளர்க்கும் ஓதுவாரின் பெண்ணை மணப்பது தகுதியாகுமா?

செல்லையாவோ சபல புத்திக்காரன். அவனுக்கு உணர்ச்சி உண்டு; ஆனால், கோழை. அவன் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆயிற்று. ஒரு பக்கம் பெற்ற தாயும் தந்தையும்; மறு பக்கம் கள்ளங் கபடு இல்லாத பார்வதி. அவன் நினைவெல்லாம், எப்படிக் கல்யாணத்தைத் தவிர்ப்பது என்பதிலேயே சென்றது. இறுதியில் வாலிபப் பிராயத்

துக்கென்று உதிக்கும் அவலமான முடிவை மேற்கொண்டான். நடு ஜாமத்தில் செல்லையா கள்ளனைப்போல் மறைந்தான்.

விடிந்தபோது பிரமநாயகம் பிள்ளையின் வீட்டில் ஒரே ஆரவாரம்; கூக்குரல். செல்லையாவைக் காணவில்லை. இந்தச் செய்தி பார்வதியின் செவிகளில் காய்ச்சிய இரும்புக் குழம்புபோல் பாய்ந்தது. அவள் கல்லாய்ச் சமைந்துபோனாள். தன் அறைக்குள் போய் அலமாரியைத் திறந்தாள். செல்லையாவின் புகைப் படம் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. படத்தை எடுத்துப் பார்த்தாள். அதன் பக்கத்திலே தன் படம் ஒன்றையும் வைத்துப் பார்த்தாள். அப்போது மனம் தாளாமல், அவள் கண்களிலிருந்து முத்து முத்தாய்க் கண்ணீர்த் துளிகள் திரண்டு, படங்களின் மீது சிந்தின.

ஒரு மாதங்கூடக் கழியவில்லை. பார்வதியின் மேனி வெளிற ஆரம்பித்தது. இயற்கைக் கோளாறுகள் தென்படலாயின. என்ன செய்வாள் பேதை? செல்லையா இப்படிச் செய்வான் என்று அவள் கனவிலும் கருதவில்லை. ஊரில் செய்தி இறக்கை கட்டிப் பறந்தது. ஓதுவா மூர்த்தியை, 'சமூக ரட்சகர்கள்' பஞ்சரித்தார்கள். அவரும் அவர் மனைவியும் ஆருயக் கண்ணீர் பெருக்கினர்கள். பார்வதியின் பெண்மையுள்ளத்தில், இது தைத்தது. செல்லையாவின் வழியைப் பின்பற்றுவதைத் தவிர, அவளுக்கு வேறு வழியில்லை. ஆனல், எதிரே அந்தகாரம் சூழ்ந்து அவளை வாட்டியது. ஒரு நாள் பார்வதியும் மறைந்தாள். அப்போது அவள் மூன்றுமாதக் கர்ப்பிணி. சமூகம் என்ற உணர்ச்சியில்லாத இயந்திரத்தின் பழிப்புக்குப் பயந்து, அவள் இருளோடு இருளாய் மறைந்தாள்.

கிராமத்தைப்போல் பட்டணம் அவ்வளவு இரக்கமற்றிருக்கவில்லை. இளமையும் வனப்பும் கொண்ட ஒரு யுவதிக்குப் புகலளிக்க, தாசி குஞ்சரி முன்வந்ததில் ஆச்சரியம் இல்லை. பார்வதியும் யோசித்துப் பார்த்தாள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் குஞ்சரியின் சவரணையில் இருக்க ஒப்புக்கொண்டாள். சில மாதங்களில் அவளுக்கு 'மூக்கும் முழியுமா'க ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவள் மனதில் சதா ஒரு போராட்டம் நிகழ்ந்தது. குழந்தைக்காக உயிர் வாழ்ந்து மனம் வெந்து மண்ணுவதா?

அவளுக்கு என்ன தோன்றியதோ, ஒருநாள் குஞ்சரியைக் கூப்பிட்டுக் கூறினள்: "அக்கா! நான் அதிக நாள் ஜீவித்திருக்கப் போவதில்லை. குழந்தை உங்கள் அடைக்கலம். அவளை நல்லதனமாக இருக்கச் செய்யுங்கள்." குஞ்சரிக்கு ஒன்றும் புரியவில்லை. பார்வதி கை குவித்து வணங்கியபோது, குஞ்சரியின் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. அதன்பின் பார்வதி ரொம்ப நாள் வாழ்ந்திருக்கவில்லை. அவளது மனநோயே அவளுக்கு எமனய் முடிந்தது.

காலதேவனின் ரதம் ஊர்ந்தது; பதினைந்து ஆண்டுகள் ஓடின. எங்கும் மாறுதல்கள். முதலில் ஊரை விட்டு ஓடிய செல்லையா நேரே பம்பாய்க்குப் போனன். அங்கே வீதி வீதியாக அலைந்தான். எங்கே போனலும் பார்வதியின் நினைவு, அவனை உணர்ச்சியற்ற மரமாக்கிவிடும். அவன் நரக வேதனையை ஒவ்வொரு

கணமும் அனுபவித்தான். இதிலிருந்து விடுபட ஒரு மார்க்கம் கண்டுபிடித்தான். அது தான் குடி; மதியை மயக்கும் மது. கிண்ணத்திலுள்ள மதுவைக் கடைசித் துளிவரை உறிஞ்சிக் குடிப்பான். அந்த வெறியிலே, போதையிலே, பார்வதி எப்படித் தோன்றுவாள்? கிடைத்தது பேய்க் களிப்பு! அவன் அதிர்ஷ்ட சக்கரமும் சுழன்றது. கூடிய சீக்கிரத்தில் செல்லையா பம்பாயின் பிரபல புரோக்கர்களில் ஒருவனானன். அவன் கையில் பணம் புரண்டது.

பதினைந்து ஆண்டுகளை அவன் குடியிலும் கேளிக்கைகளிலும் கழித்தான். அந்த வாழ்க்கை அவன் உணர்ச்சியை மரத்துப் போகச் செய்தது. திடீரெனத் தான் பிறந்த ஊர் நினைப்பு அவனுக்கு வந்தது. அவன் தேகம் சிலிர்த்தது. ஊர் திரும்ப ஆசை. ஆனால், எப்படி? அங்கே யார் இருக்கிறார்களோ? யார் இல்லையோ? பார்வதி! ஐயோ! பார்வதி!...அவன் நடுங்கினான். இப்படிப் பல நாள் மனக் தவிப்பிலே கழிந்தன. கடைசியில் ஒருவாறாகத் தீர்மானித்து, கையில் நிறையத் திரவியத்தை எடுத்துக் கொண்டு, சென்னைக்குப் புறப் பட்டான்.

பட்டணத்தை ஒரு வாரம் சுற்றிப் பார்த்துவிட்டு, பிறகு கிராமத்துக்குப் போகலாம் என்ற எண்ணம். பட்டணத்தில் செல்லையா, ஒரு பெரிய ஹோட்டலில் தான் ஜாகை வைத்துக்கொண்டான். அங்கே மேல் பிடிக்க, கால் பிடிக்க, மற்ற ஊழியங்கள் புரிய எல்லாவற்றுக்கும் ஆள்கள் கிடைப்பார்கள். ஏனெனில், அது 'பெரிய மனிதர்கள்' வந்து தங்கும் ஹோட்டல். ஒரு நாள் இரவை உல்லாசமாக அங்கேயே கழிப்பதற்கும் சௌகரியங்கள் கிடைக்கும். செல்லையாவுக்கும் அந்த விதமான ஆசை இல்லாமலில்லை. அவன் வெளியே சுற்றியே ஓர் இரவைக் கழிக்க விரும்பினான். பலாப் பழத்தை மொய்க்க, ஈக்களைப் பிடித்து விடும் வழக்கமுண்டா? செல்லையாவின் ஆடையலங்காரங்களையும் இதர படாடோபங்களையும் கண்டவுடனே. செல்லையாவின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நபர்கள் தாமாகவே வந்து சேர்ந்தார்கள். எல்லா விஷயங்களும் நிர்ணயமாயின. செல்லையாவும், மாப்பிள்ளைக் கோலத்தோடு புறப் பட்டுவிட்டான்.

இரவு மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும். வானவீதியில் பவனி வந்து கொண்டிருந்த சந்திரனை மேகங்கள் மறைத்தன. செல்லையா அந்த மனிதனுடன் புறப் பட்டுச் சென்றான். அவள் வீடு ஒதுப்புறமாய் அமைந்த ஒரு பெரிய வீடு. அது அன்று கோலாகலமான சிங்காரத்தோடு காட்சியளித்தது. சீமான் செல்லையா விஜயம் செய்யும்போது, அலங்காரத்துக்குக் கேட்கவா வேண்டும்? வாசலில் அந்தச் சுந்தரி செல்லையாவை வரவேற்றாள், மங்கிய நிலவொளியில் அவன் அவள் முகத்தைக் கண்ணுற்ற போதே, செல்லையாவின் மனம் ஒருவகைக் கலக்கம் கொண்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டான்.

அந்த யௌவன மோஹினி, மலர் தூவிய மஞ்சத்திலமர்ந்து மாங்கல்ய தாரணம் செய்த கணவன் அருகே யிருப்பவளைவிட அதிக உரிமையுடன் அவனுக்குத் தாம்பூலம் அளித்தாள்; பின்பு

தானும் தரித்துக் கொண்டாள். அபூர்வ காந்தி வீசும் அவள் முகத்தைப் பார்க்க, என்னவோ அகாரணமாய் அவன் கண்கள் கூசின. ஏதோ முள் படுக்கையில் உட்கார்ந்திருப்பது போல், அவன் மனது சஞ்சலப்பட்டது. அவன் பார்வை மருள் கொண்ட மானின் விழிகளைப் போல், அங்கு மிங்கும் சஞ்சரித்தது. சட்டென்று அவன் எழுந்திருந்தான்.

“ஏன் எழுந்திருக்கிறீர்கள்? மேலெல்லாம் வியர்வையா யிருக்கிறதே. விசிறட்டுமா?” என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அந்தப் பெண்.

அவன் வெறுமையே தலையை அசைத்தான். ஆனால், திரும்பிப் பார்க்கவில்லை. கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தான்; வெறும் மெஷின் மாதிரி நடந்தான்.

ஒரு படத்தருகே திடீரென்று அவன் கண்கள் வெறித்து நின்றன. கால்கள் தள்ளாடின, ஒரு கணம் அந்தப் படத்தைப் உற்றுப் பார்த்தபின், பின்னே திரும்பி அந்தப் பெண்ணை நோக்கினான்.

அவள் புன்முறுவலுடன், “என்னவோ போல் இருக்கிறீர்களே! வந்தபோதிருந்த சந்தோஷமில்லையே? உடம்புக்கு ஏதாவது அசௌக்கியமா?” என்று கேட்டுக் கொண்டே அவன் சமீபமாய் வந்தாள்.

அவள் வார்த்தை ஒன்றும் அவன் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவன் அது ஒன்றையும் கவனிக்கவே யில்லை. பின்னும் இரண்டு மூன்று தரம்

அபிப்பிராயம் மாற வழி

“அம்மா, ராமு மாமா வேதாந்த விஷயங்களைப் பற்றி என்ன மாதிரியாகப் பேசுகிறார் என்று நினைக்கிறாய்! சொர்க்கம் தான் உண்டு; ஆனால், நரகம் என்ற ஒன்று கிடையவே கிடையாதென்று அவர் சொல்லுகிறார்.”

“நல்லது மகளே, அவனை நீ கல்யாணம் செய்து கொள். அவனுடைய அபிப்பிராயம் மாறி விடும்.”

இவளையும் படத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

பின்பு, திக்கிய குரலில், “இது ...இது...இது யார் படம்? உனக்கு......இது யார்?” என்று கேட்டான்.

படம் மிகவும் கௌரவமான ஸ்தானத்தில் மாட்டி யிருந்தது. வாடிய ரோஜா மாலை ஒன்று அதை அலங்கரித்துக் கொண்டிருந்தது. சாம்பல் விழுந்த ஊதுவர்த்திகள் பக்கத்திலே குத்தியிருந்தன.

“இது யார்?” என்று அவளை அவன் மீண்டும் கேட்டான்.

“என் தாயாருங்க. இறந்து போச்சு. எனக்கே அதைத் தெரியக்கூடத் தெரியாது. நினைவு தெரியறத்துக்குமுன்னே இறந்து போச்சு” என்று ஈனக்குரலில் அவள் சொன்னாள்.

“உன் தாயார்! உன் தாயார் பார்வதியா!” என்று கூச்சலிட்ட அவன், இதுவரையில் தன் உடம்பிலே தீண்டக் கூடக் கூசிய அந்தப் பெண்ணை, பித்துப் பிடித்தவன் மாதிரி இரு கையும் நீட்டிக் கட்டியணைந்து கொண்டு, ஏதோ சிறு குழந்தையை வாரியெடுத்தவன் போல

உச்சி முகந்து கண்ணீர் விட்ட வண்ணம், "ஐயோ படுபாவி நான் என்ன செய்தேன்! நீ பார்வதியின் மகளா!...... பார்வதி! பார்வதி! பார்வதி!" என்று உச்சரித்த வண்ணம் மெல்லமெல்லக் குரல் தாழ்ந்து கண்ணை மூடிக் கொண்டான்.

அவன் மெய்மறந்து மூர்ச்சையற்றவன் போலிருந்தது கண்ட அந்தப் பெண்ணுக்கும், அவன் பிடிப்பை விட்டு அகல விருப்பமில்லை. தன்னையறியாத ஓர் உணர்ச்சிபற்றியவளாய், அவன் முகம், கண், காது, கன்னம், நாசியை யெல்லாம் அவள் தடவிக் கொடுத்துக் கொண்டே, "ஐயோ பாவம்! இவர் யாரு!" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

அவன் பிடி தளர்ந்து, பரபரப்பு நின்றதும், அவள் மெள்ள அகன்று ஒரு கூஜாவில் கொஞ்சம் தண்ணீர் கொணர்ந்து கொடுத்துக் குடிக்கச் சொல்லி, அன்புகனிய விசிறிக்கொண்டே, "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

செல்லையா, அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்த்த கண்கள் அங்கேயே நிலைக்க முடியாதவனாய்த் தலைகுனிந்து, கம்மிய குரலில், "நான் ... பாதகன் ... உன் தகப்பன்; நீ என் மகள்" என்றான்.

அப்போது, வானமிடிந்து தன் காலடியில் விழுந்ததுபோல் என்னவோ ஓர் அர்த்தமில்லாத உணர்ச்சி அவள் உள்ளத்திலே சுரந்தது. புதிதாய் அப்போது தான், தான் பிறந்தது போன்ற ஒரு கற்பனையும் அவள் மனதில் எழுந்தது. அவள் ஒருவித வியப்பும் பரவசமும் கலந்தவளாய், மௌனமாய், அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

✲

ஓர் ஆராய்ச்சி

பொருள் : பெண்

கிடைக்கும் இடம் : மனிதன் எங்கெங்கே இருக்கிறானோ, அங்கங்கேயெல்லாம் கிடைக்கும். இதைச் சுதந்தர நிலைமையில் காண்பது அருமை.

தோற்றமும் குணதிசயங்களும் : எல்லா நிறத்திலும், உருவத்திலும், அளவிலும், வயதிலும் கிடைக்கும். பெரும்பாலும், மாறுவேஷத்தில் காட்சியளிப்பது வழக்கம். பலவகைக் கலப்புப் பொருள்களாலான ஒரு மெல்லிய திரை முகத்தை மூடியிருக்கும். ஒன்றுமில்லாத விஷயத்துக்குக் கூட ஓவென்று அலறும். எந்த நிமிஷத்திலும் முகம் கடு கடுப்பாக மாறலாம். ஆனால், சரியான முறையில் பக்குவமாக உருக்கினால், தாராளமாக மனது இளகும். நன்றாக உபயோகிக்காவிட்டால், ரொம்பப் புளிக்கும்.

ரசாயன குணங்கள் : ரொம்ப உற்சாகமானது. முக்கியமாக, தங்கம் வெள்ளியின் மேல் அளவற்ற ஆசையும், பொதுவாக விலையுயர்ந்த எல்லாப் பொருள்களின் மேலுமே ஆவலும் உண்டு. தனியாக வைத்து விட்டுப் போனால், திடீரென்று மனோநிலைமை [illegible] காலம் விரைவில் மாறும். பின்பு, ஒரே மாதிரி [illegible] புதுச் சரக்குக்குக் கவர்ச்சி அதிகம்.

எச்சரிக்கை : பழக்கம் இல்லாதவர்கள் கையில் அகப்பட்டால், திடீரென்று வெடிக்கும்.

[illegible]

தமிழ்க் கொடி

சுத்தானந்த பாரதி

கொடி யுயர்த்திடுவோம் — தமிழ்க்
கொடி யுயர்த்திடுவோம்.
கடமை காத்திடுவோம் — ஆன்மக்
கனலுடன் உழைப்போம்.

மீனும் வில்லும் புலியும் — நடுவே
விரி கதிரவனும்,
காணுந் தமிழ்க் கொடியை — அருட்
சக்திப் படல மென்போம்.

சூரிய சந்திரர்க்கும் — நமதிசை
சொல்லிப் பறக்குது பார்.
பார்முழுதும் வணங்க — இதை நாம்
பார்த்து மகிழ்வோமே.

போர்ப் புயல் வரினும் — கொடிய
புரட்சிகள் வரினும்,
கார்ப்புயல் வரினும் — நிலை
கலங்கி நிற்ப துண்டோ?

இந்த உடலினிலே — ஒருதுளி
இரத்தம் உள்ள மட்டும்,
எந்தாய் வாழ்க வென்றே — இதை
ஏத்திப் பணிந்திடுவோம்.

ஒற்றுமையாய் வாழ்வோம் — நலம்
ஓங்கப் பணி புரிவோம்.
வெற்றிகள் கூறிடுவோம் — சுற்றி
வீர முரசடிப்போம்.

ரகஸ்ய ஆயுதம்

ஜேயார்

அபூர்வமான குண்டு ஒன்றைச் செய்யவேண்டுமென்று, அநேக வருஷங்களாகவே வெடிகுண்டு நிபுணர்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள்; அது எப்படிப்பட்ட குண்டு? வரையறையில்லாமல் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பிரயாணம் செய்யக்கூடிய குண்டாயிருக்க வேண்டும்; அதை எய்தவன், தன் இருப்பிடத்திலிருந்தபடியே, ரேடியோ மூலம் தனக்கு இஷ்டமான குறியை நோக்கிச் செலுத்தக்கூடியதாகவும், அந்தக் குண்டில் இயந்திர சூட்சுமங்கள் அமைந்திருக்க வேண்டும் – இத்தகைய குண்டுதான் அவர்கள் கனவு. இது சம்பந்தமான ஆராய்ச்சி பல நாடுகளிலுமே நடைபெற்று வந்திருக்கிறது.

சாதாரண விமானக் குண்டுகளின் தாக்குதலுக்கும், இந்த ஆளில்லா விமானக் குண்டுகளுக்கும் வித்தியாசமென்ன? என்னதான் இருந்தாலும், விமானிகளும் மனிதர்கள்தான்; ராட்சஸ ஜன்மங்கள் அல்ல. எதிரி விமானங்கள் வந்து கைகலக்கும்போது, தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் அவசியமும் மனோபாவமும் விமானிகளுக்கு ஏற்படுவது சகஜம். தங்கள் குறியிடத்தை அணுக முடியாமல், அவர்களை எதிரிகள் துரத்திவிடவும் கூடும். பெரும்பாலும் இரவு நேரம் பார்த்தே, எதிரி நாடுகளுக்குள் விமானப் படையெடுப்பு நடக்கிறது. இந்த ஆளில்லா விமானங்களோ இந்தக் கவலையெல்லாம் இல்லாமல், எத்தனை எதிரி விமானங்களையும் லட்சியம் செய்யாமல், தன் குறியின் மீதே கண்ணுங்கருத்துமாய், ஜாம் ஜாம் என்று ராமபாணம் மாதிரி பறந்துசென்று, நாச லீலை புரியும்.

இந்த யுத்தத்துக்கு முன்னே, 'க்வீன் பீ' (ராணித் தேனீ) என்ற ஓர் ஆளில்லா விமானம் செய்து, பிரிட்டனில் பரீட்சித்துப் பார்த்தார்கள். ரேடியோ மூலம், இதை மிக நேர்த்தியாகவே ஆகாயத்தில் நினைத்த திசையில் செலுத்திப் பறக்கவிட்டார்கள். விமானி இல்லாமலே ஒரு விமானத்தை ஓட்ட முடியும் என்ற விஷயம், இந்த 'க்வீன் பீ' விமானத்தினால் நிரூபணமாகிவிட்டது. ஆனால், இதில் ஒரு பெருங்குறை காணப்பட்டது. பல சிக்கல்கள் நிறைந்த பெரிய ரேடியோக் கருவி ஒன்றை இந்த விமானத்தில் வைக்கவேண்டியிருந்தது. விமானத்தை ஓட்ட ஆரம்பிக்குமுன், வீணையைச் சுருதி கூட்டுவது மாதிரி, மகா நுட்பமான முறையில் அந்தக் கருவியைச் சரி செய்து வைக்க வேண்டியிருந்தது. அதில் துளிப் பிசகினாலும், அறுத்து விட்ட காற்றாடி மாதிரி, விமானம் சித்தம் போன போக்காய்க் கிளம்பி விடும்! இந்த அநிச்சயமான கருவியை எப்படி நம்பமுடியும்?

பிரிட்டனில் ஹிட்லரின் ரகஸ்ய ஆயுதமான ஆளில்லா விமானக் குண்டுகள் வந்து பாய்ந்து, லீலை புரிவதாகச் செய்திகள் எட்டுகின்றன. இந்த விமானக் குண்டுகளின் வரலாறு இங்கே தரப்படுகிறது. இது சம்பந்தமான போட்டோ படங்களை, *177-B பக்கத்தில் காணவும்.*



மேலே :

ஜூஹூவில் காந்தி கிராமத்தில், காந்திஜி மாலைப் பிரார்த்தனை நடத்துகிறார்.

பக்கம் :

ஜூஹூ கடற்கரையில் மகாத்மாஜி கடற்காற்று வாங்குகிறார்.

—போட்டோ எடுத்தவர் : கெமால்.

ஹிட்லரின் ரகஸ்ய ஆயுதம்!

[177-ஆம் பக்கத்தில் தொடங்கும் கட்டுரையைப் பார்க்கவும்.]

பிரசித்தி பெற்ற வெடி குண்டு நிபுணரான ரீன் ஹோல்ட் டில்லிங் என்ற நிபுணர், தாம் கண்டுபிடித்த வாணக் குண்டை, வாங்கிராக் என்னுமிடத்தில் பரிட்சித்துப் பார்க்கிறார்.



டில்லிங் ராக்கட் என்ற வாணக்குண்டு, ஆகாயத்தில் பாயும் காட்சி. ஆகாச வாணம் போலவே, வெடி மருந்து தீப்பிடித்ததும் பின்புறமாய்ப் பீச்சுவதால் உந்தப்பட்டு, குண்டு பாய்கிறது.

ஹாம்பெர்க்கைச் சேர்ந்த ஹெர் ஜக்கர் என்பவர் செய்துள்ள பெரிய வாணக் குண்டு. இதன் பலன் அபரிமிதமா யிருக்கிறதாம்-அதாவது நாசம் செய்வதில்!



ஆளில்லா விமானங்களை ராணுவ உபயோகப்படும்படி அமைப்பதற்காக, பல வருஷங்களாய் ஜெர்மானியரும் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இந்த ஆராய்ச்சியின் முதற்படியாகக் கண்டுபிடிக்கப் பட்டது ஒரு வித ஆகாச வாணக் குண்டு. ரீன்ஹோல்ட் டில்லிங் என்பவர் தான் அதைக் கண்டுபிடித்தவர். அதற்கு 'டில்லிங் ராக்கட்' என்று அவரது பெயரையே வைத்திருக்கிறார்கள். (177–B பக்கத்தில் உள்ள படங்களைப் பார்க்கவும்) இந்தக் குண்டு, ஆகாச வாணத்தைப் போலவே அமைக்கப்பட்டிருக்கிறது.

பீரங்கிகளிலிருந்து சாதாரணமாய்ச் சுடப்படும் குண்டுகளுக்கும், இந்த ஆகாசவாணக் குண்டுகளுக்கும் ஒரு முக்கிய வித்தியாசமுண்டு. ஒரு கவணிலிருந்து ஆகாயத்திலே ஒரு கல்லை எறிந்தோமானால், முதலில் நாம் எந்த வேகத்தோடு அதை எறிந்தோமோ அந்த வேகத்தின் பலத்தைக் கொண்டே அது ஆகாயத்தில் செல்லுகிறது. ஆகாச வாணமோ அதிலுள்ள வெடிமருந்து கொஞ்சம் கொஞ்சமாய் எரிந்து பீச்சுவதால் உந்தப்பட்டு ஆகாசத்திலே பாய்கிறது. சாதாரண பீரங்கிக் குண்டு கவண் கல் மாதிரி; இந்தப் புதிய வாணக்குண்டோ ஆகாச வாணம் மாதிரி. சாதாரணக் குண்டு போகப் போக வேகம் குறைந்து, கடைசியில் கீழே விழுகிறது. வாணக் குண்டையோ, கிளப்பி விட்டால் போதும்; பிறகு தன் சொந்த சக்தியாலேயே பாய்கிறது. இந்தக் காரணத்தினால், சாதாரணக் குண்டுகளை எறிய, பாரமான பீரங்கிகள் தேவைப்படுகின்றன; வாணக் குண்டுகளைக் கிளப்பி விடவோ, லேசான வேட்டுக் குழாய்கள் போதும். இந்த ஆகாச வாணக் குண்டைத் தாங்களே முதன் முதலாய்க் கண்டுபிடித்ததாக ஜெர்மானியர் சொல்லுகிறார்கள். ஆனால், ருஷ்யர்களோ, தாங்களே இதை முதலில் கண்டுபிடி ததாகவும், தங்களைப் பார்த்துத்தான் ஜெர்மானியர் காப்பியடித்ததாகவும் சொல்லுகிறார்கள்.

> **யார் முட்டாள்?**
>
> **ஆசிரியர்:** நேற்று நீ ஏன் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை?
>
> **பையன்:** என் அண்ணாவுக்குக் கல்யாணம்.
>
> **ஆசிரியர்:** யாரைக் கல்யாணம் செய்து கொண்டார்?
>
> **பையன்:** ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார்.
>
> **ஆசிரியர்:** முட்டாள், பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் ஆணை யாராவது கல்யாணம் செய்து கொள்ளுவார்களா?
>
> **பையன்:** என் அக்கா ஓர் ஆணைக் கல்யாணம் செய்து கொண்டாள், ஸார்!

இப்போது ஜெர்மானியர், இங்கிலாந்து மீது எய்யும் ரகஸ்ய ஆயுதம் எப்படிப் பட்டது? அதைப் புரிந்துகொள்ள, நாம் மேலே விளக்கியுள்ள இருவகை நூதனக் கருவிகளையும் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்: (1) ஆளில்லாத விமானம் (2) ஆகாச வாணக் குண்டு. இந்த இரண்டின் இயந்திர நுட்பங்களையும் ஒன்று சேர்த்து அமைத்ததுதான், தற்போது ஜெர்மானியர் உபயோகிக்கும் ரகஸ்ய ஆயுதம். அதாவது ஆளில்லாத ஆகாச வாண விமானம் என்று, அதைக் குறிப்பிடலாம்.

இந்த விமானங்கள், ஆகாச வாணங்களைப் போலவே வாண மருந்து பீச்சுவதால் மோட்டார் இயந்திரம் உந்தப்பட்டு, ஆகாசத்தில் பாய்கின்றன. இவைகளில் விமானிகள் ஏறி உட்காருவதில்லை. விமானிகள் சௌஸ்தமாகப் பிரான்ஸில் எங்கேயோ ரகஸ்ய இடங்களில் பத்திரமாக உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். தாங்கள் அங்கிருந்தபடியே, விமானங்களை ரேடியோ மூலம் பிரிட்டன் மீது செலுத்துகிறார்கள். சாதாரண விமானங்கள் எப்படி அணி வகுத்துச் செல்கின்றனவோ அப்படியே இந்த ஆளில்லா விமானங்களும் வரிசை வரிசையாய் அணி வகுத்துப் படையெடுக்கின்றன. தங்கள் குறி யிடங்களுக்குச் சென்றதும், அங்கெல்லாம் படார், படார் என்று குண்டுகளை வீசிவிட்டு, தாங்களுமே விழுந்து வெடித்து,பயங்கர நாசம் புரிகின்றனவாம். இந்த விமானங்களின் சக்தி அபாரமானதென்று ஜெர்மானியர் பெருமை யடித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், பிரிட்டிஷாரோ, இவை தாங்கள் வெகு நாளாகவே எதிர்பார்த்தவை தான் என்றும், கூடிய சீக்கிரம் இவற்றைத் தங்களால் சமாளித்து விட முடியும் என்று நம்புவதாகவுமே சொல்லுகிறார்கள்.

✲

வீடு வேட்டை

சென்னையில் இரண்டு வருஷங்களுக்கு முன்னே அபாயச்சங்கு ஊதியதும், நகரம் பூராவும் வீடுகள் காலியாகிவிட்டன. இப்போதோ, ஒன்றுக்கு மூன்றாக ஜனங்கள் வந்து புகுந்து, ஓர் அங்குலம் பாக்கியில்லாமல் வீடுகளை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். புதிதாய் ஜாகை கிடைப்பது குதிரைக் கொம்பாய் இருக்கிறது. வீடு தேடித் தேடி அலைந்து சலித்த ஒரு நண்பர் ஒரு கதை சொல்லுகிறார்:

மயிலாப்பூர்க் குளத்தில், மாலை நேரத்தில், யாரோ ஒருவன் தண்ணீரில் முழுகித் தத்தளித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் கரையிலே போன ஒருவர், "யாரப்பா நீ? உன் பெயர் என்ன? எந்தத் தெரு? வீட்டு நம்பர் என்ன?" என்று விசாரித்தார்.

"அதெல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். ஐயோ! முதலில் என்னைக் காப்பாற்றுங்களேன்!" என்று நீரில் தத்தளித்தவன் பலமாக அலறினான்.

"அல்ல, முதலில் உன் விலாசத்தைச் சொல். அப்புறம் காப்பாற்றுகிறேன்" என்றார் கரையிலிருந்த கனவான்.

அவன் தத்தித் தடுமாறித் திணறி, தன் பெயரையும் தனக்கு இன்ன இடம் இன்ன தெரு இன்ன வீடு என்பவைகளையும் விவரமாய்ச் சொன்னான்.

இந்த விவரங்களைக் கேட்டுக்கொண்ட அவர், முழுகியவனை அப்படியே விட்டு விட்டு, ஒரு கணமும் தாமதியாமல், அந்த வீட்டுக்கு ஓடினார். வீட்டுக்காரரைப் பார்த்து, "உங்கள் வீட்டில் குடியிருந்த சுப்பையா முதலியார், மயிலாப்பூர்க் குளத்தில் விழுந்து மாண்டுவிட்டார். அவர் இருந்த இடத்தை எனக்கு வாடகைக்கு விடுகிறீர்களா?" என்று கேட்டார்.

"இடமா? அதற்கு அப்போதே குடி வந்துவிட்டதே! முதலியாரைக் குளத்திலே பிடித்துத் தள்ளிய கனவான், அரைமணி நேரத்துக்கு முன்னே இங்கே ஜாகை வந்துவிட்டார்" என்று சொல்லி, கையை விரித்தார் வீட்டுக்காரர்.

ஏழைத் தம்பதிகள் — திரிலோகநாத கோஸ்வாமி

ஒரு காலத்தில் கமலநாதனிடம் குடும்பஸ்தர்களிடம் இருக்க வேண்டிய செல்வமெல்லாம் இருந்தது. ஆனால், இன்று அவன் வீதி வழியே பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான். முன்பு அவனுடைய தயவுக்குப் பாத்திரமாய் இருந்தவர்கள் எல்லோரிடமும், இன்று அவன் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. பகவானுடைய லீலைகளெல்லாம் விசித்திரமாயிருக்கின்றன. நிலையற்ற வாழ்க்கையை அவன் நினைத்துப் பார்த்தபோது, அவனுடைய இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. சிறிது நேரம் உட்கார்ந்து அழுதுவிட்டு, மறுபடியும் நடக்கத் தொடங்கினான்.

சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தான். பூமியின்மீது சிறிது சிறிதாக இருள் படர ஆரம்பித்தது. ஆடுகளும் மாடுகளும், எருமைகளும் பறவைகளும் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று இளைப்பாறலாயின. கமலநாதனுடைய இடிந்த வீட்டின் நாலாபுறங்களிலும் கோர இருள் சூழ்ந்திருந்தது. வீட்டுக் கதவின் முன்னால் நின்றுகொண்டு, "சேவதி" என்று அவன் கூப்பிட்டான். கதவு திறந்தது. மங்கிய வெளிச்சத்தில், ஏழ்மை நிறைந்த அவனது இல்லம் அவனுக்கு முன்னால் காட்சியளித்தது. கமலநாதன் உள்ளே சென்று, அவன் கொண்டுவந்திருந்த சிறிய அரிசிப் பொட்டலத்தைச் சேவதியின் பக்கத்தில் வைத்து, துக்க மிகுதியால் பெருமூச்சு ஒன்று விட்டு, "சேவதி, இந்தப் பொட்டலத்திலுள்ள அரிசி உனக்குப் போதும். இன்றைக்கு நீ மட்டும் சாப்பிடு. எனக்கு வேண்டாம். நான் தூங்கப் போகிறேன்" என்றான்.

சேவதி, நீர் நிறைந்த கண்களுடன் சற்று நேரம் தன் கணவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு அவனுடைய மெல்லிய கரங்களைப் பிடித்துக்கொண்டு, "நீங்கள் சாப்பிடவில்லையா, ஏன், அஜீரணமா?" என்று கேட்டாள்.

"அஜீரணமில்லை, சேவதி"

"பின் ஏன் சாப்பிடமாட்டீர்கள்?"

"ஐயோ, நாம் எப்படி இருந்தோம், இப்பொழுது எப்படி ஆகிவிட்டோம்? நாள் முழுதும் பிச்சை எடுத்துங்கூட, இரவில் சாப்பிடுவதற்கு ஈசுவரன் ஒரு பிடி அரிசிகூடக் கொடுக்கவில்லை. எங்கே போனாலும் வெறுங் கையோடு திரும்ப வேண்டியதாயிருக்கிறது. இன்று மழையுமில்லை, புயலுமில்லை. ஆனாலும் இரண்டு பிடி அரிசிதான் கிடைத்திருக்கிறது. இதில் இரண்டு ஜீவன்கள் பிழைக்கவேண்டும்! சேவதி, எனக்கு இப்போது பசியில்லை. துன்பமும், கவலையும், வேதனையும் என் பசியைப் போக்கிவிட்-

*திக்கற்ற ஏழை எதற்காக வாழவேண்டும்? அவன் சாக விரும்புகிறான். ஆனால், அதிலும்தான் என்ன விபரீதம் நேர்கிறது! இந்த உருக்கமான அஸ்ஸாமியக் கதையை, நண்பர் சு. **குருசாமி** இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.*

டன. நான் அமைதியாய்த் தூங்கு கிறேன் ''

" நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? மனிதனுடைய வாழ்க்கை எப்போதும் ஒரேமாதிரி இராது. இன்று நாம் துன்பப்படுகிறோம். நாளைக்குச் சுகமடைவோம். நாம் யாருக்கும் ஒரு தீங்கும் செய்ய வில்லை. நாம் எப்போதும் இப்படியே இருக்கமாட்டோம். ஈசுவரன், செய்வதெல்லாம் நன்மைக் காகவே செய்வான்'' என்று சேவதி தன் கணவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"நமக்கு எப்படி நல்ல காலம் வரப்போகிறதோ, தெரியவில்லை. இரண்டு வேளையும் வயிறு நிறையச் சாப்பிடுவதற்கு வழியில்லாமல், வீதி வழியே இப்படிக் கத்திக்கொண்டு திரிந்து பிச்சை வாங்கிச் சாப்பிடுவதை விடச் சாவதே மேல்.''

"ஆனாலும், கடவுளுடைய கருணையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர் கருணைக் கடல்''

"அவர் கருணைக் கடல் என்பது இருக்கட்டும். அந்தக் கருணைக் கடல் நம்மை என்னதான் செய்யவில்லை? அவர் உண்மையிலேயே கருணைக் கடலாயிருந்தால், இந்த உலகில் ஏன் இத்தனை அழுகுரல் கேட்கிறது? சேவதி! என் மனம் அமைதியாயில்லை. ஆகையால் இப்போது என்ன நினைக்கிறேன், தெரியுமா?....சேவதி, நீ போய்ச் சாப்பிடு.''

சேவதி ரொம்பப் படித்தவள் அல்ல. அவள் தன்னுடைய சாமானிய அறிவால் தன் கணவனுக்கு ஆறுதல் அளிக்க முயன்றாள். ஆனால், முடியவில்லை. அவள் தன் கணவனுடைய சுகத்தில் சுகத்தை அனுபவித்தாள்; அவனுடைய துக்கத்தில் துக்கத்தை அனுபவிக்கிறவள். அவள் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு பாதியைக் கழித்துவிட்டாள். கணவன் பசியாயிருக்கும்போது அவள் மாத்திரம் எப்படி உண்பாள்? வெகுநேரம் வரைக்கும் குனிந்த தலை நிமிராமல் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்துவிட்டு கடைசியில், "நீங்கள் சாப்பிடாவிட்டால், எனக்கும் சாப்பிட இஷ்டமில்லை. நான் மட்டும் தனியாய்ச் சாப்பிட மாட்டேன்'' என்றாள்.

கமலநாதனுக்குத் துக்கம் தாளவில்லை. சேவதியைத் தழுவிக் கொண்டு அவன் அழத்தொடங்கினான். சேவதி தன் கணவனுடைய நெஞ்சின்மீது கையை வைத்துக்கொண்டு, "வருத்தப்படவேண்டாம். உங்களுடைய இருதய வேதனைகளை எல்லாம் அகற்றுவதற்கு நான் முயற்சிப்பேன்'' என்றாள்.

திடீரென்று சேவதியினுடைய முகத்தைப் பார்த்ததும், கமலநாதனுடைய கண்களில் மீண்டும் கண்ணீர் நிரம்பியது. சிறிது நேரம் கழிந்த பிறகு, "உன்னைத் துன்பத்துக்குள்ளாக்குவது மகா பாவம். நான் தற்கொலை செய்து கொள்வதென்று முடிவுசெய்து விட்டேன்'' என்றான் கமலன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சேவதி நடுங்கினாள்.

" தற்கொலை மகாபாவம். அந்தப் பாவத்துக்கு உள்ளாகிவிடாதீர்கள்'' என்றாள் சேவதி.

" பாவத்தையும் புண்ணியத்தையும் நான் பொருட்படுத்தவில்லை. பொருட்படுத்த இஷ்டமுமில்லை; நான் மாறுதலை விரும்புகிறேன். துன்பமயமான இந்தப் பிச்சைக்கார வாழ்க்கையைக் காட்டிலும் சாவு எவ்வளவோ மேல்.''

"இன்றிருந்து நீங்கள் பிச்சைக்குப் போகவேண்டிய அவசியமில்லை. இனி நான் பிச்சை எடுக்கப் போகிறேன். நீங்கள் வீட்டிலிருங்கள்."

கமலன் திடுக்கிட்டான். சேவதி சொன்ன வார்த்தைகளை அவனால் சட்டென்று புரிந்துகொள்ள முடியவில்லை. சிறிது நேரத்தில் தன்னைச் சமாளித்துக்கொண்டு, மடியிலிருந்து ஒரு பொருளை எடுத்துச் சேவதிக்குக் காட்டினான். "அது என்ன?" என்று சேவதி கேட்டாள்.

"இது ஒரு வஸ்து!"

"என்ன வஸ்து?"

"விஷம்!"

"விஷமா!......"

சேவதியின் முகம் வெளுத்தது; தொண்டை கம்மியது.

ஒன்றும் சொல்லாமல், கணவனுடைய கையினின்றும் அதைப் பிடுங்கி, தன் கையில் வைத்துக்கொண்டாள். கமலன் அவளுடைய கையினின்றும் மீண்டும் அதைப் பிடுங்கி, அவளுடைய வெளிறிய முகத்தை நோக்கி, "பயமாயிருக்கிறதா, சேவதி?" என்று கேட்டான்.

சேவதி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நீ பயப்படுகிறாயா?"

சேவதியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

விஷமடங்கிய அந்தப் பொட்டலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, கமலன், "சேவதி! உனக்குக் கொஞ்சமும் பயம் வேண்டாம். உனக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. அவர் உனக்கு உதவி செய்வார்" என்று கூறினான்.

கமலன் பொட்டலத்தைப் பிரித்தான். உடனே சேவதி அவனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, "நானும் உங்களுடன் சாவேன். நீங்கள் இறந்த பிறகு நான் தனியாய் இந்த உலகில் வாழமாட்டேன்" என்று கதறினாள்.

கமலனுடைய இருதயம் துடித்தது. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

"நானும் சாகப்போகிறேன். அந்த விஷத்தை இரண்டு பாகங்களாக்கி, ஒரு பாகத்தை எனக்குக் கொடுங்கள். இறக்கத்தான் வேண்டுமானால் இருவரும் இறப்போம். அதுதான் இன்பத்துக்கு வழி."

கமலன் ஒன்றும் பேசவில்லை. அவளுடைய முகத்தையே சற்று நேரம் பார்த்துக்கொண்

பத்திரிகைகள் தேவையா?

பத்திரிகைக்காரர்களைப் பற்றியும் பத்திரிகாலயங்களைப் பற்றியும் பல விதமான கருத்துக்கள் இருந்து வருகின்றன. ஜெர்மன் பிரசார மந்திரி கெப்பல்ஸ், பத்திரிகைக்காரர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

"பத்திரிகைக்காரர்களுடைய சேவை நமக்கு அவசியமே. ஆனால், இந்த யுத்த காலத்தில் பத்திரிகாலயங்களை ஆயுதத் தொழிற்சாலைகளாக மாற்ற வேண்டும். ஆசிரியர்களை விமானப் படையில் சேர்க்க வேண்டும். பத்திரிகாலய ஊழியர்களைச் சிப்பாய்களாக்கி, யுத்தகளத்துக்கு அனுப்ப வேண்டும்."

டிருந்துவிட்டு, விஷத்தை இரண்டு சமபாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தைச் சேவதிக்குக் கொடுத்து, "சேவதி, இது மரணமல்ல. உண்மையில், இது சாந்த நிலை" என்றான்.

இருவரும் க்ஷண நேரத்தில் தங்களுடைய கையிலிருந்த விஷத்தைச் சாப்பிட்டனர். சிறிது நேரத்தில் சேவதி யினுடைய நாடி அடங்கியது; அவள் இறந்து விட்டாள். கமலன் அவளுடைய வெளிறிய முகத்தைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டு மயங்கி விழுந்தான்.

மறுநாள் கமலனுக்குத் தன்னுணர்வு வந்தபோது, அவனுக்கு முன்பின் பரிச்சயமில்லாத யாரோ இருவர் சமீபத்தில் நின்று கொண்டிருக்கக் கண்டான். ஆனால், சேவதி அவன் பக்கத்தில் இல்லை. உடனே அவனுக்கு எல்லா விஷயமும் ஒரு கனவு போல் தோற்றமளித்தது. அவன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டான். நல்ல மருந்துகள் கொடுத்து அவனுடைய மூர்ச்சையைத் தெளிய வைத்தார்கள். அப்பொழுது தான், வீட்டில் இல்லை, ஆஸ்பத்திரியி லிருக்கிறோம் என்ற விஷயம் அவனுக்குத் தெரிந்தது. கமலனுடைய இருதயம் துக்கந் தாளாமல் துடிக்கத் தொடங்கியது. விஷ மருந்தியுங்கூட அவன் சாக வில்லை. என்ன துர்ப்பாக்கியம்! மனிதன் மரணத்திலிருந்து தப்புவதற்கு எவ்வளவோ முயற்சி செய்கிறான்! ஆனால், அதே மரணத்தை மிகுந்த மரியாதையுடன் அவன் அழைக்கும்போது, மரணம் தன்னுடைய குளிர்ந்த கரங்களால் அவனைத் தொட மறுக்கிறது. திடீரென்று அவனுக்குச் சேவதியின் ஞாபகம் வந்தது. அவளுடைய நிலைமை என்ன வாயிற்றோ என்று யோசிக்கலானான். அதற்குமேல் அவனுக்குச் சிந்தனை ஓடவில்லை. அவனுடைய தலை சுழலத் தொடங்கியது.

மறுநாள் போலீஸார் வந்து அவனிடம் எல்லா விஷயங்களையும் விசாரித்து அறிந்து, அவனைப் பெண் கொலை செய்தவன் என்று இகழ்ந்தார்கள்.

"உண்மையில் நான் சேவதியைக் கொலை செய்தவனே. அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாளோ?" என்று அவன் ஆலோசிக்கத் தொடங்கினான். "சேவதி, நீ எங்கே இருக்கிறாய்? நான் இங்கே தனியா யிருந்து தவிக்கிறேனே!" என்று அவன் ஆகாயத்தைப் பார்த்துப் புலம்பினான்.

செஷன்ஸ் கோர்ட்டில் கேஸ் நடந்தது. நீதிபதி, வக்கீல்கள் யாவரும் உட்கார்ந் திருந்தார்கள். குற்றவாளியை நீதிபதிக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தினார்கள். நீதிபதி குற்றவாளியை நோக்கி, "நீ உன் மனைவியைக் கொன்றாயா?" என்று கேட்டார்.

"ஆம், துரையே!" என்றான் கமலன்.

"எப்படி?"

"விஷம் கொடுத்துக் கொன்றேன்"

"ஏன் விஷம் கொடுத்தாய்?"

"துரையே, நான் என்னுடைய துயரக் கதையை எப்படிச் சொல்லுவேன்? எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. ஆதியில் என்னிடம் அளவு கடந்த சொத்து, சுகம் எல்லாம்

இருந்தது. என்னுடைய வீட்டில் எல்லாவிதச் செல்வமும் இருந்தது. ஆனல், இன்ருே நான் பிச்சைக்காரனு யிருக்கிறேன். எனக்கு ஒரு முறை கொடுஞ் சுரம் வந்தது. அந்த வியாதியால் வெகுநாள் கஷ்டப்பட்டேன். இதற் கிடையில் என்னுடைய செல்வ மெல்லாம் நஷ்ட மடைந்தது. என்னுடைய ஒரே குழந்தையையும் இழந்தேன். இறுதியில், நானும் என் மனைவி சேவதியும் பிச்சை எடுத்து எப்படியோ காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தோம்.

"கஷ்டங்களைச் சகிக்க முடியவில்லை. வாழ்க்கையில் ஏதாவது மாறுதல் வேண்டுமென்று விரும்பினேன். ஆகையினல் விஷமுண்டு உயிரை மாய்த்துக் கொள்ள நிச்சயித்தேன். ஆனல் நான் தனியாகச் சாக விடவில்லை என் மனைவி. ஆகையினல் விஷத்தை இரண்டு பாகங்களாக்கி நாங்கள் அருந்தினேம். என் மனைவியின் ஆன்மா சாந்தியடைந்தது. கஷ்டங்களை அனுபவிப்பதற்காக என்று பிறந்த நான், இன்னும் ஜீவித்திருக்கிறேன். துரையே, உண்மையாகவே நான் பெண் கொலை செய்திருக்கிறேன். நான் அவளுக்கு விஷங் கொடுத்தேன். எனக்குத் தகுந்த தண்டனை கொடுங்கள்."

கமலனுடைய கதையைக் கேட்டு, கோர்ட்டி லிருந்தவர்கள் எல்லோரும் அதிசயம் அடைந்தார்கள். நீதிபதியும் வெகு நேரம்வரை கமலனுடைய துயரக் கதையைக் கேட்டு மௌனமாயிருந்தார். கடைசியில், அவர் கமலனை நோக்கி, "நான் உன்னை மன்னித்து விடட்டுமா?" என்று கேட்டார்.

"துரையே, வேண்டாம். என் மனைவியுடன் நானும் இறந்திருக்க வேண்டும். அவ்விதம் நான் செய்யா விட்டால், அவள் என்னை மிகக் கேவலமாக மதிப்பாள். என்மேல் கிருபை வையுங்கள். நான் மன்னிப்புக் கேட்கவில்லை. தயவுசெய்து எனக்கு மரண தண்டனை கொடுங்கள்."

கோர்ட்டிலுள்ள ஜனங்கள் யாவரும் பிரமித்தனர். சாவிலிருந்து தப்புவதற்கு மனிதன் எவ்வளவு சிரமப் படுகிருன்; ஆனல் கமலனே, சிரித்த முகத்துடன் மரணத்தை ஆலிங்கனம் செய்கிருன். இது ஆச்சரிய மில்லையா? மரணத்தின் ஸ்பரிசம் அத்தனை இன்பமாகவா இருக்கிறது?

ஆனல் இந்த விஷயங்களை எல்லாம் அவன் யோசிக்கவில்லை. நிகழ்கால வாழ்க்கையில் மாறுதலை விரும்புகிருன். மாறுதல் ஏற்பட்டு விட்டால், அவன் மகிழ்ச்சியடைவான்.

"உன்னை மன்னித்து விடட்டுமா?" என்று நீதிபதி மீண்டுங் கேட்டார்.

"வேண்டாம், துரையே! நான் பெண் கொலை செய்தவன். எனக்கு மரண தண்டனை கொடுங்கள்."

நீதிபதி குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்தார். அவன் தன்னிரு கைகளையுங் கூப்பி எல்லோரையும் வணங்கினன். போலீஸார் அவனைச் சிறைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். கோர்ட்டு முழுவதும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது.

✲

ஏமாற்றம்

"காங்கேயன்"

அன்று பௌர்ணமி.

நிலவு வெள்ளத்திலே மூழ்கி, ஏதோ ஓர் இன்பக் கனவு காண்பதுபோல நகரமுழுவதும் தூங்கிக்கொண்டிருந்தது. எங்கும் ஓர் உயிர், உயிருக்கு அறிகுறி—எதையும் காணோம். சந்திரனையும் நட்சத்திரங்களையும் தவிர மற்றெல்லோரும், தூக்கமாகிய அரை மரணத்தில் ஆழ்ந்திருந்தனர். உலக முழுவதும் கண்ணுறங்கும் அந்த வேளையிலே, சேனபதியின் இல்லத்தி லிருந்து, யாழோசை தவழ்ந்து வந்துகொண்டிருந்தது.

அங்கு இரண்டு உயிர்கள் கண் விழித்திருந்தன. ஒன்று அவன், மற்றொன்று அவள்.

விசாலமான அந்த அறையின் நாலாபுறமும் எண்ணிறந்த தீபங்கள் எரிந்துகொண் டிருந்தன. சிங்க வடிவில் அமைந்த ஒரு தட்டிலிருந்து, வாசனை திரவியங்களின் புகை வந்து கொண்டிருந்தது. பஞ்சணைகள், தலையணைகள், பற்பல விதமான சின்னஞ் சிறு பாத்திரங்கள், மருந்துகள் முதலியவற்றைத் தவிர, தேவையில்லாத பொருள் ஒன்றுவது அங்கில்லை.

அவள் அவனை மனதார விரும்பினாள், காதலித்தாள். அவனுக்காக எதுவும் செய்யத் தயாராயிருந்தாள். ஆனால், அவனோ எதிலும் பற்றில்லாதவன்போல வானத்தையும் மேகங்களையும் பார்த்துக்கொண்டு வேறு எதிலோ மனம் லயித்து நின்றான். அவனுக்கு என்ன வருத்தம்? அவனுடைய வாழ்க்கை மர்மம் என்ன?

பெருந் தீயிலிருந்து எழும் புகை மண்டலம்போல, இசையமுதம் காற்றிலே மிதந்து, கட்டுகளையும் வரம்புகளையும் மீறிக் கொண்டு சுவர்களுக்கு அப்பாலும் வானத்திலும் பறந்து சென்றது. யாழ் புலம்பியது, விம்மியது, சிரித்தது, பெருமூச்செறிந்தது. அது அவனுடைய இதயத்தைத் தொட்டு உலுக்கி அதனுடன் பேசியது.

அவள் தன்னுணர்வு இழந்தவள் போல, நாத வெள்ளத்திலே மூழ்கித் திளைத்து, அந்த அலைகளிலே நீந்திக்கொண்டிருந்தாள். வானத்தை நோக்கியவாறு, மலர் சூடி நின்ற கூந்தல் தரையிலே புரள, முகமண்டலம் சங்கீத வெறியிலே லயித்து நிற்க, அக்காட்சி இசையிலே மயங்கிய கருநாகம் படமெடுத்து ஆடுவது போலிருந்தது. விரல்கள் தந்திகள் மேல் நடனம் புரிந்தன.

அவன் படுக்கையில் சாய்ந்தவாறு யாழின் ஒலியிலே மயங்கி நின்றான்.

அது பழந் தமிழ் மன்னர் காலம். சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் கோச்செங்கண் சோழனுக்கும், கழுமலம் என்ற ஊரில் நடந்த போரில், சோழன் வாகைமாலை சூடினன்.

மஞ்சத்தில் சாய்ந்திருக்கும் இளைஞன், சேரனுடைய படைத் தலைவனான வீரேந்திரனின் புதல்வன். அவன் போர்க்களத்தில் இணையில்லாத வீரங்காட்டினன். எண்ணற்ற யானைகளையும் குதிரைகளையும் கொன்று குவித்

தான். என்றாலும், கடல்போல் பரந்த சோழனுடைய சேனைக்கு முன் அவன் எவ்வளவு நேரம் போராட முடியும்? பகைவனின் வேலாயுதம் ஒன்று அவன் மார்பைத் தாக்கவே, அவன் உணர்விழந்து கீழே விழுந்தான்.

சோழனுடைய சேனாபதி தருமபூஷணம். அவன் வீரத்தைத் தெய்வமாக வணங்குபவன். இளைஞனின் வீரம் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. காயமடைந்த அவனைத் தன் இல்லத்திற்கு எடுத்துச் சென்று, அரண்மனை வைத்தியர்கள் மூலம் சிகித்சை செய்தான். அவன் பிழைப்பது அருமை என்றே பலரும் கருதினார்கள். ஆண்டவனின் கருணையாலும் சேனாபதியின் உதவியாலும் அவனுடைய உயிர் உடலில் தங்கிற்று. பதினாறாவது நாள் கண் திறந்து பார்த்தான். சேனாபதியின் மகள் அருகே நின்றிருந்தாள். இரண்டு பேருடைய முகமும் மலர்ந்தது. தாய் குழந்தையைக் கவனிப்பது

போல, அவள் இரவு பகலாக அவனருகேயிருந்து அவனுக்குப் பணிவிடைகள் செய்துவந்தாள்.

அவன் மெல்ல மெல்ல எழுந்து உட்காரத்தொடங்கினான். பகலெல்லாம் ஏதேதோ படித்துக் கொண்டிருப்பான். இரவிலே இனிமையாய்க் குழலூதுவான். அவள் மணமிக்க மலர்களைக் கொண்டுவந்து அவன்மீது தூவுவாள். அவனுக்கு மிக்க இன்பம் உண்டாகும். அவள் ஆலயத்துக்குச் சென்று, தன் அன்பனுக்கு உடல் நலம் அருள வேண்டுமென்று ஆண்டவனை வணங்குவாள்.

அவள் மனதார அவனை விரும்பினாள், காதலித்தாள். அவனுடன் பேசுவதற்கோ, குற்றேவல்கள் புரிவதற்கோ, இன்பமுண்டாக்குவதற்கோ தன்னாலியன்றதையெல்லாம் செய்தாள். ஆனால், அவன் மௌன நோன்பு பூண்டவன்போலிருந்தான். எப்போதாவது அத்தி பூத்ததுபோல வாய் மலரும், வார்த்தைகளிலே அன்புத்தேன் வழியும். அவன் அவளை விரும்பவில்லை என்பதல்ல. அவள் தன்னருகில் இருப்பதை அவன் பெரிதும் விரும்பினான். ஆனால், அவனுடைய மனம் வேறு எதிலோ லயித்திருந்தது.

ஊமை போலச் செவிடனைப் போல, அவன் காலம் கழித்து வந்தான். ஜன்னல் வழியே தோன்றிய நீலமலைத் தொடர்களையும் மேகங்களையும் வானத்தையும் இடைவிடாமல் பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தானே யொழிய, எதிரே நின்றிருந்த ரதிதேவியைத் திரும்பிப் பார்க்கவில்லை.

அவள் பலமுறை நெருங்கிப் பார்த்தாள். அவன் மனத்தில் புகுந்து, துயரத்தை யறிந்து, ஆறுதலளிக்க முயன்றாள். ஆனால் அது இயலவில்லை.

அன்று யாழைக் கையிலெடுத்ததிலிருந்து, அவளோ அல்லது அவனோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. வானத்தையும் வெண்மதியத்தையும் நோக்கியவாறு அவளுடைய விரல்கள் தந்தியில் ஓசையை எழுப்பிக்கொண்டேயிருந்தன. யாழும் அவளும் ஒன்றாய் ஐக்கியமாய் விட்டார்கள். நெஞ்சை மீட்டி அங்கிருந்து இசையை எழுப்புவது போலத் தோன்றினாள். இந்த உலகத்துச் சிந்தனையே அவளுக்கு இல்லை. நாதவுலகத்திலே மெய் மறந்து நின்றாள். திடீரென்று அவளுக்கு உணர்வு பிறந்தது. தலையை ஒரு புறம் திருப்பி இளைஞனை நோக்கினாள். அவனுடைய கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது.

அவள் திடுக்கிட்டாள். எழுந்து போய், அவனருகே நின்று, திகிலுடன் அவனை நோக்கினாள். அவன் வாய்திறக்க முயன்றான். ஆனால், வார்த்தைகள் வெளியே வரவில்லை.

"உங்களுக்கு என்ன வருத்தம்?" என்று இனிய குரலிலே அவள் வினவினாள். அவளுடைய முகத்திலே கவலையும் வேதனையும் பரந்தன. மனத்தாலும் சொல்லாலும் அவள் ஒரு தெய்வத்தைப் போற்றிவந்தாள். அந்தத் தெய்வமே தனக்கு எல்லாம் என்று கருதினாள். அதனுடைய கண்ணிலிருந்து நீர் வடிவதைக் கண்டதும் அவள் கலங்கினாள். கட்டிலின் ஓர் ஓரத்தில் அமர்ந்து அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

இளைஞன் அவளுடைய வேதனையைக் கண்டதும், தன்னு

டைய வேதனையை மறந்தான். கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். முகத்தில் வலிய ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டான்.

"மங்கையர்க்கரசி, உன்னுடைய யாழிலிருந்து வரும் கானம் மனத்தைக் கலக்குகிறது. அறிவை நிலைகுலையச் செய்கிறது. சோகத்தைப் பிழிந்து காதிலே ஊற்றுவது போலிருக்கிறது. மறந்துபோன விஷயங்கள் இப்போது மீண்டும் நினைவிற்கு வருகின்றன.........."

"என்னை மன்னியுங்கள்" என்று இறைஞ்சினாள் அப் பேதை.

"மலைகளும் சுனைகளும் காடுகளும் நிறைந்த அழகிய சேரநாட்டைப் பிரிந்து மூன்று மாதங்களாகின்றன. ஆம், மூன்று மாதங்கள்: தொண்ணூறு நாட்கள். ஒரு நாள் என்னைப் பார்க்காவிட்டாலும் தாயாருக்குத் தூக்கம் வராது. அவள் எங்கிருக்கிறாளோ, என்னவானாளோ? கணவனை இழந்து கைம்பெண்ணானாள். மகனையும் இழந்திருந்தால், அவளும் ஒரேயடியாய் உயிரைத் துறக்கலாம்......"

"கவலைப்படாதீர்கள். சேர நாட்டுக்கு ஒற்றர்களை அனுப்பி, விசாரித்துவரச் சொல்லுவோம்; அல்லது பல்லக்கை அனுப்பி அவளை அழைத்துவரச் சொல்லுவோம். எல்லோரும் இங்கேயே இருந்துவிடலாம். இந்த வீடும் பொருளும் சகலமும் உங்களுடையதாகவே நினைத்துக் கொள்ளலாம்......"

அவளுடைய முகத்திலே நாணம் மிகுந்தது. கண்கள் தரையை நோக்கின.

"........அப்பாவுக்கு உங்கள் மேல் வெகு பிரியம். எல்லோருக்கும் நல்ல காலம் வரப் போகிறது" என்றாள்.

இளைஞன் அவள் கூறிய வார்த்தைகளைச் செவியுற்றதாகத் தெரியவில்லை. உணர்ச்சி மிகுதியால், அவனுடைய வாயிலிருந்து வார்த்தைகள் பல ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்துகொண்டிருந்தன.

"..........போருக்குப் புறப்பட்ட சமயத்திலே அவளுக்குக் கர்ப்பம். ஆறு மாதம்........ஒரு நாளாவது விட்டுப் பிரிந்ததில்லை........"

"யார், யார்?" என்று பரபரப்புடன் கேட்டாள் அவள்.

"என் மனைவி.........இன்பவல்லி........"

"மனைவியா?....ம...னை...வி!"

அவளுடைய முகத்திலே இருள் சூழ்ந்தது. இடியினால் தாக்குண்டவள் போல ஒரு கணம் அசைவற்று நின்றாள். மறு நிமிஷம் மஞ்சத்திலிருந்து கீழே சாய்ந்தாள்.

✲

பாசமே வேதனை

"எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்; சொத்து இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு அஞ்ஞானி வேதனை யடைகிறான். நாமே நமக்குச் சொந்தமில்லாமல் இருக்கும்போது, பிள்ளைகளைப் பற்றி ஏன் பேசவேண்டும்? சொத்தைப் பற்றி ஏன் பேசவேண்டும்?"

—தம்மபாதா (புத்தர் உபதேசம்)

விஞ்ஞானம் உதவுமா

பி. கோதண்டராமன்

விஞ்ஞானம் என்ருல் என்ன?

இந்த உலகத்திலுள்ள பொருள்கள், அவற்றின் தொடர்புகள், காரண காரியங்கள், அவை யாவற்றி னின்றும் கிடைக்கப் பெறும் தர்க்க ரீதியான முடிவுகள் முதலியவைகளைப் பற்றிய ஒரு முடிவான அறிவே விஞ்ஞானமாகும்.

விஞ்ஞான சாஸ்திரத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். சடப் பொருள்களின் இயல்புகளை ஆராய்ந்து கூறும் சாஸ்திரம் ஒரு பகுதி. அதைப் பௌதிக சாஸ்திரம் என்றும் ரசாயன சாஸ்திரம் என்றும் இரு வகைப் படுத்துவர். ஒரு சடப் பொருளுக்கு என்ன மாறுதல் நேர்ந்தாலும் பாதகமில்லை. அதன் மூல இயல்பு மட்டும் மாருதிருக்குமானல், அதைப் பற்றிய எல்லா விஷயங்களும் பௌதிக சாஸ்திரத்தில் அடங்கும். ஆனல், அம் மாறுதல்களால் மூல இயல்பே மாறி, அது வேறு பொருளாய் விடுமானல், அவ் விஷயங்களைப் பற்றிய அறிவு அல்லது சாஸ்திரத்தை ரசாயன சாஸ்திரம் என்பர். பௌதிக சாஸ்திரமும், ரசாயன சாஸ்திரமுமே சாதாரணமாக விஞ்ஞான சாஸ்திரம் என வழங்குகின்றது. ஆயினும், இவை விஞ்ஞானத்தின் ஒரு பகுதியே யாகும். மனித இனத்தைத் தவிர தாவரம், விலங்கினம் முதலிய மற்ற உயிரினங்களைப் பற்றிய சாஸ்திரம் விஞ்ஞானத்தின் மற்ருெரு பகுதியாகும். மனிதனுடைய உடலமைப்பு, உடல் இயக்கம், அவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய உயிரியக்க சாஸ்திரம், மனேதத்துவ சாஸ்திரம், இதிகாசம், சரித்திரம், பொருளாதாரம், ராஜநீதம், ஜன சமூக சாஸ்திரம் முதலிய துறைகள் விஞ்ஞானத்தின் மூன்ரும் பகுதியாகும்.

மக்களின் அறிவு வேலை செய்யத் தொடங்கிய காலமுதல் இதுவரையிலும் சட விஞ்ஞான சாஸ்திரமே பெரும்பாலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. சிந்தனை சக்தியும் ஆராய்ச்சியும் மிகுந்த அறிஞர்கள் உலகில் அவ்வப்போது தோன்றி, இயற்கையில் மறைந்துள்ள பல ரகசியங்களைக் கண்டு பிடித்து மக்களின் அறிவை வளர்த்துள்ளனர். அவர்கள் வளர்த்த விஞ்ஞான சாஸ்திரம், பொருள்களைப் பற்றிய அறிவை விரிவு படுத்துவதோடு நின்று விடாமல், அப்பொருள்

கத்தியால் பழம் அறுக்கலாம். ஆனல், அதே கத்தியால், ஒரு மனிதன் மற்ருெரு மனிதனுடைய கழுத்தை வெட்டினல், அந்தக் குற்றத்தைக் கத்தியின்மேல் சுமத்தலாமா? விஞ்ஞானம் ஜனங்களுக்கு மிக்க உபயோகமானது. ஆனல். இன்று அதை மனிதவர்க்கத்தின் அழிவுக்கு உபயோகிக்கிருர்கள். சரியான முறையில் நாம் அதைக் கையாண்டால் அது மனிதனுக்கு எவ்வளவு உதவியாயிருக்கும் உலகத்துக்கு எவ்வளவு நன்மை உண்டாகும் என்பது மிக்க ரசமான விஷயம்.

களை தாராளமாய்க் கையாள அவர்களுக்குச் சக்தியும் அளித்திருக்கிறது. இதன் பயனுக, மக்களின் சமூக, பொருளாதார, ராஜீய வாழ்வில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. மேல் நாடுகளில் பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும், அதன் பயனுக ஏற்பட்ட பொருளாதார சமூக ராஜீய மாறுதல்களும் இந்தச் சட விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியின் பயனே யாகும். இதனுல், 'நாகரீக வாழ்க்கை' என நாம் மதிக்கும் வாழ்க்கைக்குரிய பல வசதிகள் மக்களுக்குக் கிடைத் துள்ளன.

இயந்திர ஆலைத் தொழில்களும் வியாபாரமும் பெருவாரியாகப் பெருகியுள்ளன. செல்வம் ஒரு சிலரிடையே குவிந்துள்ளது. ரயில்பாதைகள், நீராவிக் கப்பல்கள், தந்தி, மின்சாரம், ரேடியோ, ஆகாய விமானம் முதலியவற்ருல், தூரம் என்பதே குறைந்து உலகமெல்லாம் ஒன்ருகப் பிணைக்கப் பட்டுவிட்டது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியின் வேகத்தைக் கண்டு பிரமித்துப் போன அறிஞர் பலர், விஞ்ஞானம் மனித வாழ்வை முற்றிலும் மாற்றி ஒரு பொன்னுலகை அமைத்து விடும் என்று கனுக் கண்டனர்.

ஆனுல், விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தி, நன்மைகளுடன் பல தீமைகளையும்கொணர்ந்துள்ளது. இயந்திர சாதனங்களின் பெருக்கினுல், உழைப்பின் பலன் பல மடங்கு அதிகரிக்கிறது. முன்பு நான்கு பேர் செய்த வேலையை இப்போது ஒரே மனிதன் செய்கிருன். இதனுல் பலருக்கு வேலை போய் விடுகிறது. லாபமொன்றையே கருதும் முதலாளிகள், பாட்டாளி மக்களின் நிர்க்கதியான நிலைமையைத் தங்களுக்கு அனுகூலமாகக்கொண்டு அவர்களுக்கு ஒரளவு சம்பளங் கொடுத்து விட்டு லட்சக் கணக்காய் லாபம் சம்பாதிக்கின்றனர். செல்வம் ஒரு சிலரிடையே சேருவதனுல், பெரும்பாலோர் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் போதிய அளவு இன்றிப் பிணிவாய்ப்பட்டு அவதிப் படுகின்றனர். சமூகத்தில் பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன. முதலாளி என்றும் தொழிலாளி என்றும் பரஸ்பரம் விரோதமான இரு வகுப்புக்கள் தோன்றியுள்ளன. இவை ஒரு புறமிருக்க, முதலாளிகள் தம் செல்வத்தை மேன்மேலும் பெருக்குவதற்காக, அரசாங்கத்தைத் தம் வசப்படுத்தி, இயற்கைப் பொருள்கள் கிடைக்கக் கூடிய நாடுகளை யெல்லாம் கைப்பற்றுவதும், அப்பொருள்களைக் கொண்டு தாம் செய்த தொழிற் பண்டங்களை அந்நாடுகளிலேயே விற்பதும் அவசியமாகிறது. இதன் பயனுக ஒவ்வொரு நாட்டுக்கு மிடையே பொருமையும் போராட்டமும் வலுத்து, போர்கள் மூளுகின்றன. இப்போர்களில் வெற்றியடைவதற்காக, அழிவுக் கருவிகளைக் கண்டு பிடிப்பதில் விஞ்ஞானிகள் ஈடுபடுகின்றனர். சுருங்கக் கூறினுல், இன்று விஞ்ஞான அறிவு பெரும்பாலும் துர்விநியோகம் செய்யப்பட்டு, உலகில் பெருந்துன்பம் விளைவித்து, நாகரிக வாழ்க்கையின் அடிப்படையையே குலைத்து, மக்களினத்தை விலங்கினத்திற்கும் கேவலமாக்கிவிடுகிறது.

இந்த நிலையில், சிலர் விஞ்ஞானத்தின் மீதே எல்லாப் பழியையும்

சுமத்தி, விஞ்ஞான ஆராய்ச்சியே கூடா தென்பார்கள். ஆனல், ஆழ்ந்து யோசித்தால், இந்தப் பழிகளெல்லாம் சமூகத்தையும் சமூகம் அடைந்துள்ள நாகரிகத் தையும் சார்ந்தனவே யொழிய விஞ்ஞானத்தைச் சார்ந்தன வல்ல என்பது புலனுகும். விஞ் ஞானம் இவ்விதம் துர்விநியோக மாவதற்கு நாகரிகப் பண்பற்ற சமூகமே காரணமாயிருக்கிறது. விஞ்ஞான அறிவை நல்ல முறை யில், மக்களின் நலன்களுக் கான விஷயங்களில் உபயோ கித்து, மானிட வாழ்க்கையை நாகரிகப் பண்பு வாய்ந்ததாகச் செய்யலாம். மக்கள் ஒருவரோ டொருவர் ஒன்றியும் இணைந்தும் அன்புடன் வாழும் கலையே நாக ரிக மாகும். உலகத்தில் இந்த நாகரிகத்தை வளர்க்க விஞ் ஞானம் ரொம்ப உதவியாய் நடக்கும் என்பதில் சிறிதும் ஐய மில்லை. இது சம்பந்தமாக ஜன சமுதாயம் இதுவரை சாதித் திருப்பவை, இந் நம்பிக்கைக்கு உறுதியளிப்பதாக உள்ளன. இவை யாவை என்பதைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

நிலக்கரி, எண்ணெய், மின் சாரம் இவற்றை உபயோகித்து ஓடும் இயந்திரம், இப்போது மனிதனுடைய அடிமையாகி அவன் இட்ட வேலையைச் செய் கிறது. இயந்திர சாதனங்களைக் கொண்டு இப்போது எந்தத் தொழிலிலும் உற்பத்தியைப் பெருக்கலாம். மனிதனுக்கு ஓரளவுகூடக் கஷ்டமில்லாமல், அவனுடைய வேலையின் பெரும் பகுதியை இயந்திரங்கள் செய்து விடுகின்றன. ஆலைத்தொழில் கள் அபிவிருத்தி யடையாத நாடுகளில் மாத்திரம் இயந்திரங் கள் சொற்பமாகவும் மக்கள் அதிகமாகவும் உழைக்கின்றனர். பெரு வீதமான தொழில்கள் அமைக்கப்பட்டுள்ள நாடுகளில் மனிதன் தன் புஜபலத்தைக் கொண்டு செய்யும் வேலையை, ஒரு யூனிட்டிலும் குறைவான மின்சார சக்தி விரைவாகச் செய்து விடுகின்றது. இதனல் மனிதனுக்கு ஓய்வு ஏற்படுவ தோடு, தொழில் முறையில் பல சிக்கனங்கள் ஏற்பட்டு உற்பத்தி பெருகுகிறது. உற்பத்திப் பெருக் கால், மக்களுக்குத் தேவையான பண்டங்களும் சௌகரியங் களும் மலிவாகக் கிடைக்கின் றன. அதனல் மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து வறுமை யும் அஞ்ஞானமும் மெல்ல மெல்ல ஒழிகின்றன. நாட்டின் மொத்த வருமானம் பெருகுவ தோடு, அந்த வருமானம் மக்க ளிடையே பரவி விநியோகமாகு மானல், மக்கள் கேவலம் உயிர் வாழும் பொருட்டே காலம் முழுவதையும் செலவு செய்யா மல், உயர்ந்த விஷயங்களில் கவ னஞ் செலுத்த ஆரம்பிப்பார்கள். அப்போதே உண்மையான நாக ரிகத்திற்கு வழி ஏற்படும்.

விஞ்ஞானம் எவ்வளவு தூரம் மக்களுக்குத் துணை புரிகிறது என்பதைக் காட்டச் சில உதா ரணங் கூறுவோம். இன்று மேல் நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி களை விவசாயத்தில் கையாண்டு விவசாய முறையிலும் உற்பத் தியிலும் புரட்சிகரமான மாறுதல் களை அடைந்திருக்கிருர்கள். ‘டிராக்டர்’ எனப்படும் இயந் திரம், பெரிய நிலப்பரப்பைச் சொற்ப நேரத்தில் உழுது விடுகி றது. மின்சாரப் பம்புகள் சொற்ப நேரத்தில் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சி விடுகின்றன. அறு வடை இயந்திரம் கிடு கிடு

வென்று கதிர்களை அறுத்து விடுகிறது. அந்தந்த நிலத்திற்குத் தேவையானதும், உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதுமான எரு, சாகுபடி செய்யும் முறைகள், ஒட்டுப் பயிர்கள், நல்ல ரகவிதைகள் ஆகிய விஷயங்களில் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டுபிடிக்கும் நவீனப் பொருள்கள் விவசாயத்தில் பயன்படுத்தப் பட்டு உற்பத்தி பன்மடங்கு அதிகரித்துள்ளன. குறைந்த செலவில் உற்பத்தியைப் பெருவாரியாகப் பெருக்கக்கூடிய தொழில் நுணுக்கங்கள் பலவற்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருவதால், தொழில் முறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நாட்டின் தொழிலபிவிருத்திக்கு இன்றியமையாததொரு மூலப்பொருள் எளிதில் கிடைக்காவிட்டால், விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து செயற்கை முறையில் அப்பொருள்களை நாட்டிலேயே செய்துகொள்ளும் வழி காட்டுகிறார்கள். இவ்விதமாகவே இன்று இயற்கை நீலத்திற்குப் பதிலாக செயற்கை நீலமும் சாய வகைகளும் இயற்கை ரப்பருக்குப் பதிலாகச் செயற்கை ரப்பரும் செய்யப்பட்டு தொழில்கள் நடந்து வருகின்றன. சாதாரணமாக ஒரு மோட்டார் டயர் 3000 மைல் செல்வதற்குப் பயன்படுமாயின், விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து அதே டயர் 20,000 மைல் ஓடுவதற்குப் பயன்படும்படிச் செய்ய உற்பத்தி செய்வோருக்கு வழிகாட்டிக் கொடுக்கின்றனர். இவ்வண்ணமாக நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்குமான பல அனுகூலங்களையும் சிக்கனங்களையும் விஞ்ஞானிகள் தம் ஆராய்ச்சிகளின் மூலமாகச் செய்து தருகின்றனர். இதனால் இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா போன்ற நாடுகளில் தொழில் நுணுக்க முறையில் (technology) அதிசயிக்கத்தக்க பல அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன.

விஞ்ஞானிகள் பொருளாதாரத் துறையில் ஆராய்ச்சி செய்வதோடு நின்று விடவில்லை. மக்களின் வாழ்க்கை நலன்களுக்குரிய வைத்தியம், சுகாதாரம், நல்லுணவு ஆகிய துறைகளிலும் பல அரிய ஆராய்ச்சிகள் செய்து மக்களினத்தைப் பல கொடிய நோய்களிலிருந்து பாதுகாத்து வருகின்றனர். அவர்கள் செய்து வரும் ஆராய்ச்சிகளிலிருந்து, இவ்வுலகில் மக்களினம் பசிக்கும் நோய்க்கும், போராட்டத்திற்கும் அடிமைப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லையென்பதும், இந்தத் துன்பங்களையெல்லாம் ஒழித்து சுதந்தரமாக வாழ முடியும் என்பதும் மேன்மேலும் உறுதிப்படுகின்றன.

வைத்திய சாஸ்திரத்தை எடுத்துக் கொள்வோம். ரண சிகிச்சை செய்யும்போது ஏற்படும் நோவை நோயாளி உணராமலிருக்க, குளோரோபாரம் கொக்கேய்ன் முதலிய மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளனர். இதனால் எவ்வளவு பேர்கள் நோவில்லாமல் ஆபரேஷன் செய்யப்பட்டு குணமாகின்றனர்! விஷப் பூச்சிகள் உடம்புக்குள் வளர்ச்சியடைவதால் பல கொடிய நோய்கள் ஏற்படுகின்றன என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து அவ்விஷப் பூச்சிகளைக் கொல்வதற்குரிய வழிகளைக் காட்டியுள்ளனர். இதனால் எத்தனை கோடி மக்களின் உயிர் காப்பாற்றப்படுகின்றது!

சில வருடங்களுக்கு முன் நீரிழிவும் ரத்தச் சோகையும் கண்டவர்கள் உயிர்தப்புவது அரிதாக இருந்தது. இப்போது இந்நோய் வாய்ப்பட்டவர்கள் உயிருடனிருந்து ஆயுசுபரியந்தம் தொழில் புரியலாம். இந்நோய்களைக் குணப்படுத்துவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட மருந்து என்றென்றும் மக்களுக்கு உதவியாயிருக்கும். ஒரு நூற்றுண்டுக்குள் வைத்திய சாஸ்திரத்தில் எவ்வளவோ நூதன விஷயங்கள் கண்டுபிடித்துள்ளனர். இன்றும் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவோ புதிய விஷயங்கள் கண்டுபிடித்து வருகின்றனர். ஸல்போ நமீத்ஸ் என்னும் ஒரு மகத்தான மருந்து கண்டுபிடித்து ஏழு வருடந்தான் ஆகிறது. அந்த ம்ருந்தைக் கொண்டு பிரசவ சுரம், ரத்தத்தில் விஷங் கலந்து விடுதல், மெனனிங்கிடிஸ், நிமோனியா முதலிய நோய்களை அற்புதமாகக் குணப்படுத்தி விடுகின்றனர். யுத்தத்தில் ஏற்படும் காயங்கள் நஞ்சீடு ஆகாதபடி செய்வதற்கும் அது உபயோகப்படுகிறது. முன்பெல்லாம் நிமோனியா கண்டவர்களில் நால்வரில் ஒருவர் கூடப் பிழைப்பது அரிது. இப்போது இருபதில் ஒருவரே இறக்கிருர்.

சமீபத்தில் பெனிசிலின் என்னுமொரு அற்புத மருந்து கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. தென் ஆஸ்திரேலியாவைச் சார்ந்த விஞ்ஞானியாகிய புளோரி என்பவர்தாம் இவ்விஷயமாக முதன் முதல் ஆராய்ச்சி செய்தவர். இப்போது இவர் ஆக்ஸ்போர்ட்டில் ஆராய்ச்சி செய்து வருகிருர். இம்மருந்து ஒரு பச்சைப் பூஞ்சணத்திலிருந்து எடுக்கப்படுகிறது. விஷப் பூச்சிகளால் ஏற்படும் நோய்களுக்கு இது கைகண்ட மருந்து. காலாஜார் என்னும் சுரநோயையும் குணப்படுத்தும் ஒரு புதிய மருந்தை லிவர்ப்பூலிலுள்ள அறிஞர் வாரிங்குடன் யார்க்கு கண்டு பிடித்திருக்கிருர்.

இறைச்சி, வெண்ணெய் முதலிய உணவுப் பொருள்களை ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குக் கப்பலேற்றி யனுப்பினுல் அவை போய்ச்சேருவதற்குள் கெட்டுப் போய் விடுவது இயல்பாக இருந்தது. ஆனல் ரெபிரிஜெரேட்டர் என்னும் இயந்திர சாதனம் ஏற்பட்ட பிறகு, அவை அதில் குளிர்ச்சியாக வைக்கப்பட்டு சீதோஷ்ண நிலையினல் மாறுபாடு அடையாமலும் கெடாமலும் நீண்ட தூரம் போய்ச் சேருகின்றன.

இதுவரை பசிக்கு வயிற்றை நிரப்ப ஏதாவதொரு உணவு கிடைத்தால் போது மென்னும் அபிப்பிராயம் இருந்து வந்தது. இப்போது மக்கள் உட்கொள்ளும் உணவு, சரியான சத்துள்ள உணவா என்பதைக் கவனிக்கிருர்கள். ஏனெனில், மக்கள் சரியான புஷ்டியான உணவு உட்கொள்ளாததாலேயே பல நோய்கள் வருகின்றன எனக் கண்டுபிடித்துள்ளனர். மக்களின் உடல் நலத்திற்கு இன்றியமையாத சத்துள்ள உணவுகள் இவை யிவை, அவற்றை இன்னின்ன அளவில் உட்கொள்ள வேண்டும், அவை இன்னின்ன உணவுப் பொருள்களில் இன்னின்ன அளவுக்கு உள்ளன என்பன போன்ற விஷயங்களை உணவு ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த ஆராய்ச்சியைக் கொண்டே முற்

போக்கடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித்திட்டம் போடப்படுகிறது. சர்வதேச சங்கத்தாரும் அந்த ஆராய்ச்சிகளை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு நாடும் தம் மக்களுக்கு புஷ்டியான உணவு கிடைக்குமாறு செய்ய வேண்டுமெனச் சிபார்சு செய்திருக்கின்றனர்.

இவ்விதமாக, விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் கிடைக்கும் அறிவை வாழ்வில் பயன்படுத்தி, உணவுப் பொருள்களுடையவும் இதர பொருள்களுடையவும் உற்பத்தியைப் பெருவாரியாகப் பெருக்கி, அவை எல்லோருக்கும் மலிவாகக் கிடைக்கும்படி செய்தால், மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து, வறுமையும் அஞ்ஞானமும் ஒழிந்து, இன்புற்று வாழ்வார்கள். அப்போது யுத்தத்திற்குரிய காரணமும் ஒழியும். இவ்விதம் விஞ்ஞானமே மானிட அபிவிருத்திக்கு இன்றியமையாத அடிப்படையை அளிக்கவல்லது. அதுவே மக்களினத்துக்குப் பொருளாதார விடுதலையளிப்பது. அதுவே பஞ்சம், நோய், பசி ஆகியவற்றிலிருந்து மக்களுக்கு விடுதலை அளிப்பது. ஆகையால், விஞ்ஞானத்தை மேன்மேலும் போற்றி வளர்க்க வேண்டும். அதை மக்களின் நலன்களுக்காக மேன்மேலும் பயன்படுத்தவேண்டும். அரசாங்கம் மட்டும் துணையாக நின்றால் நமது நாட்டிலும், விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகளை வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கை நிலையை மிகவும் உயர்த்தலாம்.

✲

தந்திரம் பலிக்கவில்லை!

ரயிலில் இடம் கிடைக்காமல் அவஸ்தைப்படும் காலம் அல்லவா இது? நான்கைந்து குழந்தைகள் ஏராளமான மூட்டை முடிச்சுகள் சகிதம் ஒரு கம்பார்ட்மெண்டில் ஒரு பெண்மணி உட்கார்ந்து கொண்டாள். அங்கே புதிதாய் வேறு யாரும் வராமல் இருப்பதற்காகவும், உள்ளே நிறைய ஆட்கள் இருப்பதாக வெளியே தெரிவதற்காகவும், அவள் தன்னுடைய குழந்தைகளை ஜன்னலருகே ஒருவர் பின் ஒருவராக நிறுத்தி வைத்தாள். இவ்வளவு முன்னெச்சரிக்கையாய் இருந்தும், அவள் யுக்தி பலிக்கவில்லை. கந்தல் உடை யணிந்த ஒரு மனிதன் வந்து உள்ளே புகுந்து விட்டான்.

அவளுக்கு எரிச்சலாய் இருந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில் அவனைப் பார்த்து, தனக்குள் தந்திரமாய், "என் குழந்தைகளுக்குக் கொஞ்சம் சொறி சிரங்கு. இங்கே இருப்பதில் உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே!" என்றாள்.

"பாதகம் இல்லை, அம்மா! அதனாலென்ன? எனக்கும் உடம்பு முழுவதும் சிரங்கு தான்" என்றான் அவன்.

அந்தப் பெண்ணின் நிலைமை இப்போது மிகவும் சங்கடமாயிற்று.

"ஒரு குழந்தைக்கு க்ஷயரோகம். அடிக்கடி இருமிக் கொண்டேயிருக்கும். உங்களுக்கு ஆட்சேபமில்லையே?" என்றாள்.

அவனோ அலட்சியமாக, "அம்மா, உங்கள் குழந்தைகளுக்கு என்ன நோயாயிருந்தாலும் பாதகமில்லை. அடுத்த ஸ்டேஷனுக்குப் போவதற்குள் நான் வண்டியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். அதற்காகத் தான், இந்த வண்டியில் ஏறியிருக்கிறேன்" என்றான்.

டோங்ரே

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டாஷிக்
பற்கள் வளர
உதவி செய்கிறது

BOOKS

Harindranath Chattopadhyaya

FIVE PLAYS	1--8-0
STRANGE JOURNEY	2--8-0

Manjeri S. Isvaran

ANGRY DUST (Stories)	2--0-0

V. Swaminatha Sarma

ESSENTIALS OF GANDHISM	0-12-0

S. Gopal & V. Abdulla

TALK FOR FOOD	0-10-0

V. Rm. Chettiar

LYRIC FESTOONS	1--0-0

SHAKTI KARYALAYAM

MADRAS :: MADURA

உங்களுக்கு எது வேண்டும்?

உணவு,



துணி மணிகள்,

விறகு

வேண்டுமா?

அல்லது ரயில் பிரயாணமா?

இரண்டும் கிடைக்காது. இந்தியா பூராவுக்கும் தேவையான பொருள்களை தங்கு தடையின்றி ஏற்றிவர ரயில்வேக்கள் உத்திரவாதமளிக்க முடியாது; கூடவே கணக்கற்ற பிரயாணிகளுக்கு இடவசதியளிப்பதும் சாத்தியமில்லை. போதுமான என்ஜின்கள், வண்டிகள், வாகின்கள் கிடையா.

இந்த நிலைமையில் ரயில்வேயின் கடமை என்ன என்பதில் சந்தேகமே வேண்டாம். உணவுப் பொருள், துணிமணிகள், விறகு இவற்றிற்குத்தான் முதற் சலுகை. அவை மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவை. அவைகளில்லாவிடில் மக்கள் மடியவேண்டியதுதான்.

ஆகையால்தான் பிரயாணி வண்டிகளில் இவ்வளவு கூட்டம். நெருக்கடி அதுவே சார்ஜுகள் அதிகரிப்புக்கும் காரணம். ஆகையால் நீங்கள் வீட்டைவிட்டு வெளியூருக்குக் கிளம்பக்கூடாது. அப்படி இருந்தால்தான் உங்களுக்கு வேண்டிய பொருள்களை கஷ்டமின்றிப்பெற வசதியேற்படும்.

பிரயாணத்தைக் குறையுங்கள்.

RAA 681 TM

ஆசார்ய ரே

வெ. சாமிநாத சர்மா

பிரபுல்ல சந்திர ரே, 1861-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இரண்டாந் தேதி, தற்போது குல்னு ஜில்லாவிலுள்ள ராருலி (Raruli) என்ற கிராமத்தில் பிறந்தார். இவருடைய குடும்பம், ஒரு பணக்காரக் குடும்பம் என்று தான் சொல்ல வேண்டும்.

பிரபுல்லருடைய பாட்டனார் ஆனந்தலால் ரே என்பவர், ஜெஸ்ஸூர் கோர்ட்டில் சிரஸ்தாராயிருந்தார். நிறையச் சம்பாதித்து, பூஸ்திதிகள் பல வாங்கியிருந்தார். இவருக்கு ஒரே பிள்ளை. அவர் தான் பிரபுல்லருடைய தகப்பனார். 1826-ஆம் வருஷத்தில் பிறந்த இவருக்கு ஆங்கிலத்தில் நல்ல ஞானம் இருந்தது. தவிர, வங்காளி மொழியிலும் பாண்டித்தியம் உடையவராக இருந்தார். அந்தக் காலத்தில் வெளியான பல பத்திரிகைகளுக்குச் சந்தாதாராக இருந்து ஆதரவு அளித்து வந்தார். இவருக்குப் பிதிரார்ஜித சொத்தும் ஆங்கிலக் கல்வியும் சேர்ந்து இருந்ததனால், கொஞ்சம் ஆடம்பரமாக வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். கிராமத்தினின்று அடிக்கடி கல்கத்தாவுக்கு வந்து போனார். பெரிய மனிதர்களுடைய சிநேகம் கிடைத்தது. ஆனால், பணமும் கரைய ஆரம்பித்தது. இவருக்கு மூன்று குமாரர்கள் பிறந்தார்கள். இந்த மூவரில் கடைசி மகன் தான், பிரபுல்ல சந்திர ரே.

இவரும், இவருடைய இரண்டு சகோதரர்களும் இளமையில் தகப்பனாரிடத்தில் கல்வி பயின்றார்கள். பின்பு கிராமப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அளிக்கப் பட்ட கல்வியில் தகப்பனாருக்கு அவ்வளவு பிடித்தமில்லை. பொதுவாகவே, பிரபுல்லருடைய தகப்பனாருக்குக் கிராம வாழ்க்கையில் அவ்வளவு பிடித்தமில்லாதிருந்தது. ஆங்கிலக் கல்வி பயின்று, அப்பொழுது தான் அதன் சுவையைச் சுவைக்க ஆரம்பித்த அந்தக் காலத்தில், நகரத்திலே வாழ வேண்டுமென்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது சகஜந்தானே! அதற்குத் துணையாகப் பிள்ளைகளின் படிப்பு விஷயமும் சேர்ந்து கொண்டது. எனவே, 1870-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் தமது

‘பி. ஸி. ரே பற்பொடி,’ என்று பெருமையாய்ச் சொல்லுவோமே, அந்த ஆசார்ய ரே ஜூன் மாதம் 16-ஆம் தேதி காலமாகி விட்ட செய்தி, தேசத்தையே துக்கத்தில் ஆழ்த்தியது. ஆசார்ய ரே நவீன இந்தியாவின் பிரபல சயின்ஸ் நிபுணர்களில் ஒருவர்; தேசியத் தொழில்களை வளர்க்கப் பாடுபட்டவர்; தேசபக்தி மிகுந்தவர்; ஒழுக்க சீலர்; எளிய வாழ்க்கையினர். அவர் வரலாறு யாவரும் அறிந்துகொள்ள வேண்டியதாகும்.

குடும்பத்துடன் கல்கத்தாவில் வந்து குடியேறினர். பிள்ளைகளை 'ஹேர் ஸ்கூல்' என்று சொல்லப் பட்ட ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ப்பித்தார்.

பிரபுல்ல சந்திர ரே, நாட்டுப் புறத்திலிருந்து வந்த பிள்ளையானாலும், தகப்பனருடைய பயிற்சியின் காரணமாக அறிவில் அதிகமுற்போக்கடைந்திருந்தார். தவிர, பிரபுல்லருக்கு, இயற்கையிலேயே கூர்மையான அறிவும், மேலும் மேலும் படிக்க வேண்டுமென்ற ஆவலும் அதிகமாயிருந்தன. வகுப்பிலே சொல்லித்தரப் படுகிற பாடங்களைத் தவிர, மற்றப் பொது நூல்களையும் ஏராளமாக வாங்கிப் படிப்பார். இதே சமயத்தில் லத்தீன் பாஷையையும் தாமே கற்றுக் கொண்டார்.

பிரபுல்லர் தமது ஹை ஸ்கூல் படிப்பை முடித்துக் கொண்டு பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகரரால் நிருவகிக்கப் பட்ட 'மெட்ரோ பாலிடன் இன்ஸ்டிடியூஷன்' என்ற காலேஜுக்குப் போய்ச் சேர்ந்தார். காலேஜ் படிப்புக்கு இவர் கட்டிய மாதச் சம்பளம் மூன்று ரூபாய் தான். அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! இந்த 'மெட்ரோ பாலிடன் இன்ஸ்டிடியூஷனில்' தான் ஸ்ரீ சுரேந்திர நாத் பானர்ஜி ஆங்கில ஆசிரியராக இருந்தார். இவரது நாவன்மையிலும் இவர் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் முறையிலும் பிரபுல்லர் அதிகமாக ஈடுபட்டார். தவிர, ரஸாயன சாஸ்திரம் இந்தப் பள்ளிக்கூடத்தில் கட்டாய பாடமாக ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஸர் அலெக்ஸாண்டர் பெட்லர் என்பவர், ரஸாயன போதகாசிரியராக இருந்தார். இவருடைய போதனா சக்தியிலே பிரபுல்லர் அதிகமாக ஈடுபட்டு, இந்தச் சாஸ்திரத்தின் முதல் ருசியைக் கண்டார். தவிர, பிரெஞ்சு பாஷையையும் சமஸ்கிருத பாஷையையும் இந்தக் காலத்தில் கற்றுக் கொண்டார். இங்ஙனம் எப்.ஏ. படிப்பை முடித்துக் கொண்டு மேல் படிப்புக்கு இங்கிலாந்து செல்ல விரும்புவோரிடையே ஒரு போட்டிப் பரீட்சை நடந்தது. அதில் பிரபுல்லர் வெற்றி பெற்றார். எனவே, இங்கிலாந்துக்குப் பிரயாணமானார்.

பிரபுல்லர், இங்கிலாந்து மண்ணை மிதித்து, சுமார் ஒரு வார காலம் லண்டனில் தங்கி, அங்கிருந்த காட்சிகளையெல்லாம் பார்த்து விட்டு, நேரே எடின்பரோவுக்குப் போய் அங்குள்ள சர்வ கலாசாலையில் சேர்ந்து கொண்டார். விஞ்ஞானம், ரஸாயனம், பிராணிவர்க்க சாஸ்திரம் முதலியவைகளைத் தமக்குப் பாடங்களாக எடுத்துக் கொண்டார். பிறகு தாவர நூலையும் பயின்றார்.

இந்தச் சமயத்தில், இவருடைய வாழ்க்கையிலேயே ஒரு சின்னத்தை உண்டு பண்ணக்கூடிய சம்பவம் ஒன்று நடைபெற்றது. எடின்பரோ சர்வ கலாசாலையின் அத்தியட்சகராயிருந்த ஸர் ஸ்ட்ராபோர்ட் நார்த்கோட் என்பவர் 'இந்திய சிப்பாய்க் கலகத்துக்கு முன்னும் பின்னும்' என்கிற விஷயத்தைப் பற்றி நன்றாக எழுதுகிறவர்களுக்குச் சன்மானம் அளிக்கப்படுமென்று தெரிவித்திருந்தார். பிரபுல்லருக்கு, தாமும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. சிறு வயதிலிருந்தே, இவருக்குச் சரித்திரத்தில் அதிக உள்ளப் பற்று இருந்து கொண்டிருந்ததல்லவா?

அதனை வெளிக் கிளப்ப இதுதான் தகுந்த தருண மென்று இவர் கருதினர். தமது காலேஜ் படிப்புடன், இந்தக் கட்டுரை எழுதும் வேலையையும் ஒழுங்காகச்செய்து அனுப்பினர். கடைசியில் மற்றவர்களுடைய கட்டுரைகளுடன், இவருடையதும் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனை கர்த்தர்களா யிருந்தவர்கள் ஸர் வில்லியம் மூயிர் என்பவரும் அறிஞர் மாஸன் என்பவரு மாவார்கள். பரிசீலனையில், பிரபுல்லருக்குப் பரிசு கிடைக்கவில்லை. வேருெரு பார்சி மாணுக்கனுக்குக் கிடைத்தது. ஆனல், இவருடைய வியாசத்தின் மீது, பரிசீலனை கர்த்தர்கள் தங்கள் அபிப்பிராயத்தையும் எழுதி வைத்திருந்தார்கள். அதிலிருந்து ஒரு வாக்கியம் வருமாறு:

"மிகச் சிறந்த மற்ருெரு வியாசமாகிய இதில் பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றிய தூஷணைகள் நிரம்பியிருக்கின்றன."

தமக்குப் பரிசு கிடைக்கா விட்டாலும், பிரபுல்லர் இதனை அச்சிட்டு நண்பர்களுக்கு வழங்கினர். இதிலிருந்து சில வாக்கியங்களை எடுத்துக் காட்டுவது பொருத்தமா யிருக்கு மல்லவா?

"இந்தியாவின் தற்போதைய துக்ககரமான நிலைமைக்குக் காரணம், இங்கிலாந்து, அந்த ஏகாதிபத்தியத்தின் மீது கவனஞ் செலுத்தாம லிருப்பதே யாகும். இங்கிலாந்து, இந்தியா விஷயத்தில், தான் செய்ய வேண்டிய புனிதமான கடமைகளைச் செய்யத் தவறி விட்டது. இங்கிலாந்திலும் ஐர்லாந்திலும் உள்ள இளைஞர்களே! மனிதத் தன்மையும், தாராள மனப்பான்மையும் நிறைந்த கொள்கையை உங்களிடத்திலிருந்து தான் நாங்கள் எதிர்பார்க்கிருேம். அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உங்களுக்குச் சீக்கிரத்தில் கிடைக்கலாம். அப்பொழுது உங்கள் செல்வாக்கை, இந்தியா விஷயத்தில் உபயோகிக்கலாமல்லவா?"

இளமையிலிருந்தே, இவருக்குத் தேசத்தின் மீது ஆர்வம் இருந்த தென்பது இதிலிருந்து நன்கு விளங்குகிறது. அச்சிட்ட தம் கட்டுரைப் பிரதியை, பிரபல பத்திரிகைகளுக்கும் அநேக அறிஞர்களுக்கும் இவர் அனுப்பினர்.

இவர் எப்பொழுதுமே இந்திய உடை தரித்து வந்தார். இதனல் தம்மை எல்லாரும் உற்றுப் பார்த்து வந்ததாக இவர் கூறுகிருர்.

பரீட்சை நடந்தது. அதில் வெற்றிகரமாகத் தேறினர். டாக்டர் என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. ஆனல் இதனுடன் இவர் திருப்தியடையவில்லை. ரஸாயனத்தில் இன்னும் மேலே ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்டு, ஒரு வருஷம் அதிகமாக எடின்பரோவில் தங்க வேண்டு மென்று தீர்மானித்தார். இவருடைய திறமையைக் கண்டு எடின்பரோ சர்வ கலாசாலை அதிகாரிகள், இவருக்கு வருஷத்தில் 1500 ரூபாய் வரக்கூடிய உபகாரச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) கொடுத்தார்கள். அதை வைத்துக் கொண்டு இவர் மிகச் சிக்கனமாகக் காலட்சேபம் செய்ததோடு, ரஸாயனத் துறையில் நுண்ணிய ஆராய்ச்சிகள் பலவும் செய்து வந்தார். தவிர, ஓய்வு நாட்களில், ஸ்காத்லாந்து முழுவதும் காலால் நடந்து சென்று பார்த்தார். இதன் மூலமாக அந்த நாட்டு ஜனங்களின் பழக்க வழக்

களை நன்கு தெரிந்து கொண்டார்.

இப்படியாக ஒரு வருஷம் மேல் படிப்பை முடித்துக் கொண்டு, இந்தியாவில் உயர்தர உத்தியோகம் ஒன்று பெறுவதற்காக, லண்டனுக்கு வந்து வேண்டிய முயற்சிகள் செய்தார். பல பெரிய மனிதர்களைக் கண்டு பேசினர். பலன் ஒன்றும் உண்டாகவில்லை. இந்தியர்களுக்குக் கல்வி இலாகாவில் உயர்தர உத்தியோகங்கள் கிடைப்பது துர்லபம் என்கிற மாதிரி அதிகாரிகள் பேசினர்கள். இனி என்ன செய்வார் பிரபுல்லர்? எத்தனை நாள் இங்கிலாந்தில் வாசஞ் செய்து கொண்டிருக்க முடியும்? கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து விட்டது. இவர், யாருடைய உதவியை எதிர்பார்த்திருந்தாரோ அவர்—ஸர் சார்லஸ் பர்ணர்ட் என்பவர்—இவருக்குப் பண உதவி செய்வதாகக் கூறினர். இதையெல்லாம் ஏற்பாரா பிரபுல்லர்? பிறருடைய தயவிலே வாழக்கூடியவரா இவர்? கடைசியில், கையிலிருந்த பணத்தைக் கொண்டு டிக்கெட் பெற்று 1888-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இந்தியா வந்து சேர்ந்தார்.

கல்கத்தாத் துறைமுகம் வந்திறங்கியதும், இவர் கையில் ஒரு காசுகூட இல்லை. எனவே, கப்பல் அதிகாரியிடமிருந்து எட்டுரூபாய் கடன் வாங்கிக் கொண்டு தான், கப்பலை விட்டுக் கீழே இறங்க வேண்டியதாயிற்று. ஆறு வருஷமாக, இவர் வெளி நாட்டிலிருந்தபடியால், தமது தாய் நாட்டிலும், தம் குடும்பத்திலும் அநேக மாறுதல்களைக் கண்டார். முதலில் தம் தாயாரையும் சகோதரரையும் பார்த்து விட்டு, உடனே உத்தியோகத்திற்காக அலையலானர்.

சுமார் ஒரு வருஷ காலம் உத்தியோகமின்றி அலைந்து திரிந்தார். சீமைக்குப்போய்ப் படித்துவிட்டு வந்தாலென்ன? மற்றச் சாமர்த்தியங்களெல்லாம் இருந்தாலென்ன? இந்தியன் இந்தியன் தானே! வேலையில்லாமல் இவர் கல்கத்தாவில் தங்கியிருந்தபோது, பிரபல விஞ்ஞான சாஸ்திரியும், அப்பொழுது தான் அதிருஷ்டவசத்தால் கல்வி இலாகாவில் ஓர் உயர்தர உத்தியோகம் பெற்ற வருமான ஸர் ஜகதீஸ் சந்திர போஸின் ஆதரவில் பெரும்பாகம் இருந்தார். போஸின் பரிசோதனைச் சாலையில் இவரும் கலந்து தாவர வர்க்க சம்பந்தமாகச் சில ஆராய்ச்சிகளைச் செய்தார். கடைசியில், பிரசிடென்சி காலேஜில் மாதம் ரூ. 250 சம்பளத்தில் இவருக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. இது கிடைப்பது ப்ரஹ்மப் பிரயத்தனமாகி விட்டது. 1889-ஆம் வருஷம் ஜூலை மாதம் உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டார். தமக்கு உத்தியோகம் கிடைத்ததைப் பற்றி இவர் அதிகமாகச் சந்தோஷப் படவில்லை. ஆனல், தமக்கு மென்மேலும் ரஸாயன ஆராய்ச்சிகள் செய்து கொண்டு போகக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததே யென்று அதிக மகிழ்ச்சி கொண்டார்.

நாளா வட்டத்தில் போதகாசிரியத் தொழிலில் இவருக்கு அதிகமான திறமை ஏற்பட்டது. மாணுக்கர்களிடத்தில் அதிகமான செல்வாக்கும் பெற்றுர். பள்ளிக்கூட வேலையோடு மட்டும் இவர் திருப்தி யடையவில்லை. தனிப்பட்ட முறையில் சில ஆராய்ச்சிகளை நடத்தினர். உதாரணமாக, நமது தேசு போஷ

ணுக்கு அவசியமா யிருப்பது நெய். ஆனால், இந்த நெய்யில் எத்தனையோ விதமான கொழுப்பு வகைகள் சேர்க்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது. இவை என்னென்ன, இவற்றினால் வரும் தீங்குகள் முதலியவற்றைப்பற்றி பிரபுல்லர் ஆராய்ச்சி செய்து, தம் முடிவுகளை பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியிட்டார்.

தவிர, ஏற்கனவே, இவர் ப்ரஹ்ம சமாஜத்தில் ஈடுபட்டிருந்தார் அல்லவா? அந்த இயக்கத்தில் இப்பொழுது முக்கியப் பங்கெடுத்துக் கொண்டு, அடிக்கடி கூட்டங்களை நடத்தி வைத்தார். இதன் காரிய சபையில் முக்கியமான ஓர் அங்கத்தினராகவும் இருந்தார்.

1891 – 92-ஆம் வருஷங்களில், இவர் எண்ண மெல்லாம், படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடுகிற இளைஞர்கள் மீது சென்றது. சட்டம், வைத்தியம், ரஸாயனம், சமஸ்கிருதம் ஆகிய எந்த விஷயத்தை முக்கியப் பாடமாக எடுத்துக்கொண்டு படித்த போதிலும், எல்லாருடைய குறிக்கோளும் உத்தியோகமாகவே இருந்தது. இளைஞர்களுடைய அறிவும் திறனும், கேவலம் இந்த வயிற்றுப் பிழைப்போடு தான் நின்றுவிட வேண்டுமா என்று இவர் அடிக்கடி கேட்டு வந்தார்.

படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, அதன் மூலமாக தேசத்தின் கைத் தொழிலபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமென்று பிரபுல்லர் திட்டம் போட்டார். இது தான் பின்னால் 'வங்காள ரஸாயன வைத்தியத் தொழிற்சாலை' யாகப் பரிணமித்தது.

இந்த ஸ்தாபனம், இப்பொழுது மருந்து வகைகளையும், சோப்பு வகைகளையும், தைல வகைகளையும் உற்பத்தி செய்யும் இந்தியாவிலுள்ள முக்கிய ஸ்தாபனமாயிருக்கிறது. ஆனால் இதற்காக ஆதியில் பிரபுல்லர் எவ்வளவு கஷ்டப்பட்டார்? எவ்வளவு பணம் நஷ்டமடைந்தார்? உடல் துன்பம், மனக்கவலை, பணக்குறைவு, நண்பர்களின் பரிகாசம் முதலிய எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு, தம் லட்சியத்திலேயே இவர் கண்ணாயிருந்தார்.

நல்ல காரியத்திற்கு நாலாயிரம் இடையூறுகள் வருமல்லவா? முதலிலே, இந்த ரஸாயனத் தொழிற் சாலையிலே செய்யப்பட்ட சாமான்களை வாங்கி விற்பனை செய்ய வியாபாரிகள் மறுத்து விட்டார்கள். 'சுதேசிச் சாமான்களை யார் வாங்குவார்கள்?' என்று பரிகசித்தார்கள். மெதுவாகத்தான், நண்பர்கள் மூலமாகவும், தரகர்கள் மூலமாகவும், தம் சாமான்களை மார்க்கெட்டுக்குள் இவர் நுழைக்க வேண்டியதாயிற்று. இந்தச் சுதேசிப் பொருள்களும், விதேசிப் பொருள்களைப் போல் நன்றாயிருக்கின்றன என்று வியாபாரிகள் உணரத் தலைப் பட்டார்கள்.

ஒரு சில நூறு ரூபாய்கள் மூலதனத்தைக்கொண்டு ஆரம்பிக்கப் பெற்ற இந்த ஸ்தாபனம், இப்பொழுது சுமார் அரைக்கோடி ரூபாய் மூலதனத்தோடு கூடியிருக்கிறது. சுமார் இரண்டாயிரம் பேருக்கு அதிகமாக இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். இந்த ஸ்தாபனத்தினால் தயாரிக்கப்படும் பொருள்கள் இந்தியா எங்கும் உபயோகிக்கப் படுகின்றன.

1901-ஆம் வருஷத்தில் கோகலேயைப் பிரபுல்லர் அறிமுகம்

செய்து கொண்டார். கோகலே அப்பொழுது கல்கத்தாவுக்கு வந்திருந்தார். டாக்டர் ஸர் நீலரத்ன சர்க்கார் தான், இவரை முதன் முதலில் கோகலேக்கு அறிமுகம் செய்து வைத்தார். அது முதல், 1915-ஆம் வருஷம் வரை - அது தான் கோகலே இறந்துபோன வருஷம் - இருவரும் நெருங்கிய உரிமை கொண்டு பழகி வந்தார்கள். கோகலே, கல்கத்தாவில் தங்கியிருக்கிற சமயங்களில் அடிக்கடி, பிரபுல்லருடைய வீட்டுக்கு வந்து பல விஷயங்களைப் பற்றியும் உரையாடிவிட்டுச் செல்வார். பிரபுல்லரை, 'விஞ்ஞான சந்நியாசி' என்று வேடிக்கையாக அழைப்பார் கோகலே.

இதே சமயத்தில் – 1901-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில்– மகாத்மா காந்தி – அப்பொழுது இவருக்கு மகாத்மா என்ற பெயரில்லை - கல்கத்தாவுக்கு வந்து, கோகலேயின் விருந்தினராகத் தங்கியிருந்தார். இவர், அப்பொழுது, தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்காகப் பாடுபட்டு விட்டு, அவர்களுடைய குறைகளை இந்தியாவெங்கும் எடுத்துச் சொல்லிப் பிரசாரஞ் செய்யத் தாய் நாடு திரும்பி வந்திருந்தார்.

"காந்தியை முதன் முதலாகப் பார்த்ததும் அவருடைய வசீகர சக்தியினால் நான் இழுக்கப்பட்டு விட்டேன். தவிர, துறவு நிலையில் நாங்கள் இருவரும் ஒன்றாகவே இருந்தோம். அவரிடத்தில் நான் கொண்டிருந்த பக்தியானது, நாளுக்கு நாள், அவரோடு பழகப் பழக விருத்தியடைந்து வந்தது" என்று பிரபுல்லர் தமது சுய சரிதத்தில் கூறுகிறார்.

மேனாடுகளில், விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெறும் பரிசோதனைச் சாலைகளை நேரில் சென்று பார்த்து விட்டு வர பிரபுல்லர், 1904-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். சில பரிசோதனைச் சாலைகளுக்குச் சென்று பார்த்தார். சில அறிஞர்களின் கீழே சில மாத காலம் பயிற்சியும் பெற்றார். அறிஞர்கள், எப்பொழுதும் கற்றுக் கொள்வதிலே தான் ஆவலுடையவர்களாக இருப்பார்கள். விஞ்ஞானத் துறையில் தங்கள் வாழ்க்கையனைத்தையும் அர்ப்பணஞ் செய்து விட்ட பல அறிஞர்களோடு பிரபுல்லர் நட்புக் கொண்டார். ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளையெல்லாம் சுற்றிப் பார்த்தார்.

மேனாட்டுக்குச் சென்று வந்த பிறகு, இவர் ஆசிரியராயிருந்த பிரசிடென்சி காலேஜில் இவருடைய புகழ் இன்னும் அதிகமாகப் பிரதிபலிக்கத் தொடங்கியது. இவரிடத்தில் பல மாணாக்கர்கள் வந்து கூடி ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினார்கள். இவர்களின் அரிய ஆராய்ச்சி காரணமாக, பிரபுல்லரின் புகழ் மேனாடுகளில் எதிரொலி செய்ய ஆரம்பித்தது.

1912-ஆம் வருஷம், லண்டனில் ஏகாதிபத்திய சர்வகலாசாலைகளின் மகாநாடு கூடியது. அதற்குப் பிரபுல்லரும், தேவப் பிரசாத் சர்வாதிகாரி என்பவரும் கல்கத்தா சர்வகலாசாலையின் பிரதிநிதிகளாகச் சென்றார்கள். இந்த மகா நாட்டில் பிரபுல்லருடைய திறமையை வியந்து பல அறிஞர்கள் பேசினார்கள்.

பின்னர், இவர் தாய்நாடு திரும்பி வந்து சில காலம் காலேஜில் வேலை பார்த்து விட்டு, உபகாரச் சம்பளத்துடன் விலகிக் கொண்டார். சுமார் 25 வருஷ காலத்

துக்கு மேலாக இங்கே ஊழியம் புரிந்தார். இவருக்குப் பிரிவு உபசாரக் கூட்டம் நடத்தியபோது, மாணுக்கர்கள் கண்ணீர் சொரிந்து விட்டார்கள்.

ஐரோப்பிய மகா யுத்தம் நடந்து ஒருவாறாக முடிவுற்றது. இந்தியாவில் சுயராஜ்யக் கிளர்ச்சி வலுத்தது. அரசாங்கத்தார், ரௌலட் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இதனைக் கண்டிக்க, மகாத்மா காந்தி சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தினார். 1919-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் பஞ்சாபில் படுகொலைகள் நடைபெற்றன. தேச மக்களின் மனம் கொதித்தெழுந்தது. இது காறும் அரசியலில் கலவாமல் ஒதுங்கியிருந்த ரவீந்திர நாத் டாகூர் போன்றார் கூட, உறுமியெழுந்தனர். பிரபுல்லர் சும்மா இருக்கமுடியுமா? சத்தியாக்கிரக இயக்கத்தைத்தொடர்ந்துஎழுந்த ஒத்துழையா இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டார். ஆரம்பத்தில் இவர் கதர் இயக்கத்தை எதிர்த்தாராயினும், பின்னர் அதன் பொருளாதார நுட்பத்தை அறிந்து அதில் ஈடுபட்டார். கதர்ப் பிரசாரத்தை முன்னிட்டு நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

ஒத்துழையாமைக் காலத்தில் இவர், மற்ற அரசியல் தலைவர்களைப் போலவே, தேசம் நடத்தி வந்த மகத்தான போராட்டத்திலே ஓர் இளைஞனுக்குரிய உற்சாகத்துடன் கலந்துகொண்டார். அப்பொழுது இவருக்கு வயது ஏறக்குறைய அறுபதானாலும், விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு இயற்கையாய் அமைந்துள்ள தனிமைக் குணத்தை விட்டு விட்டு, மேடைகளின் மீதேறிப் பிரசங்கங்கள் செய்த காட்சி இப்பொழுதும் நம் கண் முன் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஒத்துழையாமைக் காலத்தில் அரசாங்கத்தார் அநுஷ்டித்து வந்த அடக்கு முறைகளில் தாம் கொண்ட வெறுப்பைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு, தமக்கு அளிக்கப் பட்டிருந்த 'சி.ஐ.இ.' 'ஸர்' முதலிய பட்டங்களையும் இவர், துறந்தார்.

இது தவிர, 1922-ஆம் வருஷம் வங்காள மாகாணத்தில் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது. அதனால் ஏராளமான பொருள் நஷ்டமும் உயிர் நஷ்டமும் உண்டாயின. பிரபுல்லர் இந்தச் சமயத்தில் செய்த கஷ்ட நிவாரண வேலைகள் அபரிமிதம். இங்ஙனம் பல பொதுநலத் தொண்டுகளில் இவர் தம்மை அப்படியே ஒப்புக் கொடுத்தார்.

ஆடம்பரமென்பது இவருக்குக் கொஞ்சங்கூடத் தெரியாது. முழங்கால் மறையக் கூடிய மாதிரியாக இடுப்பிலே வேஷ்டி. உள்ளே ஷர்ட் இல்லாமல் மேலே ஒரு கோட் மட்டும். அந்தக் கோட்டுக்கு எல்லாப் பொத்தான்களும் இராது. மேலே ஓர் அங்கவஸ்திரம். எல்லாம் கதரில் தான். இதுவே இவருடைய சாதாரண உடுப்பாயிருந்தது. எந்தப் பெரிய சபைக்குச் சென்ற போதிலும் கூட, அதற்காக விசேஷமான உடைகளைத் தரித்துக்கொண்டு செல்ல மாட்டார்.

உடையிலே தான் இவர் இப்படி ஆடம்பரமற்ற நிலையில் இருப்பார் என்றால், உணவு வகைகளிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் இதே மாதிரி தான். ஜீரண சக்திக் குறைவினாலும் தூக்கமின்மை என்கிற வியாதியினாலும் இவர் நீண்ட காலம் பீடிக்கப் பட்டு வந்தமையால் இவர்

குறைவான ஆகாரமே உட்கொண்டு வந்தாரேயாயினும், அந்த ஆகாரமும் மிக எளியதாகவே இருந்தது. தினம் இரண்டு அணுவுக்கு மேல் தமக்குச் செலவில்லை யென்று இவர் கூறுவார். தவிர, வண்ணான் செலவு அம்பட்டன் செலவும் இவருக்கு இல்லை. ஏனென்றால், இவருடைய துணிகளை இவரே தோய்த்துக் கொள்வார். தாடி மீசை வளர்த்துக் கொண்டிருந்தபடியால், மற்றச் செலவுக்கும் வழியில்லை யல்லவா?

பிரபுல்லர், விசால திருஷ்டி படைத்தவர். ஜாதி வித்தியாசம், நிறவேற்றுமை முதலியவைகளெல்லாம் இவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை. இந்தியா, தற்போதைய சீர்கேடான நிலைமைக்கு வந்ததற்கு இந்தச் சமூகப் பாகுபாடுதான் காரணமென்பது இவருடைய உறுதியான அபிப்பிராயம்.

தவிர, இவர் மிகவும் இரக்க சிந்தையுடையவர். ஏழை எளியவர்கள் எங்கெங்கே கஷ்டப்படுகிறார்களோ அங்கங்கே இவர், தமது தகுதி, அந்தஸ்து முதலிய ஒன்றையுமே கவனியாமல் போய் உதவி செய்யத் தொடங்குவார். ஏழைப் பிள்ளைகளின் படிப்புக்கென்று, இவர் அதிகப் பண உதவி செய்திருக்கிறார். தம் சௌகரியங்களையும், செலவுகளையும் சுருக்கிக் கொண்டு, மற்றவர்களுக்கு உபயோகப்படுமாறு தம் பணத்தைச் செலவழிப்பார். இவர், தம் சம்பாத்தியத்திலிருந்து ஒரு பெருந் தொகையை மீத்துக் கல்கத்தா சர்வகலாசாலைக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

பிரபுல்லர் ஒரு நைஷ்டிக ப்ரஹ்மசாரி. மண வாழ்க்கையில் ஈடுபடாதவர். இவரை ஓர் உண்மைச் சந்நியாசி என்று கூசாது கூறலாம். மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியில் தாம் ஈடுபட்டதற்கு, தம்முடைய இந்தத் துறவு மனப்பான்மை தான் காரணம் என்று இவர் கூறுகிறாரல்லவா?

பிரபுல்லருடைய வாழ்க்கை எளியது; தூய்மையானது; எனவே இனியது.

✲

ரசீதின் அவசியம்

குடித்து விட்டுத் தெருவில் அலைந்ததற்காக ஓர் அமெரிக்கனுக்கு அபராதம் விதித்தார்கள். அவன் கோர்ட்டில் அபராதத்தைச் செலுத்திவிட்டு, செலுத்திய பணத்துக்கு ரசீது கேட்டான். நீதிபதி மறுத்து விட்டார்.

குடிகாரன் நீதிபதியை நோக்கி, "செத்ததற்குப் பிறகு நம்முடைய பாவ புண்ணியங்களைக் கடவுள் விசாரிப்பார் என்பதை நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

"ஆம்" என்றார் நீதிபதி.

"நல்லது! சொர்க்கத்தில் கடவுள் என்னைப் பார்த்து, 'மகனே, நீ பூலோகத்தில் குடித்துவிட்டு அலைந்தாயா?' என்று கேட்பார். நான் 'ஆம், அதற்காகக் கோர்ட்டில் அபராதமும் கட்டினேன்' என்று சொல்லுவேன். அவர் 'ரசீதைக் காட்டு' என்பார். அப்போது, நரகத்துக்கு ஓடி வந்து உங்களைத் தேடிப் பிடிக்க எவ்வளவு நேரமாகும்! கடவுள் அதுவரையில் காத்துக் கொண்டிருப்பாரா?" என்றான்.

பெரிசும் சிறிசும்

யானை ரொம்பப் பெரிசு ;
    நானே மிகச் சிறிசு.
பூனை என்னைப் பார்த்து,
    தானும் இதே சொல்லும்.

மல்லிகையின் பூவே
    வண்டுறங்கும் மாளிகை ;
நல்ல பெரும் வீடு
    நான் வசிக்கத் தேவை.

வானத்திலே ஜொலிக்கும்
    வண்ணமான மீன்கள்,
காணச் சிறிதாயினும்,
    கண்டறியாப் பாரம்.

பெரிசு சிறிசாகும் ;
    சிறிசு பெரிசாகும்.
வரிசை மாற்றினாலே,
    வாதம் ஏது நமக்குள் ?

—தஞ்சன்



பாலர் கதை:

தண்டராஜா

நீலா

சின்னான் என்று ஒரு பையன் இருந்தான். அவன் ஒரு தச்சனிடம் கூலி வேலைக்கு அமர்ந்தான். சின்னான் ஒரு வருஷம் அவனுக்குக் கீழே வேலை செய்தான். பையன் ரொம்பப் பணிவு, நாணயம், புத்திசாலித்தனம் இவைகள் நிறைந்திருந்தான். தச்சனுக்கு இவனிடம் மிகவும் சந்தோஷம் வந்தது.

"உன் குணத்தை மெச்சுகிறேன். நீ இனிமேல் கூலி வேலையே செய்ய வேண்டாம். உனக்கு நான் ஓர் அபூர்வ மேஜை இனாம் தருகிறேன். பரிமாறு என்று அதனிடம் சொன்னால் போதும். உடனே மேஜை மேல் பலவிதப் பலகார பட்சணங்களும் பரமான்னங்களும் வந்து நிறைந்துவிடும்" என்று சொல்லி, அப்படியே ஒரு மேஜையைப் பையனுக்குத் தச்சன் கொடுத்தான்.

மேஜையை முதுகிலே தூக்கிக் கொண்டு, பையன் தன் ஊருக்குப் புறப்பட்டான், வழியிலே அஸ்தமித்துவிட்டதால், ஒரு சத்திரத்தில் போய்த் தங்கினான்.

"சாப்பாடு வேண்டாமா, பையா?" என்று, சத்திரத்துக் கணக்குப் பிள்ளை, இவனைக் கேட்டான்.

"வேண்டாம். உமக்கும் நானே சாப்பாடு போடுகிறேன்" என்றான் சின்னான்.

பின்பு, மேஜையை எதிரே வைத்தான். "பரிமாறு" என்று கூவினான். உடனே மேஜையிலே அருமையான



உண்டிவகைகள் ஜிலு ஜிலு என்று வந்து நிறைந்தன. சத்திரத்துக் கணக்குப்பிள்ளை பிரமித்துப் போய்விட்டான்.

இருவரும் சாப்பிட்டார்கள். பையன் ஓர் அறையில், தன் மேஜையை வைத்தான். அதன் பக்கத்திலே தானும் படுத்தான். நன்றாய்த் தூங்கிவிட்டான்.

சத்திரத்துக் கணக்குப் பிள்ளைக்கு, ஒரு கெட்ட எண்ணம் தோன்றியது. பாதி ராத்திரியிலே, சின்னானின் அறைக்குள் நுழைந்தான். சந்தடி செய்யாமல் அந்த அபூர்வ மேஜையை அப்பால் கொண்டு போனான். அதற்

குப் பதிலாக, அதே மாதிரி சாதாரண மேஜை ஒன்றைக் கொண்டுவந்து அங்கே போட்டு விட்டான்.

தூக்கத்தில் இருந்த சின்னானுக்கு, இந்தச் சூது தெரியவில்லை. காலையிலே எழுந்தான். அந்தச் சாதாரண மேஜையை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

வழியிலே உச்சிப்போது வந்தது. சின்னானுக்குப் பசி எடுத்தது. ஒரு மரத்தடியில் மேஜையைப் போட்டான். "பரிமாறு" என்று உத்தரவிட்டான். மேஜைமேல் ஒன்றும் வரவில்லை. "பரிமாறு! பரிமாறு!" என்று கத்தினான். அந்த மந்திர மேஜையாய் இருந்தால் அல்லவா உணவு வரும்? இது வெறும் மேஜைதானே! மேஜை காலியாகவே கிடந்தது. தன்னை அந்தச் சத்திரத்துக் கணக்குப் பிள்ளை ஏமாற்றி விட்டான் என்று சின்னானுக்குத் தெரிந்தது. ஆனாலும், அவனிடம் போய் எப்படிக் கேட்பது? சின்னானுக்குத் துணிவில்லை. போனால் போகிறது என்று நினைத்து, மேஜையை அங்கேயே போட்டான். பக்கத்து ஊருக்குள் நுழைந்தான்.

அந்த ஊரில் ஒரு குதிரை லாயத்தில் வேலைக்கு அமர்ந்தான். லாய முதலாளிக்கு இவனிடம் ரொம்பப் பிரியம் விழுந்தது. ஒரு வருஷம் கழிந்தது.

"உன் குணத்தை மெச்சுகிறேன். உனக்கு நான் ஓர் அபூர்வக் கழுதையை இனம் கொடுக்கிறேன். உனக்குப் பணம் தேவையான போது, கழுதையின் காதைப் பிடித்து இழு. தங்கக் காசும் வெள்ளிக் காசுமாய், அது கக்கும்" என்று சொல்லி, சின்னானுக்கு, லாய முதலாளி ஒரு கழுதை பரிசளித்தான்.

கழுதையை ஓட்டிக் கொண்டு, சின்னான் பழைய சத்திரத்துக்கே போய்ச் சேர்ந்தான். கழுதையை லாயத்தில் கட்டினான்.

"இந்தக் கழுதைக்குக் கொஞ்சம் புல் வேண்டும்" என்று சத்திரத்துக் கணக்குப்பிள்ளையிடம் சொன்னான்.

"பணம் கொடு" என்றான் கணக்குப் பிள்ளை.

"இதோ தருகிறேன்" என்றான் சின்னான். கழுதையின் காதைத் திருகினான். கலகல என்று தங்கக் காசும் வெள்ளிக் காசுமாய், கழுதையின் வாயிலிருந்து சொரிந்தது. கணக்குப்பிள்ளை ஆச்சரியமடைந்தான். கொஞ்சம் காசு வாங்கிக்கொண்டு, கழுதைக்கு ஒரு புல்லுக் கட்டுக் கொடுத்தான்.



அன்று ராத்திரியும் சின்னான் நன்றாகத் தூங்கிவிட்

டான். பாதி ராத்திரியில், கணக்குப் பிள்ளை லாயத்துக்குள் போனான். இந்த அதிசயக் கழுதையை அவிழ்த்துக் கொண்டான். பார்வைக்கு இதே போல் இருந்த ஒரு சாதாரணக் கழுதையை இதன் இடத்தில் கட்டிவிட்டான். இதெல்லாம் சின்னனுக்குத் தெரியாது.

மறுநாள் காலையில் அவன் புறப்பட்டான். வழியிலே, ஏதோ சாமான் வாங்க விரும்பினான். அதற்குக் காசு போதவில்லை. கழுதையின் காதைப் பிடித்து இழுத்தான். இதுதான் அதிசயக் கழுதை இல்லையே; சாதாரணக் கழுதைதானே? பணம் ஒன்றும் கக்கவில்லை. மறுபடியும் தன்னை அந்தச் சத்திரக் கணக்கன் ஏமாற்றி விட்டான் என்று சின்னனுக்குத் தெரிந்தது. என்றாலும், என்ன செய்வது? இதுவும் போகட்டும் என்று நினைத்து, கழுதையை வழியிலேயே விட்டுவிட்டு, அடுத்த ஊரில் புகுந்தான்.

அங்கே, ஒரு மரக்கடையில் வேலைக்கு அமர்ந்தான். மரக்கடை முதலாளிக்கும் இவனிடம் மிகவும் திருப்தி ஏற்பட்டது. ஒரு வருஷம் ஆயிற்று.

"உன் குணத்தை மெச்சுகிறேன். நான் உனக்கு ஒரு சுக்குமாந்தடி இனாம் தருகிறேன். 'தண்டராஜா, போடு பூசை' என்று நீ சொன்னால் போதும். உடனே அது உன் சத்துருவை நொக்கு நொக்கென்று புடைத்துவிடும். நீ நிறுத்தச் சொன்னால்தான் நிறுத்தும்" என்று சொல்லி, சின்னனுக்கு ஒரு சுக்குமாந்தடியை, மரக்கடை முதலாளி பரிசு அளித்தான்.

அந்தத் தடியை எடுத்துக் கொண்டு, பழைய சத்திரத்துக்கே சின்னன் மறுபடியும் போய்ச் சேர்ந்தான்.

சத்திரத்துக் கணக்குப் பிள்ளை, இந்தத் தடியைப் பார்த்ததுமே, இதுவும் ஏதாவது ஆச்சரியமாய்த் தான் இருக்கும் என்று எண்ணினான். ஆனாலும், அதைப் பற்றிய ரகஸ்யத்தை அவனால் அறிய முடியவில்லை. எப்படியிருந்தாலும், இதையும் ராத்திரி அமுக்கிவிடுவது என்று அவன் தீர்மானித்துக்கொண்டான்.

பாதி ராத்திரி ஆயிற்று. சிறுவனின் படுக்கையறையில், சத்திரக் கணக்கன், சந்தடி பண்ணாமல் திருடனைப்போல் நுழைந்தான். அன்று சின்னன் தூங்கவில்லை. ரொம்ப எச்சரிக்கையாய் விழித்துக் கொண்டிருந்தான். கணக்குப்பிள்ளை உள்ளே நுழைந்தானோ இல்லையோ, "தண்டராஜா, போடு பூசை!" என்று சின்னன் கத்தினான். உடனே அந்தச் சுக்குமாந்தடி, விர்ர்ர் என்று ராமபாணம் மாதிரி கிளம்பியது; சத்திரத்துக் கணக்குப்பிள்ளையின் மண்டையிலும் முதுகிலும், காதி

தி கொச்சின் டெக்ஸ்டைல்ஸ்

(கொச்சி சமஸ்தானத்தில் நிறுவப்பட்டது)

மானேஜிங் டைரக்டர்

ஆர். எம். அழகப்ப செட்டியார், எம். ஏ., பார். அட்-லா

ப்ரோப்ரைட்டர்கள் :

வெஸ்ட் கோஸ்ட் ஏஜன்சீஸ் லிமிடெட்
புதுக்காடு மில்ஸ் போஸ்ட்

29880 கதிர்கள்
சுற்றுகின்றன

●

சுதேசி நூல்கள் இங்கு தயாராகின்றன. நெ. 40 இஜிப்ஷியன் ஸ்பெஷல் நெ. 60, நெ. 80 போன்ற நைஸ் நூல்கள், வியாபாரிகளின் தேவைக்குத் தக்கபடி தயாரிக்கப்படுகின்றன

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

மிக்க முன்னேற்றமடையும் ஃலப் ஆபீஸ் இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்

1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின் புதிய பாலிசிகள் ரூ. 5 கோடிக்கதிகம்

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ...ரூ. 5,39,00,000

அமுலிலுள்ள மொத்தவியாபாரம்...ரூ. 24,82,00,000

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும்:—

மதராஸ் பிராஞ்சு:

**ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி,
லிமிடெட்,**

107, அரண்மனேக்காரத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

லும் மூக்கிலும், காலிலும் கையிலும் பட் பட் பட் பட் பட் பட பட் பட் என்று மொத்த வும் தொடங்கியது.

"ஐயோ! ஐயோ! வலி தாங்க வில்லையே. என்னை விட்டுவிடச் சொல்லேன். நீ என்ன சொன்னாலும் கேட்கி றேன். அப்பாடா! அம்மாடி!" என்று கத்திக் கதறினன் கணக்குப்பிள்ளை.

"எங்கே என் மேஜை? அதைக் கொண்டுவந்து தந் தால்தான், அடியை நிறுத்தச் சொல்லுவேன்" என்றான் சின்னன்.

"இதோ தருகிறேன்" என்று சொல்லி, ஓடிப்போய், அந்த அதிசய மேஜையைக் கொண்டுவந்தான் கணக்குப் பிள்ளை.

"எங்கே என் கழுதை?" என்று கேட்டான் சின்னன்.

"இதோ" என்று சொல்லி ஓடிப்போய், அந்த அதிசயக் கழுதையை ஓட்டிவந்தான் கணக்குப்பிள்ளை.

அதுவரையில் அவனை அடித்துக் கொண்டேயிருந் தது அந்தச் சுக்குமாந்தடி.

தன் மேஜையும் தன் கழு தையும் தன்னிடம் வந்து சேர்ந்துவிட்டதால், "தண்ட ராஜா, போதும் நிறுத்து" என்றான் சின்னன். அப்புறந் தான் சுக்குமாந்தடி ஓய்ந்தது.

அந்த அதிசய மேஜை, அபூர்வக் கழுதை, ஆச்சரியத் தடி மூன்றையும், சின்னன் தன் ஊருக்குக் கொண்டு போய்ச் சுகமாய் வாழ்ந்தான்.

✲

அம்பேத்கார் மிடுக்கு

பம்பாயில் ஒரு கல்லூரி மாணவர், டாக்டர் அம்பேத்காருக்கு பின் கண்டபடி டெலிபோன் செய்தார்:

"எங்கள் கல்லூரி இலக்கிய சங்கத்தில், கவி தாகூரைப் பற்றி இந்த வாரம் நீங்கள் பேசினல் நன்றாயிருக்கும்."

"அவரைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அவர் ஒரு பெரிய கவி என்பதாக மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவ்வளவு தான். அவரைப் பற்றிப் பேசுவதற்கு அவ்வளவு போதுமா?" என்று பதிலளித்தார் அம்பேத்கார்.

உண்மையாகவே, அம்பேத்காருக்குத் தாகூரைப் பற்றி ஒன்றுமே தெரி யாதா? தெரியும். நன்றாய்த் தெரிந்த அறிஞர்களுக்குள் அவரும் ஒருவர். பின் ஏன் அந்த மாதிரி சொன்னர்? அதுதான் அம்பேத்காரின் தந்திரம். இந்த மாதிரி முரட்டுத்தனமாய் மறுப்பதில்தான் கௌரவம் இருக்கிற தென்பது அவரது எண்ணம். "எனக்கு நேரம் இல்லை. மன்னியுங்கள்" என்று அவ்வளவு பணிவாய்ச் சொல்ல, அவருக்கு மனம் வரவே வராது.

புத்தக உலகம்

இருண்ட வீடு : ஆசிரியர்: பாரதி தாசன். வெளியிட்டோர் : முத்தமிழ் நிலையம், கோனாபட்டு, புதுக்கோட்டை. விலை ரூ. 1.

இன்று தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர் பாரதி தாசன். அரசியலிலும் சமூக இயலிலும், அவருடன் நாம் எத்தனையோ அபிப்பிராய வேற்றுமைகள் கொள்ளலாம்; கொள்கிறோம். ஆனால், அவருடைய கவிதா சக்தியின் மேதையை யாரும் மறுக்க முடியாது. 'குடும்ப விளக்கு' என்று அவர் ஏற்கெனவே புனைந்த அற்புதக் கவிச் சித்திரம் ஓர் அழகான குடும்ப வாழ்க்கையை வர்ணித்து நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதற்கு நேர்மாறான ஒருகுடும்பத்தை 'இருண்ட வீட்'டில் வர்ணிக்கிறார் கவிஞர். 'குடும்பவிளக்கில்' ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வரியுமே நடை இனிமையும் அழகுச் சுவையும் நிறைந்திருந்தது. 'இருண்ட வீட்'டில் கவிஞருக்கு இயல்பான நடைத் தளிவு இருக்கிறது; ஆனால், இனிமை அவ்வளவு இல்லை. என்றாலும், பிற்பகுதியில், நகைச்சுவை நிரம்பி யிருக்கிறது; நடையின் மிடுக்கையும் காண்கிறோம். 'இருண்டவீட்'டின் குடும்பத்தலைவி, வெறுக்கத் தக்கவள்தான்; ஆயினும், இத்தகைய ஒரு ஹாஸ்யச் சித்திரத்தில் அவள் கொலையுண்டது அவ்வளவாக ரசிக்க வில்லை. மற்றப்படி, இதுவும் ஒரு சுவையுள்ள காவியமேயாகும்.

கல்லின் வேட்கை : ஆசிரியர் : ரவீந்திர நாத் டாகுர். மொழி பெயர்ப்பு : த. நா. குமாரஸ்வாமி, த. நா. சேனாபதி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2.

இதில் கவி தாகுர் எழுதிய ஏழு சிறு கதைகளின் மொழிபெயர்ப்பு அடங்கியிருக்கிறது. அமானுஷிகமான கற்பனையோ, இறுதியில் திடுக்கிட வைக்கும் சம்பவங்களோ இல்லாமல், பிரத்யட்ச வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு கதையும் செல்லுகிறது. கல்லின் வேட்கை, மகிழமாலை, தபஸ்வினி மூன்றும் குறிப்பிடத்தக்க கதைகள். கல்லின் வேட்கையில், வசனம் காவியகதியில் அமைந்திருக்கிறது. தெளிவான இனிய மொழிபெயர்ப்பு.

புயலும் படகும் : ஆசிரியர் : வி. ஸ. காண்டேகர். மொழிபெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—8—0.

முதற்காதல் உண்மையான காதல் அல்ல. வாழ்க்கையை இன்ப மயமாக்கும் சாந்தமான காதல், வெறும் அழகால் உண்டாகாது. அதற்கு ஆற்றலும் நேர்மையும் வேண்டும். இந்தத் தத்துவத்தை ஆதாரமாக வைத்தே, ஸ்ரீ காண்டேகர் இந்த நாவலை எழுதியிருக்கிறார். உணர்ச்சிச் செறிவும் அழகிய கற்பனைகளும் நிறைந்திருக்கின்றன. அவருடைய மற்ற நாவல்களைப் போலவே, ஆரம்ப முதல் கடைசிவரை சுவாரஸ்யம் மிகுந்திருக்கிறது. வாழ்க்கையில் என்றோ ஒரு நாள் தோன்றிமறைந்த முதற்காதல், வெகு காலத்துக்குப் பின்னால் மறுபடியும் தோன்றும்போது, மனித வாழ்விலே எவ்வளவு குழப்பங்கள் உண்டாகின்றன என்பது நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. தெளிவும் சரளமுமான மொழிபெயர்ப்பு.

தமிழிசை முழக்கம் : ஆசிரியர் : ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர் : அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணா 9.

தமிழிசை தோன்றிய வரலாற்றையும் மற்ற தேசத்தார்கள் தங்கள் இசைக்கலையை எவ்வளவு உற்சாகமாக வளர்க்கிறார்கள் என்பதைப் பற்றியும் தமிழிசையை வளர்க்க என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் இதன் ஆசிரியர் கூறுகிறார்.

புத்தகங்கள்

நூர்ஜஹான் — உயர்தர நாடகம்

எழுதியவர் : துவிஜேந்திரலால் ராய்

தமிழாக்கியவர் : ப. கி. விஜயராகவன்

பாபு துவிஜேந்திரலால் ராய் என்ற வங்கக் கவி எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு. அவர் எழுதிய பல நாடகங்களுள் இதுவே மிகச் சிறந்ததென்று வங்காளிகள் கொண்டாடுகிறார்கள். இதில் நவரசங்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. விலை ரூபாய் இரண்டேகால்

புனர் ஜன்மம் — ஹாஸ்ய நாவல்

எழுதியவர் : "துமிலன்"

மாஜி பெரிய குடும்பத்தைச் சேர்ந்த சாம்பு தன் சகோதரி சந்திராவுக்கு எதிர் ஜாமீன் கொடுக்கும் வரன் தேவை என்று விளம்பரம் செய்கிறான். அந்த விளம்பரத்தைப் பார்த்த தியாகராஜன் என்ற வாலிபன் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்துச் சந்திராவை விவாகஞ் செய்து கொள்ள மனுப் போடுகிறான். ஆனால், விவாக தினத்தன்று மாப்பிள்ளை வந்தபோது மணப்பெண்ணைக் காணோம். பிறகு மாப்பிள்ளையையும் காணோம். மேலும் நடக்கும் எதிர்பாராத சிக்கலான விஷயங்களை ஆசிரியர் ஹாஸ்ய முறையில் சித்திரித்திருக்கிறார். விலை ரூபாய் மூன்று

இரண்டு புத்தகங்களுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்

புத்தக நிலையம்

தெப்பக்குளம் : : திருச்சினப்பள்ளி

பாப்பா

✲

குழந்தைகள் வாசிக்கத்தக்க கதைகள், கவிதைகள், நாடகங்கள், பெரியோர் வரலாறு, விடுகதைகள் முதலியன நிறைந்த பாலர் மலர். பல படங்கள் நிறைந்தது.

✲

வருட சந்தா ரூ. 4/8 -
தனிப் பிரதி அணா 6

✲

பாப்பா பத்திரிகாலயம்
ராயவரம்,
புதுக்கோட்டை சமஸ்தானம்.



கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் : **டி. எஸ். ஆர். & கோ**

கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் : **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**

திருவல்லிக்கேணி, மதராஸ்

பேபி பிராண்ட்

சுத்தமான நெய்

சாப்பாட்டிற்கும் பட்சணங் களுக்கும் இன்றியமையாதது

புதிய வெண்ணெயைக் கொண்டு நூதன சாதனங்களால் நவீன சாஸ்திர முறையில் கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டு பக்குவமாயும் பரிசுத்தமாயும் தயாரிக்கப்பட்டது, எல்லா இடங்களிலும், பிரபல வியாபாரிகளிடமும், கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் கிடைக்கும், எங்களிடம் 9 பவுண்ட் கொண்ட டின் வரவழைத்து ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

THIS IS OUR SPECIALITY
ROBMG
இதுவே எமது ஸ்பெஷல் ரகம்

குதூகல வைபவங்களுக்கும் பண்டிகைகளுக்கும்

எம் அபிமானம் கொண்ட வியாபாரிகளுக்கும் வாடிக்கைக்காரருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்தும் உரித்தாகுக

ராஜம் & கோ :: கோயமுத்தூர்

சிவாஜி

தையல் நூல்

☆

தைக்கவோ கிழிசலை
மூட்டவோ மிகச்
சிறந்த நூல்.

☆

இந்தியாவில் செய்வோர் :

ஆக்மி திரெட் கோ., லிமிடெட்,
பாங்க் ஆவ் பரோடா கட்டிடம்,
அப்பாலோ தெரு, பம்பாய்.

தமிழ்ச் சுடர் நிலையம்

புத்தக வெளியீட்டாளர்
சென்னை

☆
☆☆

இம்மாதம் வெளிவரும்
எமது முதல் புத்தகம்

'ஜெயில்'

— பலவகைக் கட்டுரைகள் —

ஆசிரியர் :
ப. ராமஸ்வாமி

☆
☆☆

கிடைக்குமிடம் :

கமலா பிரசுராலயம்

59, பிராட்வே : சென்னை

வெயில் அதிகமாகி வருகிறது

ஆனால், எரிச்சலைத் தடுக்கலாம்!

கோடைகாலத்திற்கு முன்பும் கோடைகாலத்தின் போதும் தினந்தோறும் கார்டில் பவுடரை உபயோகித்து வந்தால் நிச்சயமாக எரிச்சலைத் தடுக்கலாம். கார்டில் பவுடர் சென்ற முப்பது வருஷமாக ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது. இன்றும், எரிச்சலைத் தடுக்க அதுவே சிறந்த மருந்து. பவுடர் தூவுவதற்கு வசதியான மேல் மூடியுடன் கூடிய தகரத்தில் கிடைக்கிறது.

தினசரி கார்டில் உபயோகியுங்கள்
அது தலை சிறந்தது!

குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது

கார்டில் பவுடர் உபயோகித்தால் வேறொரு பவுடர் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் சுபாவமான வாசனை கலப்பற்ற அந்தப் பவுடரில் குழந்தையின் மெல்லிய தேகத்திற்கு எரிச்சல் தரும் பொருள் ஒன்றும் கிடையாது. குழந்தை பராமரிப்பில் கார்டில் பவுடர் தலை சிறந்தது. வெய்யில் கொடுமையையும் போக்கி சொர சொரப்பான சருமத்தை மழ மழப் பாக்குகிறது.

பெரிய சைஸ் டின் ரூ. 2

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

சென்னை

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS.

இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G

லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.


பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்
M.S.DORAI

வாழையடி வாழையாக வந்த பழக்கம்

இந்தியாவிலே இரண்டு பெரிய பாரம்பரிய சொத்துக்கள் உண்டு. ஒன்று கலை. மற்றொன்று அதிதி உபசாரம். இவ்விரண்டும் வாழ்வின் இன்பத்தோடு பின்னிக் கிடக்கின்றன. சோழர் காலத்து சிற்பங்களை நாம் பார்க்கும்பொழுது நமக்கு மனதில் எழும் ஒரு இன்ப உணர்ச்சி நாம் நமது நண்பர்களுக்கு தேயிலைப் பானம் கொடுக்கும்பொழுது உண்டாகிறது. அதிதி உபசாரத்துக்கு தேயிலைப் பானத்தைத் தவிர வேறு சிறந்தது எது? எந்த நேரத்தில் யார் வந்தாலும் நிமிஷத்தில் தயார் செய்யக் கூடியது அதுவே. உங்கள் பாரம்பரிய பழக்கத்தை மறக்கவேண்டாம். வீட்டுக்கு விரும்பி வந்தோரை தேயிலை கொடுத்து மனங்குளிரச் செய்யுங்கள்.

★

“நித்திய கர்மா” என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்துக்கு ஏற்ற ஒரே பானம்

இந்தியத் தேயிலை

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. I K 204

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan